## பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | திருக்குர்ஆனிலிருந்து | 2 |
| 3. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகள் | 3 |
| 4. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து | 4 |
| 5. | ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றுகளிலிருந்து.... | 5 |
| 6. | ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றுகளிலிருந்து.... | 5 |
| 7. | ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கூற்றுகளிலிருந்து.... | 6 |
| 8. | ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கூற்றுகளிலிருந்து.... | 6 |
| 9. | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் கூற்றுகளிலிருந்து.... | 7 |
| 10. | இலண்டனில் நடைபெற்ற 16 வது தேசிய அமைதிக் கருத்தரங்கில் ஹுஸூர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு | 9 |
| 11. | ஆங்கிலேய அரசாங்கத்துடன் வாளால் போர் செய்யதாததற்கான காரணங்கள் | 15 |
| 12. | திருக்குர்ஆனின் வசனங்களின் ஒளியில் ஜிஹாதின் உண்மை நிலை | 23 |
| 13. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின் ஒளியில் ஜிஹாத் என்பதின் உண்மை விளக்கம் | 27 |
| 14. | ஜிஹாத் பற்றிய தவறான கண்ணோட்டத்தின் தீய விளைவுகளும் அதற்கான தீர்வும் | 31 |


لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## அமைதியின் உலகளாவிய தூதுவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது – ஜிந்தாபாத்

பத்ர் பத்திரிகையின் இந்த சிறப்பிதழிற்காக நமது அன்பிற்குரிய கலீஃபா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் “ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவர்ன்மன்ட் அங்கரேஸி அவ்ர் ஜிஹாத் என்ற நூலின் ஒளியில் ஜிஹாதின் உண்மைத்துவம்” என்ற தலைப்பிற்கு ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். ஹுஸூர் அவர்கள் கடந்த ஆண்டைப் போன்றே இவ்வருடமும் தமது எல்லையற்ற பணிகளுக்கு இடையிலும் பத்ர் வாசகர்களுக்காக தமது அருளுக்குரிய கரங்களால் தூதுச் செய்தியை எழுதி அத்துடன் தமது ஒரு புகைப்படத்தையும் அனுப்பி வைத்துள்ளார்கள். இது நமக்கு மிகவும் ஊக்கத்தை அளிக்கும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். நாம் நமது அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களின் இந்த பரிவுக்காக நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இந்த துஆவை செய்கின்றோம்:

اَللّٰهُمَّ اَيِّدْ اِمَامَنَا بِرُوْحِ الْقُدُسِ وَبَارِكْ لَنَا فِيْ عُمْرِهٖ وَاَمْرِهٖ

நாம் மிகவும் நற்பேறு பெற்றவர்களாவோம். இந்த காலகட்டத்தின் இமாமும், வாக்களிக்கப்பட்ட மஸீஹுமான சய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். இந்த வெகுமதிக்கு எதிரில் உலகத்தின் மற்ற அனைத்து வெகுமதிகளும் ஒன்றுமற்றதாகும். இதன் விளைவாக அல்லாஹ் நமக்கு கிலாஃபத்தின் அருளையும் வழங்கியுள்ளான். அதன் மூலமாக உலகத்தில் ஒற்றுமையின் அழகிய காட்சியையும் அல்லாஹ் வெளிப்படுத்தியுள்ளான். எனவே இந்த அடிப்படையில் ஒரு கையின் சைகையால் எழக்கூடிய மற்றும் அமரக்கூடிய ஜமாஅத்தாக நாம் இருப்பது நமக்கு பெருமைக்குரிய ஒன்றாகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத் தற்போது முழு உலகிலும் ஜிஹாதே கபீரை அதாவது தப்லீக்கின் ஜிஹாதை செய்து வருகின்றது. இஸ்லாத்தின் அழகிய போதனைகளை உலகத்திற்கு முன்பாக எடுத்துக் கூறி வருகின்ற அதேநேரத்தில் இஸ்லாத்திலுள்ள ஜிஹாதைப் பற்றி எடுத்துக் கூறப்பட்டு வருகின்ற தவறாக கருத்தையும் தவறு என்று எடுத்துக் கூறி வருகின்றது. அதாவது, இஸ்லாம் முழு உலகிலும் தனது அன்பு மற்றும் அமைதியின் போதனைகள் மூலமாகவே பரவியது. அதுவன்றி வாளைக் கொண்டோ அல்லது வலுக்கட்டாயமாகவோ பரப்பப்படவில்லை என்பதை எடுத்துக் கூறி வருகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் இந்த விஷயத்தையும் குறிப்பிட விரும்புகின்றோம். அதாவது இஸ்லாத்தின் உண்மையான முகத்தை உலகத்திற்கு முன்பு காட்டுவது, அமைதியை ஏற்படுத்துவற்கு தொடர்ச்சியாக முயற்சி மற்றும் நடவடிக்கைகளை ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் முழு உலகிலும் செய்து வருகின்றார்கள். அன்னார் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக எண்ணற்ற சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்கள். இந்த சொற்பொழிவுகளில் அன்னார் உலகளாவிய அமைதியை நிலைநாட்டுவதற்காக வழியுறுத்தும் அதேவேளையில் திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய நடைமுறையின் மூலமாக, இஸ்லாம் உலகளாவிய அமைதியை விரும்பக்கூடிய மார்க்கமாக இருக்கின்றது; மேலும் தீவிரவாதத்துடன் இஸ்லாத்திற்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதையும் அன்னார் நிரூபித்துக் காட்டினார்கள்.

இஸ்லாத்தின் அழகிய முகத்தை உலகத்திற்கு முன்பு எடுத்துக் காட்டுவது மற்றும் ஜிஹாத் மற்றும் தீவிரவாதத்துடன் இஸ்லாத்தை தொடர்புபடுத்திக் கூறப்படுகின்ற அனைத்து குற்றச்சாட்டுகளையும் நீக்கியது ஆகிய விஷயங்களில் ஹுஸூர் அவர்கள் தனிச்சிறப்பை பெற்று திகழ்கின்றார்கள். ஹுஸூர் அவர்களின் தற்போதைய ஐரோப்பிய சுற்றுப் பயணத்திலும் (பிரான்ஸ், ஹாலாந்து, பெல்ஜியம்) 8 அக்டோபர் 2019 அன்று UNESCO வின் கட்டடத்தில் அன்னார் சொற்பொழிவாற்றினார்கள். அதில் அன்னார் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைத்தார்கள். இங்கு நான் இதனையும் கூற விரும்புகின்றேன். அதாவது UNESCO என்பது ஐநாவின் ஒரு அமைப்பாகும். அது கல்வி, அறிவியல், பண்பாடு போன்றவற்றை வளர்ப்பதற்காக நிறுவப்பட்டுள்ளது. அதன் பணிகளில் பத்திரிகை சுதந்திரம், வறுமை ஒழிப்பு போன்ற பணிகளும் அடங்கும்.

அதேபோன்று 22 அக்டோபர் 2019 அன்று அன்னார் ஜெர்மனியின் தலைநகரமான பெர்லினில் “இஸ்லாமும் ஐரோப்பாவும்” என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் 27 நாடாளுமன்ற உறுப்பினர்களும், வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் பிரதிநிதிகளும், பேராசிரியர்களும், பல்வேறு அரசாங்க துறையைச் சார்ந்த பிரதிநிதிகளும், மார்க்கத் தலைவர்களும், பத்திரிகை நிருபர்களும் கலந்து கொண்டனர். ஹுஸூர் அவர்களின் ஹாலாந்து வருகை தொடர்பாக ஹாலாந்தின் Ons Almere என்ற பத்திரிகை 25 செப்டம்பர் 2019 அன்று **“அமைதியின் கலீஃபா ஹாலந்து வருகை தந்துள்ளார்”** என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டது.

மேலும் இவ்வாறு செய்தி வெளியிட்டது: காலத்தின் கலீஃபா அவர்கள் முழு உலகத்திலும் உள்ள மனிதர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்றார்கள். மேலும் இறை அடியார்களுக்கு தொண்டாற்றி வருகின்றார்கள். அமைதி மற்றும் மார்க்க சகோதரத்துவத்தை பரப்பி வருகின்றார்கள். காலத்தின் கலீஃபா அவர்கள் உலகத்திலுள்ள மற்ற பாராளுமன்றங்கள் மட்டுமின்றி டெச் பாராளுமன்றத்திலும் சொற்பொழிவாற்றி உள்ளார்கள்.

(தொடர்ச்சி 14 வது பக்கம்...)

**உங்களுடன் போர் செய்வோருடன் நீங்களும் அல்லாஹ்வின் வழியில் போர் செய்யுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை**

(திருக்குர்ஆனிலிருந்து...)

**அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்வதற்கான கட்டளை**

۞ وَجَاهِدُوْا فِي اللّٰهِ حَقَّ جِهَادِهٖ

பொருள்: மேலும் நீங்கள் அல்லாஹ்வின் வழியில் முயலவேண்டிய முறையில் முழுமையாக முயலுங்கள். (22:79)

**ஜிஹாதின் உண்மைத்துவம்**

۞ وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ؕ وَاِنَّ اللّٰهَ لَمَعَ الْمُحْسِنِيْنَ

பொருள்: மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**ஜிஹாதின் வகைகள் (திருக்குர்ஆன் மூலமாக ஜிஹாது செய்தல்)**

۞ فَلَا تُطِعِ الْكٰفِرِيْنَ وَجَاهِدْهُمْ بِهٖ جِهَادًا كَبِيْرًا (25:53)

பொருள்: நீர் அவர்களைப் பின்பற்றாதீர். நீர் (குர்ஆனாகிய) இதனால் அவர்களுடன் பெரும் அறப்போர் நிகழ்த்துவீராக.

**செல்வத்தின் மூலமாக செய்யப்படுகின்ற ஜிஹாத்**

۞ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَهَاجَرُوْا وَجٰهَدُوْا بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَالَّذِيْنَ اٰوَوْا وَّنَصَرُوْۤا اُولٰٓئِكَ بَعْضُهُمْ اَوْلِيَآءُ بَعْضٍ

பெருள்: நம்பிக்கை கொண்டு, இடம் பெயர்ந்து சென்று தங்கள் பொருள்களாலும், உயிர்களாலும் அல்லாஹ்வின் வழியில் போர் செய்தவர்களும், (நாட்டைத் துறந்து வந்தவர்களுக்குத் தங்கள் வீடுகளில்) இடமளித்து (அவர்களுக்கு) உதவி செய்தவர்களுமாகிய இவர்களுள் சிலர் சிலருக்கு மிக நெருங்கிய நண்பர்களாவர். (8:73)

**மார்க்கத்தில் எவ்வித பலவந்தமுமில்லை**

۞ لَاۤ اِكْرَاهَ فِي الدِّيْنِ ۙ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ ۚ فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْۢ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى ۗ لَا انْفِصَامَ لَهَا ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ○

மார்க்கத்தில் எவ்விதக் கட்டாயமுமில்லை. (ஏனென்றால்) நிச்சயமாக நேர்வழிக்கும் தவறான வழிக்கும் இடையிலுள்ள வேறுபாடு, மிகத் தெளிவாகி விட்டது. எனவே நன்மையைச் செய்ய விடாது தடுக்கக் கூடியவனை நிராகரித்து, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறவர் அறுந்துவிடாத மிகவும் உறுதியுள்ள நம்பத்தகுந்த ஒன்றை வலுவாகப் பற்றிக் கொண்டார். அல்லாஹ் நன்கு செவியேற்பவனும் நன்று அறிபவனுமாவான். (2:257)

**எவர் விரும்புகிறாரோ அவர் நம்பிக்கை கெள்ளட்டும். எவர் விரும்புகிறாரோ அவர் நிராகரிக்கட்டும்**

۞ وَقُلِ الْحَقُّ مِنْ رَّبِّكُمْ ۫ فَمَنْ شَآءَ فَلْيُؤْمِنْ وَّمَنْ شَآءَ فَلْيَكْفُرْ

பொருள்: நீர் கூறுவீராக: இந்த உண்மை உங்கள் இறைவனிடமிருந்துள்ளதாகும். எனவே எவர் விரும்புகிறாரோ அவர் நம்பிக்கை கொள்ளட்டும். மேலும் எவர் விரும்புகிறாரோ அவர் நிராகரிக்கட்டும். (18:30)

**அல்லாஹ்வின் வழியில் போர் செய்யுங்கள். மேலும் வரம்பு மீறாதீர்கள்**

۞ وَقَاتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ يُقَاتِلُوْنَكُمْ وَلَا تَعْتَدُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ

பொருள்: உங்களிடம் போர் செய்வோருடன் நீங்களும் அல்லாஹ்வின் வழியில் போர் செய்யுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை. (2:191)

**போரில் எவ்வித வரம்பு மீறுதலும் ஆகுமானதல்ல**

۞ وَاقْتُلُوْهُمْ حَيْثُ ثَقِفْتُمُوْهُمْ وَاَخْرِجُوْهُمْ مِّنْ حَيْثُ اَخْرَجُوْكُمْ وَالْفِتْنَةُ اَشَدُّ مِنَ الْقَتْلِ ۚ وَلَا تُقٰتِلُوْهُمْ عِنْدَ الْمَسْجِدِ الْحَرَامِ حَتّٰى يُقٰتِلُوْكُمْ فِيْهِ ۚ فَاِنْ قٰتَلُوْكُمْ فَاقْتُلُوْهُمْ ؕ كَذٰلِكَ جَزَآءُ الْكٰفِرِيْنَ○فَاِنِ انْتَهَوْا فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ○

பொருள்: (வலிய வந்து போர் செய்கின்ற) அவர்களை எங்கு கண்டாலும் கொன்று விடுங்கள். அவர்கள் உங்களை எங்கிருந்து வெளியேற்றினார்களோ அங்கிருந்து நீங்களும் அவர்களை வெளியேற்றி விடுங்கள். கலகம், கொலையை விட மிகவும் கொடியது. புனிதப் பள்ளியின் பக்கத்தில் அவர்கள் உங்களுடன் போர் செய்யாதவரை நீங்கள் அவர்களுடன் அங்குப் போர் செய்யாதீர்கள். (அங்கு) அவர்கள் உங்களுடன் போர் செய்தால், நீங்கள் அவர்களைக் கொன்று விடுங்கள். இந்த நிராகரிப்பாளர்களுக்கு இதுவே தண்டனையாகும். பின்னர் அவர்கள் விலகிக் கொண்டால், அல்லாஹ் நிச்சயமாக மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (2:192,193)

**மார்க்க சுதந்திரத்தை நிலைநாட்டுவதே போர் செய்வதற்கான நோக்கமாகும்**

۞ وَقٰتِلُوْهُمْ حَتّٰى لَا تَكُوْنَ فِتْنَةٌ وَّيَكُوْنَ الدِّيْنُ لِلّٰهِ ؕ فَاِنِ انْتَهَوْا فَلَا عُدْوَانَ اِلَّا عَلَى الظّٰلِمِيْنَ

பொருள்: கலகம் இல்லாதொழிந்து மார்க்கமென்பது அல்லாஹ்விற்குரியதாகவே ஆகும்வரையிலும், நீங்கள் அவர்களுடன் போர் செய்யுங்கள். பின்னர் அவர்கள் விலகிக் கொண்டால், அநீதியிழைப்பவர்களைத் தவிர வேறுறெவரின் மீதும் பகைமை பாராட்டாதீர்கள். (2:194)

**போரில் எதிரிகளுனுடனும் கூட நீதியுடன் நடந்து கொள்வது அசியமாகும்**

۞ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ لِلّٰهِ شُهَدَآءَ بِالْقِسْطِ ۚ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰۤى اَلَّا تَعْدِلُوْا ؕ اِعْدِلُوْا ۫ هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى ۚ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (5:9)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகள்

## எந்தச் செயல் அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானது?

۞ عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُوْدٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ سَاَلْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : اَيُّ الْعَمَلِ اَحَبُّ اِلَى اللهِ تَعَالٰى ؟ قَالَ : اَلصَّلٰوةُ عَلٰى وَقْتِهَا : قُلْتُ ثُمَّ اَيُّ ؟ قَالَ : بِرُّ الْوَالِدَيْنِ، قُلْتُ : ثُمَّ اَيُّ ؟ قَالَ : اَلْجِهَادُ فِيْ سَبِيْلِ اللهِ ـ

பொருள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், எந்தச் செயல் அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானது? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், குறித்த நேரத்தில் தொழுவது என்று கூறினார்கள். இதற்குப் பிறகு எந்தச் செயல் என்று கேட்டேன்.

அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், தாய் தந்தையுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது என்று கூறினார்கள். பிறகு நான் இதற்குப் பிறகு எந்தச் செயல் என்று கேட்டேன். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்வதாகும் என்று கூறினார்கள். அதாவது இறைவனது மார்க்கத்தைப் பரப்புவதற்கு முழுமையாக முயற்சி செய்வதாகும். (புகாரி, கிதாபுல் ஜிஹாது, பாப் பஸ்லுல் ஜிஹாது...)

## தமது செல்வம், உயிர் மற்றும் நாவின் மூலமாக போர் செய்யுங்கள்

۞ عَنْ اَنَسٍ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ جَاهِدُوا الْمُشْرِكِيْنَ بِاَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ وَاَلْسِنَتِكُمْ

பொருள்: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இணை வைப்பவர்களுடன் உங்களது செல்வம், உங்களது உயிர் மற்றும் உங்களது நாவின் மூலமாக போர் செய்யுங்கள். (அபூதாவூது, கிதாபுல் ஜிஹாது...)

۞ عَنْ مُعَاذٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : اَلْغَزْوُ غَزْوَانِ فَاَمَّا مَنِ ابْتَغٰى وَجْهَ اللهِ وَاَطَاعَ الْاِمَامَ وَاَنْفَقَ الْكَرِيْمَةَ وَيَاسَرَ الشَّرِيْكَ وَاجْتَنَبَ الْفَسَادَ فَاِنَّ نَوْمَهٗ وَنَبْهَهٗ اَجْرٌ كُلُّهٗ وَاَمَّا مَنْ غَزَا فَخْرًا وَرِيَاءً وَسُمْعَةً وَعَصَى الْاِمَامَ وَاَفْسَدَ فِي الْاَرْضِ فَاِنَّهٗ لَمْ يَرْجِعْ بِالْكَفَافِ ـ

பொருள்: ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜிஹாதில் இரண்டு வகையான மனிதர்கள் கலந்து கொள்கின்றனர். ஒருவர், இறைவனின் திருப்திக்காக ஜிஹாத் செய்கின்றார். இமாமிற்கு கட்டுப்பட்டு நடக்கின்றார். தனது சிறந்த செல்வத்திலிருந்து இறைவனது வழியில் செலவு செய்கின்றார். தம்முடன் இருப்பவர்களுடன் மென்மையுடன் நடந்து கொள்கின்றார். மேலும் குழப்பம் விளைவிப்பதிலிருந்து தவிர்ந்திருக்கின்றார். அத்தகைய நபர், தூங்கும்போதும், விழித்திருக்கும்போதும் ஆகிய எல்லா நிலைமைகளிலும் நற்கூலி கிடைக்கும்.

இன்னொரு நபர், பெருமையடிப்பதற்காக ஜிஹாதில் கலந்து கொள்கின்றார். இமாமிற்கு கட்டுப்படாமல் நடக்கின்றார். மேலும் பூமியில் குழப்பத்தை பரப்புகின்றார். இத்தகைய நபர் பாக்கியமற்றவர் ஆவார். அவரால் எதையும் பெற முடியாது.

(மூத்தா இமாம் மாலிக், கிதாபுல் ஜிஹாத்.. பக்கம் 176)

## அநீதி இழைக்கும் அரசனுக்கு முன்பு நீதியின் கூற்றைக் கூறுவதே மிகச்சிறந்த ஜிஹாதாகும்

۞ عَنْ اَبِيْ سَعِيْدِ نِالْخُدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: اَفْضَلُ الْجِهَادِ كَلِمَةُ عَدْلٍ عِنْدَ سُلْطَانٍ جَائِرٍ ـ

பொருள்: ஹஸ்ரத் அபூ சயீது குத்ரி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அநீதி இழைக்கும் அரசனுக்கு முன்பு உண்மை மற்றும் நீதியின் கூற்றைக் கூறுவதே மிகச்சிறந்த ஜிஹாத் ஆகும். (திர்மிதி, கிதாபுல் ஃபித்ன்)

۞ عَنِ ابْنِ مَسْعُوْدٍ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ قَالَ : مَا مِنْ نَبِيٍّ بَعَثَهُ اللهُ فِيْ اُمَّةٍ قَبْلِيْ اِلَّا كَانَ لَهٗ مِنْ اُمَّتِهٖ حَوَارِيُّوْنَ وَاَصْحَابٌ يَاْخُذُوْنَ بِسُنَّتِهٖ وَيَقْتَدُوْنَ بِاَمْرِهٖ ثُمَّ اِنَّهَا تَخْلُفُ مِنْ بَعْدِهِمْ خُلُوْفٌ يَقُوْلُوْنَ مَا لَا يَفْعَلُوْنَ وَيَفْعَلُوْنَ مَا لَا يُؤْمَرُوْنَ فَمَنْ جَاهَدَهُمْ بِيَدِهٖ فَهُوَ مُؤْمِنٌ وَمَنْ جَاهَدَهُمْ بِلِسَانِهٖ فَهُوَ مُؤْمِنٌ وَمَنْ جَاهَدَهُمْ بِقَلْبِهٖ فَهُوَ مُؤْمِنٌ وَلَيْسَ وَرَآءَ ذٰلِكَ مِنَ الْاِيْمَانِ حَبَّةُ خَرْدَلٍ

பொருள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எனக்கு முன்பாக அல்லாஹ் எத்தனை நபிமார்களை அனுப்பியிருந்தானோ அவர்களுக்கு எத்தகைய நல்லடியார்கள் கிடைத்திருந்தனர் என்றால், அவர்கள், (அந்த நபியின்) வழிமுறைகளின்படி நடக்கக் கூடியவர்களாக இருந்தனர். மேலும் அவருக்கு கட்டுப்பட்டு நடந்தனர். பிறகு அவர்களது மரணத்திற்குப் பிறகு எப்படிப்பட்ட நபர்கள் தோன்றினார்கள் என்றால், அவர்கள் செய்யாதவற்றை கூறக்கூடியவர்களாக இருந்தனர். மேலும் அவர்களுக்குக் கட்டளையிடப்படாத விஷயங்களை அவர் பேசி வந்தனர்.

ஆக எவர் இவர்களுடன் தமது கைகளால் ஜிஹாத் செய்வாரோ அவர் உண்மையான நம்பிக்கையாளர் ஆவார். மேலும் எவர் இவர்களுடன் நாவினால் ஜிஹாத் செய்வாரோ அவரும் நம்பிக்கையாளர் ஆவார். மேலும் எவர் இவர்களுடன் உள்ளத்தால் ஜிஹாது செய்வாரோ அதாவது உள்ளத்தால் தீமையாக கருதுவாரோ அவரும் நம்பிக்கையாளர் அவார்.

(முஸ்லிம், கிதாபுல் ஈமான்)

பெண்களின் சீர்திருத்தத்தின் பக்கம் எந்த சமுதாயம் கவனம் செலுத்துவதில்லையோ அந்த சமுதாயத்தின் ஆண்களுக்கும் சீர்திருத்தம் ஏற்படாது. (மஷ்அலே ராஹ், தொகுதி 1 பக்கம் 16)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

A.Basheer Ahmad, Melapalayam

நேர்மையை நேசிப்போம்; நேர்மையின்மையை வெறுப்போம்

M.Y. Shahul Hameed, Melapalayam

மார்க்கத்தில் எவ்வித பலவந்தமுமில்லை

திருக்குர்ஆன்

**இப்போது வாள் மூலமாக பதில் தரப்படவில்லை. மாறாக, பேனாவின் மூலமாகவும் ஆதாரங்கள் மூலமாகவும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றது. இதன் காரணமாகவே வாளின் வேலையை பேனாவின் மூலமாக செய்ய வேண்டும் என்றும் எழுத்து மூலமாக எதிர்த்து நின்று எதிரிகளைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்றும் இறைவன் நாடியுள்ளான்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

## இந்தக காலத்தில் ஆன்மீகப் போருக்கான முன்மாதிரியைக் காட்டுவதே குறிக்கோளாக இருக்கின்றது

நாம் இருக்கின்ற இந்த காலத்தில் முழுமையான முறையில் போருக்கான தேவையும் அவசியமும் இல்லை. மாறாக, இறுதி நாட்களில் ஆன்மீகப் போருக்கான முன்மாதிரியைக் காட்டுவதே குறிக்கோளாக இருக்கின்றது. ஆன்மீகப் போட்டியே நமது பார்வையின் கீழ் இருக்கின்றது. ஏனென்றால், இப்போது ஆன்மீகத்திலிருந்து வெளியேறுவதற்கும் மார்க்கமற்ற நிலையைப் பரப்புவதற்கும் பெரும் பெரும் ஏற்பாடுகளும் ஆயுதங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, அவர்களையும் அதே போன்ற ஆயுதங்களுடன் எதிர்த்து நிற்பது அவசியமானதாகும்.

இன்றைய காலகட்டம் அமைதி மற்றும் நிம்மதியின் காலகட்டமாக இருக்கின்றது. நமக்கு எல்லா விதமான வசதியான நிம்மதியான நிலைமை கிடைத்திருக்கின்றது. ஒவ்வொரு மனிதரும் தமது மார்க்கத்தைப் பரப்பவும் அதைப் பிரச்சாரம் செய்யவும் அதன் கட்டளைகளை செயல்படுத்தவும் முடியும். பிறகு இஸ்லாம் உண்மையில் அமைதிக்கு ஆதரவை வழங்கக் கூடியதாக இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் உண்மையிலேயே அமைதி, சாந்தி, சமாதானம் ஆகியவற்றைப் பரப்பக்கூடியதே இஸ்லாமாகும். ஏனென்றால், நிம்மதியும் சுதந்திரமும் நிலவுகின்ற இந்த காலத்தில் (வெளிப்படையான போர்களை செய்கின்ற) அந்த பழைய முன்மாதிரியை காட்டுவதை எவராவது விரும்புவாரா?

எனவே, இன்றைய நாட்களில் அதே இரண்டாவது வகையான முன்மாதிரியை அதாவது ஆன்மீக முயற்சிகளை செய்வது தான் குறிக்கோளாக இருக்கின்றது. (ஃபார்ஸி கவிதையின் பொருள்) அதாவது அல்வா ஒரு முறை சாப்பிடுவதே போதுமானதாக இருக்கின்றது. மீண்டும் மீண்டும் அதை சாப்பிடும் போது சலித்து விடும். அதே போன்று வெளிப்படையான போர்களை இப்போது மீண்டும் செய்வது பொருத்தமற்ற செயலாகும்.

## இந்த காலத்தில் செய்யப்படும் ஜிஹாத்

இன்னொரு விஷயமும் இருக்கின்றது. அந்த முதல் வகையான முன்மாதிரியை காட்டுவதில் இன்னொரு விஷயமும் கவனத்தில் வைக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. அதாவது அந்த சமயத்தில் வீரத்தை வெளிப்படுத்திக் காட்டுவதும் கூட நோக்கமாக இருந்தது. அது அந்த காலத்தில் உலகில் எல்லாவற்றையும் விட மிகவும் அதிகமாக புகழுக்குரிய விஷயமாகும். விருப்பத்திற்குரிய பண்பாகவும் கருதப்பட்டது. இந்த சமயத்தில் போர் ஒரு கலையாக ஆகிவிட்டது.

அதாவது மிக தொலைவில் அமர்ந்தவாரே ஒரு மனிதர் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் இயக்க முடியும். ஆனால் அந்த நாட்களில் எவர் வாள்களுக்கு முன்னால் தனது நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நிற்கின்றாரோ அவரே உண்மையான வீரராக இருந்தார். ஆனால் இன்றைய நாட்களில் போர்கலையானது கோழைகளை மறைக்கின்ற திரையாக இருக்கின்றது. இப்போது வீரத்திற்கு வேலையில்லை. மாறாக, எந்த நபர் தம்மிடம் போருக்கான புதிய கருவிகளையும் புதிய பீரங்கிகள் போன்றவற்றையும் வைத்துள்ளாரோ, மேலும் அவற்றை இயக்க முடிந்தவராக இருக்கின்றாரோ அவர் வெற்றி பெற முடியும். அந்த காலத்தில் நடந்த போர்களின் நோக்கமும் குறிக்கோளும் நம்பிக்கையாளர்களிடம் இருந்த மறைவான வீரத்தின் தன்மையை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது. இறைவன் தான் விரும்பியது போன்றே சிறப்பான முறையில் அதை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டி விட்டான். இப்போது அதற்கான தேவை இல்லை.

ஏனென்றால், இப்போது போரில் கலை, சூழ்ச்சி மற்றும் ஏமாற்றுவது ஆகிய விஷயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. மேலும் புதிய புதிய போர் கருவிகளும் கோணலான கலைகளும் இந்த விலை மதிப்புள்ள பெருமை கொள்ளத்தக்க திறமையை மண்ணில் கலக்கும்படி செய்து விட்டது. இஸ்லாத்தின் துவக்க நாட்களில் தற்காப்பு போர்கள் மற்றும் உடல் ரீதியான போர்களுக்கான தேவை ஏன் இருந்தது என்றால் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுப்பவருக்கான பதில் அந்த நாட்களில் ஆதாரங்கள் மற்றும் தெளிவுகள் மூலம் தரப்படவில்லை. மாறாக, வாள் மூலமாக தரப்பட்டது. எனவே, வேறு வழியில்லாமல் பதிலுக்கு பதில் வாளேந்த வேண்டியது வந்தது.

ஆனால், இப்போது வாள் மூலமாக பதில் தரப்படவில்லை. மாறாக, பேனாவின் மூலமாகவும் ஆதாரங்கள் மூலமாகவும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றது. இதன் காரணமாகவே வாளின் வேலையை பேனாவின் மூலமாக செய்ய வேண்டும் என்றும் எழுத்து மூலமாக எதிர்த்து நின்று எதிரிகளை தோல்வியடைய செய்ய வேண்டும் என்றும் இறைவன் நாடியுள்ளான். எனவே, இப்போது பேனாவிற்கான பதிலை வாள் மூலமாக கொடுப்பதற்கு முயற்சி செய்வது எவருக்கும் உகந்த செயல் அல்ல. ஒருவரது தகுதியை கருத்தில் கொள்ளாமல் நடந்து கொள்பவர் குஃப்ர்–ல் (இறை மறுப்பு) இருக்கின்றார்.

## இப்போது பேனாவின் தேவை இருக்கின்றது

இப்போது வாளுக்கான அவசியம் இல்லை. மாறாக, பேனாவின் தேவையே இருக்கின்றது என்பதை உறுதியாக தெரிந்து கொள்ளுங்கள். நமது எதிரிகள் இஸ்லாத்தின் மீது எழுப்பியுள்ள சந்தேகங்களும், பல்வேறு விஞ்ஞான கருத்துக்கள் மற்றும் சூழ்ச்சிகளின் அடிப்படையில் அல்லாஹ்வின் உண்மையான மார்க்கத்தின் மீது தாக்குதல் நடத்த விரும்பியிருப்பதும் எனக்கு இதன் பக்கம் கவனமூட்டியிருக்கின்றது. அதாவது நான் பேனாவின் கவசங்களை அணிந்தவாறு இந்த விஞ்ஞானம் மற்றும் அறிவின் பணிகள் நிறைந்த களத்தில் இறங்க வேண்டும். இஸ்லாத்தின் ஆன்மீக வீரம் மற்றும் ஆன்மீக ஆற்றலின் அற்புதத்தையும் காட்ட வேண்டும். இந்த களத்தில் இறங்குதவற்கு நான் எப்போது தகுதியுடையவனாக இருந்திருக்க முடியும்? இது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளாகும். அவனது எல்லையற்ற கொடையாகும்.

அதாவது என்னை போன்ற எளிய மனிதனின் கைகள் மூலமாக அவனது மார்க்கத்தின் கண்ணியம் வெளிப்பட வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். நான் ஒரு சமயத்தில்

(தொடர்ச்சி 8 வது பக்கம்...)

**எப்போது வரை நம்பிக்கையாளர்கள் நிராகரிப்பாளர்களினால் குழப்பத்தில் இருப்பார்களோ அப்போது வரைதான் ஜிஹாத் செய்வது ஆகுமானதாகும். மேலும் நம்பிக்கை கொண்டவர்கள் தமது இறைவணக்கத்தை எவ்வித அச்சமுமின்றியும், இடையூறு இல்லாமலும் நிறைவேற்ற வேண்டும். மேலும் நயவஞ்சகத்தன்மையை மேற்கொள்ளும் நிர்பந்தத்திற்கு அவர்கள் ஆளாகக்கூடாது**

*ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றுகளிலிருந்து....*

**அல்லாஹ் நபிமார்களை அமைதியை நிலைநாட்டுவதற்காகவே அனுப்புகின்றான். மக்களை வலுக்கட்டாயமாக முஸ்லிம் ஆக ஆக்க வேண்டும் என்பது அவர்களது விருப்பமாக இருப்பதில்லை**

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சூரா பகராவின் 194 வது வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: இந்த விஷயத்தை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ் மார்க்கத்தில் பொய்யை விரும்பவில்லை. மாறாக فَلَوْ شَآءَ لَهَدٰىكُمْ اَجْمَعِيْنَ நான் விரும்பியிருந்தால் உங்கள் அனைவரையும் நேர்வழியில் நடத்தியிருப்பேன் என்று திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

மேலும் கூறுகின்றான்: அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்கவில்லையாயின், கிறித்தவர்கள், முஸ்லிம்கள், யூதர்கள், நெருப்பை வணங்கக் கூடியவர்கள் ஆகியோரின் வணக்கஸ்தலங்கள் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும்.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், மார்க்கங்களில் பிரிவுகள் ஏற்பட்டிருப்பது அல்லாஹ்வின் திட்டத்திற்கேற்பவே ஆகும். அல்லாஹ் நபிமார்களை அமைதியை நிலைநாட்டுவதற்காகவே அனுப்புகின்றான். மக்களை வலுக்கட்டாயமாக முஸ்லிம் ஆக ஆக்க வேண்டும் என்பது அவர்களது விருப்பமாக இருப்பதில்லை.

மாறாக, அவர்கள் لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ (அதாவது மார்க்கத்தில் எந்த பலவந்தமும் இல்லை) என்பதற்கேற்ப செயல்படுகின்றனர். ஏனென்றால் மனிதன் எப்போது வரை மனப்பூர்வமாக ஈமான் கொள்ளவில்லையோ அப்போது வரை நம்பிக்கையாளராக முடியாது. எனவே அவனது நம்பிக்கையின் வெளிப்பாடானது, அவனது வெளிப்படையான பணிகளிலிருந்து தெரிவதும், எவராலும் அதைத் தடுத்து நிறுத்த இயலாமல் ஆகுவதும் அவசியமாகும். ஆக எப்போது வரை நம்பிக்கையாளர்கள் நிராகரிப்பாளர்களினால் குழப்பத்தில் இருப்பார்களோ அப்போது வரைதான் ஜிஹாத் செய்வது ஆகுமானதாகும். மேலும் நம்பிக்கை கொண்டவர்கள் தமது இறைவணக்கத்தை எவ்வித அச்சமுமின்றியும், இடையூறு இல்லாமலும் நிறைவேற்ற வேண்டும். மேலும் நயவஞ்சகத்தன்மையை மேற்கொள்ளும் நிர்பந்தத்திற்கு அவர்கள் ஆளாகக்கூடாது. மாறாக, அவர்களது மார்க்கம் அல்லாஹ்விற்காக இருக்க வேண்டும். (ஹக்காயிகுல் ஃபுர்கான் தொகுதி 1 பக்கம் 327)

**இறை வேதத்தின் உதவியின் மூலமாக மக்களை மார்க்கத்தின் பக்கம் அழைக்க வேண்டும். நமது ஆயுதம் திருக்குர்ஆனே ஆகும். இந்த திருக்குர்ஆனின் வாளை எடுத்துக் கொண்டு உலகத்தில் ஜிஹாத் செய்வதற்காக வெளியேறுங்கள்**

*ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றுகளிலிருந்து....*

**நமது ஆயுதம் திருக்குர்ஆனே ஆகும்**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: நபித்துவத்தின் பொருளில் இதன் விளக்கம் என்னவென்றால், இறை வேதத்தின் உதவியின் மூலமாக மக்களை மார்க்கத்தின் பக்கம் அழைக்க வேண்டும். எந்த ஆதாரங்களைத் திருக்குர்ஆன் வழங்கியுள்ளதோ அதையே முன் வைக்க வேண்டும். தன் புறமிருந்து ஒன்றுமற்ற விஷயங்களை முன் வைக்கக்கூடாது. அந்தோ! இந்த இரகசியத்தை முஸ்லிம்கள் புரிந்திருந்தால், யூதர்களையும், கிறித்தவர்களையும் அவர்கள் வெற்றி கொண்டிருப்பார்கள். நமது ஆயுதம் திருக்குர்ஆனே ஆகும்.

திருக்குர்ஆன் தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்: وَجَاهِدْهُمْ بِهٖ அதாவது இந்த திருக்குர்ஆனின் வாளை எடுத்துக் கொண்டு உலகத்தில் ஜிஹாத் செய்வதற்காக வெளியேறுங்கள். ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இன்று உலகத்தின் அனைத்துப் பொருட்களும் முஸ்லிம்களின் கையில் உள்ளன. ஆனால் அது இல்லையென்றால்தான் பிறகு வாளைக் எடுத்துக் கொண்டு வெளியேறுவதற்கான கட்டளை வழங்கப்பட்டுள்ளது. (தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 273)

உலகத்தின் நலனுக்காக முயன்று வாருங்கள். மேலும் மனித இனத்திற்கு தொண்டு செய்யக்கூடிய ஆர்வத்தை உங்களது உள்ளங்களில் உருவாக்குங்கள். (மஷ்அலே ராஹ், தொகுதி 1 பக்கம் 43)

Faizal Hameed Ilahid, Tittacherry


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.


இஸ்லாம் மற்றும் அல்லாஹ்வின் மீதான நேசம், நன்மை, உண்மை, தைரியம் ஆகியவற்றை உங்களது உள்ளங்களில் உருவாக்குங்கள். (மஷ்அலே ராஹ், தொகுதி 1 பக்கம் 43)

A.Nasir Ahmad, Ameer Melapalayam

பயனற்று இருத்தல், சோம்பேறித்தனம், பொய் பேசுதல் போன்ற தீய பழக்கங்கள் இளைஞர்களிடம் உருவாகி விட்டால் அந்த சமுதாயம் இன்று இல்லை என்றாலும் நாளை நிச்சயமாக அழிந்து விடும். (மஷ்அலே ராஹ், தொகுதி 1 பக்கம் 16)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)

A.Shamsul Alam, Melapalayam

**உங்களது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்தியவாறு அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்யுங்கள். மேலும் இந்த முயற்சி மற்றும் ஜிஹாத் செய்வதில் அதன் எல்லையை அடையுங்கள்**

*ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கூற்றுகளிலிருந்து....*

## உங்களது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்தியவாறு அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்யுங்கள்

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த துஆக்கள் மற்றும் முந்தைய வேதங்களில் காணப்பட்ட முன்னறிவிப்புகளுக்கேற்ப அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக ஒரு முஸ்லிம் சமுதாயத்தை நிலைநாட்டினான். அல்லாஹ் திருக்குர்ஆனில் சூரா ஹஜ்ஜின் 79 வது வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

அதாவது உங்களது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்தியவாறு அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்யுங்கள். மேலும் இந்த முயற்சி மற்றும் ஜிஹாத் செய்வதில் அதன் எல்லையை அடையுங்கள். மேலும் அதன் உரிமையை செலுத்துங்கள். ஏனென்றால் அவன் உங்களுக்கு கண்ணியத்தை வழங்கியுள்ளான். மேலும் முழுமையான மார்க்கத்தை உங்களுக்கு வழங்கியுள்ளான். உங்களுக்காக சிறந்த கட்டளைகளை அவன் அருளியுள்ளான். மேலும் அந்த கட்டளைகளின்படி நடப்பதற்கு தேவைப்படுகின்ற ஆற்றல்களையும், திறமைகளையும் அவன் உங்களுக்கு வழங்கியுள்ளான். எனவே இந்த கட்டளைகளின்படி நடப்பது உங்கள் மீது எவ்வித சுமையும் இல்லை.

அல்லாஹ் உங்களுக்கு اَلْمُسْلِمِيْنَ என்று பெயர் வைத்துள்ளான். முஸ்லிம் சமுதாயமாக உங்களை ஆக்கியுள்ளான். உங்கள் பெயர் தொடர்பாக முந்தைய வேதங்களிலும் அவன் பயன்படுத்தியுள்ளான். திருக்குர்ஆனிலும் அவன் உங்களை اُمَّةً مُسْلِمَةً-اَلْمُسْلِمِيْنَ என்ற பெயரால் நினைவு கூருகின்றான்.

ஒரு முஸ்லிம் சமுதாயத்தை உலகில் தோற்றுவிப்பாயாக என்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த துஆக்களின் விளைவாகவே இந்த பெயர் உங்களுக்கு கிடைத்தது. (நபிமார்களுக்கெல்லாம் சிறந்தவராகிய அவர் வருகை தந்ததுடன்) அவர்களது பிள்ளைகளும் முஸ்லிம் உம்மத்தில் இணைய வேண்டும்.

ஆக இறை இல்லத்தின் நோக்கங்களுடன் தொடர்புடைய வசனங்களில் وَمِنْ ذُرِّيَّتِنَآ اُمَّةً مُّسْلِمَةً لَّكَ இந்த துஆவும் அடங்கும். திருக்குர்ஆனின் சூரா ஹஜ்ஜின் இந்த வசனம், அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக வாதம் செய்கின்றது. மேலும் எந்த முன்னறிவிப்புகள் முந்தைய வேதங்களில் செய்யப்பட்டுள்ளனவோ அவை நிறைவேறும் நேரமும் வந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றி விட்டார்கள். மேலும் முஸ்லிம் சமுதாயமும் நிலைபெற்று விட்டது. மனிதனுக்கு வழங்கப்பட்ட ஆன்மீக மற்றும் நல்லொழுக்க ஆற்றல்களையும், திறமைகளையும் வெளிப்படுத்தும் நேரம் வந்துவிட்டது என்பதற்காகவே அது நிலைநாட்டப்பட்டது. மேலும் மனிதன் தனது இறைவனின் வழியில் தனது ஆற்றல்களை எந்த அளவுக்கு செலவு செய்கின்றான். மேலும் தனது திறமைகளை எந்த அளவுக்கு அதன் உச்சத்தை அடையச் செய்கின்றான் என்பதை இப்போது உலகம் பார்க்கும்.

(குத்பாத்தே நாஸிர், தொகுதி 1 பக்கம் 732)

**முழு உலகத்திலுள்ள அனைத்து மார்க்கங்களையும் வெற்றி கொள்வதற்காகவே இஸ்லாம் தோன்றியது என்று கூறப்படுகிறது. இதன் பொருள், கையில் வாளை எடுக்க வேண்டும் என்பது ஒருபோதும் கிடையாது**

*ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கூற்றுகளிலிருந்து....*

## இஸ்லாத்தை எல்லா மார்க்கங்களின் மீதும் வெற்றி பெறச் செய்தல் என்பதன் உண்மைத்துவம்

முழு உலகத்திலுள்ள அனைத்து மார்க்கங்களையும் வெற்றி கொள்வதற்காகவே இஸ்லாம் தோன்றியது என்று கூறப்படுகிறது. இதன் பொருள், கையில் வாளை எடுக்க வேண்டும் என்பது ஒருபோதும் கிடையாது. அதாவது முஸ்லிம்கள் கையில் வாளை எடுத்துக் கொண்டு முழு உலகிலும் மறுக்கக்கூடியவர்களின் கழுத்தை வெட்ட வேண்டும். மேலும் எவர் ஏற்றுக் கொண்டு தலைசாய்ப்பாரோ அவருக்கு மட்டுமே அமைதிக்கான உத்திரவாதத்தை வழங்க வேண்டும். மற்ற அனைவருக்கும் போருக்கான தூதுச் செய்தியையே வழங்க வேண்டும் என்பது கிடையாது. இது அறிவுப்பூர்வமான விஷயமும் அல்ல. செயல் ரீதியாகவும் உலகம் இதை ஏற்றுக் கொள்ளாது. மேலும் அவ்வாறு நடைபெறவும் இல்லை. ஆக அஹ்மதிய்யா ஜமாஅத் இவ்விஷயத்தை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது நாம் ஜிஹாத் செய்வது, அனைத்து மார்க்கத்தின் மீது இஸ்லாத்தை வெற்றி பெறச் செய்வது ஆகிய விஷயங்களைப் பேசும்போது திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய வழிமுறைக்கேற்பவே பேசுகின்றோம்.

எனவேதான் இன்றைய சோதனையின் நேரத்தில் எந்த முஸ்லிம்கள் இந்த விஷயங்களை புரிந்து கொள்ளவில்லையோ (அவர்களால் புரிந்து கொள்ளவும் முடியாது. ஏனென்றால் அவர்களது தலைவர்கள் அவர்களுக்கு தவறான போதனையை வழங்குகின்றார்கள்) அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் தம்மைத்தாமே சோதனையில் சிக்கியிருப்பதை காண்கின்றனர். மேலும் அனுதினமும் இவர்களது நிலைமை மோசமாகிக் கொண்டே செல்கின்றது. பல்வேறு நாடுகளில் சிறுபான்மையினர் பலவீனர்களாக இருக்கின்றனர். மேலும் இஸ்லாத்தின் போதனையை தவறாக எடுத்துக் கூறியதன் காரணமாக அவர்களால் சரியான முறையில் தமது எதிர்நடவடிக்கையை வெளிப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர். தவறான வழிகளில் அவர்களை வழிநடத்துகின்றனர். இதன் காரணமாக அவர்கள் கடுமையான இழப்பை சந்திக்கின்றனர். இஸ்லாம் மேலும் அவப்பெயருக்கு அவர்கள் காரணமாகின்றனர்.

(குத்பாத்தே தாஹிர் தொகுதி 10 பக்கம் 56)

**மார்க்கத்தின் மீது தாக்குதல் தொடுப்பவர்களுக்கு எதிராக போர் செய்வதே ஜிஹாத் ஆகும். மற்ற முஸ்லிம்கள், மற்றவருடன் அல்லது தமக்குள் செய்யும் இக்காலத்தின் போர்கள் அனைத்தும் அரசியல் போர்களே ஆகும்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் கூற்றுகளிலிருந்து....**

### மார்க்கத்தின் மீது தாக்குதல் தொடுப்பவர்களுக்கு எதிராக போர் செய்வதே ஜிஹாது ஆகும்

அல்லாஹ் மார்க்கத்திற்காக போர் செய்யும் நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ள முஃமின்களுக்கு நிச்சயமாக உதவி செய்கின்றான். அந்த காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த அநீதிகள் எல்லை கடந்தவையாக இருந்தன. முஸ்லிம்களின் நிலை அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் ஹிஜ்ரத்திற்குப் பிறகு மார்க்கப்போர் முஸ்லிம்களால் செய்யப்பட்டது. இறைவனும் தான் ஆற்றல் உள்ளவன் என்று நிரூபித்துக் காட்டினான். அனுபவமற்றவர்களாகவும், எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும் இருந்தபோதிலும் இறைவன் சண்டையிடுமாறு கட்டளையிட்டு உதவியும் செய்தான். மலக்குகளை முஸ்லிம்களுக்கு உதவி செய்யுமாறு அனுப்பினான்.

எனவே இதன் மூலம் ஒரு விஷயம் தெளிவாகிறது. தற்காப்பிற்காக மட்டுமே இறைவன் போர் செய்வதற்கு அனுமதி வழங்கினான். அமைதியை நிலைநாட்ட அனுமதி வழங்கினான். மார்க்கத்தின் மீது தாக்குதல் தொடுப்பவர்களுக்கு எதிராக போர் செய்வதே ஜிஹாத் ஆகும். மற்ற முஸ்லிம்கள், மற்றவருடன் அல்லது தமக்குள் செய்யும் இக்காலத்தின் போர்கள் அனைத்தும் அரசியல் போர்களே ஆகும். அவை ஜிஹாத் அல்ல.

பிறகு அல்லாஹ் தனது கவி – ஆற்றல் உள்ளவன் என்பதை பிரகடனம் செய்தவாறு கூறுகின்றான். இவ்வாறு மார்க்கத்திற்கு எதிராக தாக்குதல் தொடுப்பவருக்கு எதிராக அதனை ஏற்றுக் கொண்டவர்களுக்கு உதவி செய்வேன் என்று அல்லாஹ் கூறினான். ஏனெனில் கடைசியானதும், முழுமையாக்கப்பட்டதுமான மார்க்கம் இறைவனிடத்தில் இஸ்லாமேயாகும். எனவே முஸ்லிம்களுக்கு உதவி செய்வதாக இறைவன் வாக்குறுதி அளித்துள்ளான்.

إِنَّ اللَّهَ لَقَوِيٌّ عَزِيزٌ அதாவது நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் உள்ளவனும், மிகைத்தோனும் ஆவான் என்று கூறி முஸ்லிம்களுக்கு எதிரில் மார்க்கப் போர் நடக்குமானால் நான் முஸ்லிம்களுக்கு உதவி செய்வேன் என்று பிரகடனம் செய்தான். எனவே இக்காலத்தில் நடக்கும் போர்களில், முஸ்லிம்கள் வெற்றி அடைவதற்குப் பதில் தோல்வியடைந்து வருவது, இக்காலத்தில் நடைபெறுவது ஜிஹாதும் அல்ல. மார்க்கப் போரும் அல்ல என்பதற்கு ஆதாரமாகும். மேலும் இதனால் அல்லாஹ்வின் உதவியும் கிடைக்கவில்லை.

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 7 பக்கம் 478 – குத்பா ஜுமுஆ 9 அக்டோபர் 2009)

### இஸ்லாத்தினால் உலக மக்களின் பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. மாறாக, இஸ்லாத்தின் எதிரிகள் மூலமாகவே உலக மக்களின் அமைதிக்கு அச்சுறுத்தல் உள்ளது

இஸ்லாத்தின் போதனைகளில் ஜிஹாது மற்றும் வேறு சில கட்டளைகள் உள்ளன. அதன் காரணமாகவே முஸ்லிம்கள் தீவிரவாதிகளாக ஆகி வருகின்றனர் என்று கடந்த நாட்களில் பத்திரிகைகளில் கட்டுரை எழுதக்கூடிய ஒரு நபரும் ஆஸ்திரேலியாவைச் சார்ந்த அரசியல்வாதி ஒருவரும் கூறியுள்ளனர்...

இன்றைய நாட்களில் ஈராக் மற்றும் சிரியாவில் இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாத குழுக்கள் சில பகுதிகளில் தமது ஆதிக்கத்தை செலுத்தி அரசாங்கத்தை நிறுவியுள்ளன. அவர்கள் மேற்கத்திய நாடுகளுக்கு மிரட்டல் மட்டும் விடுக்கவில்லை. மாறாக, சில இடங்களில் அநீதியான தாக்குதல்களை நடத்தி அப்பாவிகளை கொலை செய்திருக்கின்றார்கள்... இந்த விஷயம் எங்கு பொது மக்களை அச்சத்தில் ஆழ்த்தி இருக்கின்றதோ அங்கு சில தலைவர்களின் அறிவீனத்தின் காரணமாக அல்லது இஸ்லாத்திற்கு எதிரான சிந்தனையின் காரணமாக இஸ்லாத்திற்கு எதிராக பேசுவதற்கு வாய்ப்பும் வழங்கியுள்ளது. சிலர் இவ்வாறும் கூறுகின்றனர். எழுதுகின்ற சிலர் இவ்வாறும் எழுதுகின்றனர்.

அதாவது மற்ற மார்க்கங்களின் போதனைகளிலும் கடினம் உள்ளது என்பது உண்மை தான். ஆனால் அந்த மார்க்கங்களைப் பின்பற்றக் கூடியவர்கள் அதன்படி அமல் செய்வதில்லை. அல்லது தமது மார்க்கங்களில் சூழ்நிலைக்கேற்ப மாற்றங்களை செய்து கொண்டனர். காலத்தின் தேவைக்கேற்ப அந்த போதனைகளை மாற்றிக் கொண்டனர். எனவே, திருக்குர்ஆனையும் காலத்தின் தேவைக்கேற்ப அதன் கட்டளைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என அவர்கள் அழுத்தம் தருகின்றனர்....

...சில முஸ்லிம் பிரிவுகள் இஸ்லாத்தின் பெயரால் செய்கின்ற சில தவறான செயல்களே இஸ்லாத்தினை அவப்பெயருக்கு ஆளாக்கி உள்ளது என்பதை நாம் ஒப்புக் கொள்கின்றோம். ஆனால், அதற்காக திருக்குர்ஆனின் போதனைகளை இலக்காக்குவதும் அதில் வரம்பு மீறுவது என்பதும் இஸ்லாத்திற்கெதிரான உள்ளத்தின் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாகும்.

இன்றைய நாட்களில் இதன் உச்சகட்ட வெளிப்பாடாக அமெரிக்க அதிபர் வேட்பாளரின் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கெதிரான கூற்று அமைந்துள்ளது. எவ்வாறிருப்பினும், இஸ்லாத்தைப் பற்றி இவர்கள் என்ன விரும்புகின்றார்களோ அதனை பேசிக் கொள்ளட்டும். ஆனால், இஸ்லாத்தின் அழகிய போதனைகளுக்கு எதிராக எந்த மார்க்கத்தின் போதனைகளும் போட்டி போட முடியாது. அதே போன்று இவர்களால் உருவாக்கப்பட்ட எந்த சட்டமும் போட்டி போட முடியாது.

கடந்த நாட்களில் இங்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கிளாஸ்கோ பகுதி M.P அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆதாரத்தின் அடிப்படையில் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை எடுத்துரைத்தார். இஸ்லாத்தின் அமைதி மற்றும் சாந்தியின் போதனையின்படி செயல்படக்கூடியவர்கள் அஹ்மதி முஸ்லிம்களாவர் என்று அவர் கூறினார். கிளாஸ்கோவில் அமைதி கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதில் அவர் கலந்து கொண்டிருந்தார். ஆக, அவரது கூற்றை கேட்டு அங்கு அமர்ந்திருந்த இங்கிலாந்து நாட்டின் உள்துறை அமைச்சரும் கூறினார். அஹ்மதிகள் எந்த இஸ்லாத்தை

எடுத்துரைக்கின்றார்களோ அது மற்ற தீவிரவாத குழுக்கள் எடுத்துரைக்கின்ற இஸ்லாத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். உண்மையில் அஹ்மதிகள் அமைதியை விரும்புகின்ற குடிமக்கள் ஆவர்.

உண்மையில் விஷயம் என்னவென்றால், அஹ்மதிகள் புதிதாக எந்த போதனையையும் எடுத்துரைக்கவில்லை. மாறாக, திருக்குர்ஆன் கூறுகின்றவற்றையே எடுத்துரைக்கின்றனர். ஆனால் இந்த சம்பவம் நிகழ்ந்த பிறகு மக்கள் அமைதியாகி விட்டனர். கொஞ்ச காலம் கழித்து மக்கள் இதனையும் மறந்து விடுவர். இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுந்தவுடன் விஷயமும் முடிவுக்கு வந்து விட்டது என்று மக்கள் அமர்ந்து விடுவர்.

இதனை நாம் எப்போதும் பசுமையாக வைத்திருக்க வேண்டும். ஒரு முறை Press இந்த செய்தியை வெளியிட்டு மௌனமாகி விடுகின்றது. ஆனால் ஒரு தீவிரவாத சம்பவம் நிகழ்ந்து விட்டால் அதன் பெயரில் நூற்றுக்கணக்கான செய்திகள் வெளியிடப்படுகின்றன. அதன் மூலமாக இஸ்லாத்திற்கு எதிராக பேசுவதற்கு எதிரிகளுக்கு வாய்ப்பும் கிடைத்து விடுகின்றது.

கடந்த நாட்களில் நான் ஜப்பானில் இருந்தேன். அப்போது அங்கு கல்வி அறிவு படைத்த மக்கள் இதனை வெளிப்படுத்தினார்கள். இன்னும் கூறப்போனால் ஒரு கிருத்தவ பாதிரியாரே கூறினார். திருக்குர்ஆனின் ஒளியில் இஸ்லாத்தின் போதனையாக எதனை நீங்கள் எடுத்து வைக்கின்றீர்களோ அதனை அறிந்து வைப்பது ஜப்பானியர்களுக்கு மிகவும் அவசியமாகும்.

இன்னும் கூறப்போனால் முழு உலகத்திற்கும் அதன் அவசியம் இருக்கின்றது. நீங்கள் இவ்விஷயத்தை இந்த நிகழ்ச்சியோடு முடித்துக் கொள்ளாதீர்கள். ஜப்பானில் தொடர் முயற்சிகளை செய்து இப்போதனைகளை மக்களுக்கு கூறி வாருங்கள். அப்போது தான் அது பயனளிக்கும் என்றும் அவர் கூறினார்.

...எனவே இது ஒவ்வொரு அஹ்மதியின் மிகப்பெரிய பொறுப்பாகும். மார்க்கத்தின் தனிச்சிறப்புகளை முன்னிலைப்படுத்துவற்கு திருக்குர்ஆனின் ஞானத்தை பெற வேண்டும். பின்னர் அதில் தனது நல்ல முன்மாதிரியை நிலைநாட்டி உலகத்தை தன் பக்கம் ஈர்க்க வேண்டும்.

இந்த அறிவு மற்றும் அமல் மூலமாக மட்டும் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்த பிறகு திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் பாதுகாப்பு பணிகளில் நாம் பங்கு பெற முடியும். மேலும் உலகத்தில் அமைதியை நிலைநாட்டமுடியுமென்றால் திருக்குர்ஆனின் போதனைகளின் மூலமாகவே முடியும் என்றும் நம்மால் உலக மக்களுக்கு உணர்த்திட முடியும்.

...எனவே, இஸ்லாத்தின் போதனை நட்பை வளர்க்கின்ற போதனையாகும். சாந்தியை நிலைநிறுத்துகின்ற போதனையாகும். அமைதி மற்றும் அன்பின் தூதுச் செய்தியை வழங்கும் போதனையாகும். சில முஸ்லிம் பிரிவுகள் அதன்படி அமல் செய்யவில்லை என்றால் அது அவர்களின் துர்பாக்கியமாகும். சந்தேகத்திற்கிடமின்றி குர்ஆன் அசல் வடிவத்தில் அவர்களிடத்தில் இருக்கின்றது தான். ஆனால் அதன்படி அவர்கள் அமல் செய்யவில்லை.

திருக்குர்ஆன் மற்றும் அதன் கட்டளைகளை எந்த அளவிற்கு அவர்கள் பாதுகாத்திருக்க வேண்டுமோ அதை அவர்கள் செய்யவில்லை. அதனை பாதுகாப்பது என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அவர்களின் ஜமாஅத்தின் பணியாகும். இஸ்லாத்தினால் உலக மக்களின் பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. மாறாக, இஸ்லாத்தின் எதிரிகள் மூலமாகவே உலக மக்களின் அமைதிக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று நாம் உலகத்திற்கு நமது அறிவு மற்றும் முன்மாதிரி மூலமாக கூற வேண்டும்.

இஸ்லாத்தை களங்கப்படுத்த முயலும் இம்மக்கள் பொய்யையும் இட்டுக்கட்டி அவதூறு கூறுதலையும் பயன்படுத்துகின்றனர். அவர்களின் அந்த பொய்யும், இட்டுக்கட்டி பழிசுமத்துதலும் தான் உண்மையில் உலகத்தின் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்துகின்றது. இந்த மக்கள் தங்களின் நலனுக்காக புவிசார் அரசியல் நலனுக்காக குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். முஸ்லிம் நாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற குழப்பங்களிலும் சில முஸ்லிம் நாடுகளின் பங்கு உள்ளது.

முஸ்லிம்களின் இந்த தீவிரவாத குழுக்கள் நமது நாடுகளால் உருவாக்கப்பட்டதாகும் என்று இப்போது மேற்கத்திய நாடுகளின் ஊடகங்கள் கூட கூறத் தொடங்கி விட்டன. ஈராக் மற்றும் சிரியாவின் போருக்குப் பிறகு நாமே இந்த குழுக்களை உருவாக்கி இருக்கின்றோம் என்றும் கூறுகின்றனர். இதன் காரணமாக நான் இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக் கொண்டு தீவிரவாத செயல்களில் ஈடுபடும் முஸ்லிம்களை குற்றமற்றவர்கள் என்று கூறவில்லை. ஆனால், இந்த நெருப்பை மூட்டியதில் வல்லரசுகளின் பெரும் பங்கு இருக்கின்றது. நீதியின்படி செயல்படாததன் விளைவாகவே இவை அனைத்தும் நடக்கின்றன. (குத்பா ஜுமுஆ 11 டிசம்பர் 2015)

......☆......☆......☆......

(4 வது பக்கத்தின் தொடர்ச்சி...)

இஸ்லாத்தின் மீது நமது எதிரிகள் தொடுத்திருந்த தாக்குதல்களையும் செய்திருந்த ஆட்சேபனைகளையும் எண்ணிப் பார்த்தேன். அவற்றின் எண்ணிக்கை எனது கருத்து மற்றும் கணிப்பிற்கு ஏற்ப மூவாயிரமாகும். இப்போது இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாயிருக்கும் என்று நான் கருதுகின்றேன். இஸ்லாத்தின் அடித்தளமே இத்தகைய பலவீனமான விஷயங்கள் மீது வைக்கப்பட்டுள்ளது.

அதாவது அதன் மீது மூவாயிரம் ஆட்சேபனைகள் செய்யப்பட முடியும் என்று எவரும் புரிந்து கொள்ள வேண்டாம். அவ்வாறு ஒருபோதும் இல்லை. இந்த ஆட்சேபனைகள் குறைமதி உடையவர்கள் மற்றும் அறிவற்றவர்களின் பார்வையில் ஆட்சேபனைகளாக இருக்கின்றன. ஆனால் நான் உங்களிடம் உண்மையிலேயே கூறுகின்றேன். நான் இந்த ஆட்சேபனைகளை எண்ணிப்பார்த்த அதே சமயத்தில் இந்த ஆட்சேபனைகளின் ஆழத்தில் உண்மையிலேயே மிகவும் அதிகமான பல அரிய உண்மைகள் இருக்கின்றன.

அவை அகப்பார்வை இல்லாத காரணத்தால் எதிரிகளுக்கு தென்படவில்லை. உண்மையில் இது இறைவனின் நுட்பமான ஞானமாகும். ஆட்சேபனை செய்கின்ற பார்வையற்றவர் எங்கு வந்து சிக்கிக் கொள்கின்றாரோ அங்கு தான் உண்மைகள் மற்றும் இறைஞானங்களின் மறைவான கருவூலம் வைக்கப்பட்டிருக்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 49–51, 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

## உண்மை மற்றும் நிரந்தரமான உலகளாவிய அமைதியை நிலைநாட்டுதல்

**நாம் கடினமான காலங்களைக் கடந்து கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் உணர்ந்தாலும், சில நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகள் எந்த அளவுக்கு மோசமடைந்துள்ளது என்பதையும் இதன் விளைவுகள் எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதையும் பலர் உணராமலேயே உள்ளனர்**

**ஆயுத வியாபாரிகளை விடவும் மோதல் போக்கை கடைபிடிக்கும் உலக தலைவர்களை விடவும் பொது மக்களின் அழுத்தத்தாலும், மனித நேயர்களின் குரல் ஓங்கி ஒலிக்கும்போதுதான் ஆயுத கட்டுப்பாடு சாத்தியமாகும்**

**தங்களுடைய நலனில் மட்டும் கவனம் செலுத்தாமல் முழு உலகிற்கும் எது சிறந்தது என்று தேசங்களும் அதன் தலைவர்களும் சிந்திப்பது மிகவும் அவசியமாகும்**

**ஒவ்வொரு தரப்பும் சகிப்புத்தன்மையின் உயிரோட்டமுள்ள உணர்வுடனும், உலகில் உண்மையான நிலையான அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்ற பொது குறிக்கோளுடனும் செயல்பட வேண்டும்**

**அனைத்து நாடுகளும் ஒன்றுக்கு எதிராக மற்றொன்று கலந்து கொளும் போரில் குறிப்பாக அது அணு ஆயுதப் போராக மாறிவிடும்போது அந்தப் போரில் எவரும் வெற்றியாளராக முடியாது**

**இன்றைய உலகின் சில முக்கியமான அச்சுறுத்தக் கூடிய பிரச்சனைகளையும் நாம் மேலோட்டமாகப் பார்த்தால் உலகம் ஒரு மோசமான வழியில் சென்று கொண்டிருப்பதை நம்மால் உணர முடிகிறது**

**அகதிகள் குடியேற்றப் பிரச்சனைக்கான நீண்டகால தீர்வு என்னவென்றால், இத்தகைய போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமைதியை ஏற்படுத்துவதும் அங்குள்ள மக்களுக்கு உதவுவதும் ஆகும். அவர்கள் ஒரு பரிதாபமான, ஆபத்தான வாழ்க்கையை வாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள். மேலும் அவர்கள் தங்கள் சொந்த கால்களில் நின்றவாறு அமைதியாக வாழ்வதற்கு உதவ வேண்டும்**

**இஸ்லாமியப் போதனைகளின் நோக்கில், முழு உலகமும் ஒன்றுபட நாம் பாடுபட வேண்டும். முழு உலகமும் ஒரே கரன்ஸியில் ஒன்று சேர வேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும். மேலும் சுந்திரமான வியாபாரம் மற்றும் வர்த்தகத்தில் முழு உலகமும் ஒன்றுபட வேண்டும். மேலும் சுதந்திரமான முறையில் போக்குவரத்து ஏற்படுவதற்கும், குடியேற்றம் ஏற்படுவதற்கும், ஏதுவான மற்றும் செயல்படுத்துவதற்குரிய கொள்கைகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் உலகம் ஒன்றுபட முடியும்**

**இஸ்லாத்தின்படி அமைதி மேலோங்க வேண்டுமென்றால் நாடுகளுக்கிடையே நீதியை ஏற்படுத்துவது ஒரு முன் நிபந்தனையாகும்**

**நாம் நமது அனைத்து சக்திகளையும், திறன்களையும் பயன்படுத்தி அமைதியை நிலைநாட்டுவதற்காகவே பயன்படுத்த வேண்டும்**

2019–ஆம் ஆண்டு மார்ச் மாதம் லண்டன் மாநகரில் நடைபெற்ற 16 வது வருடாந்திர தேசிய அமைதிக் கருத்தரங்கில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் – அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய்கிறேன்.

அனைத்து கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுக்கும், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹூ (உங்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டுமாக).

ஒவ்வொரு வருடமும் அஹ்மதிய்யா முஸ்லிம் இயக்கம் இந்த அமைதிக் கருத்தரங்கை நடத்தி வருகிறது. இதில் தற்போதைய பிரச்சனைகள் மற்றும் உலகின் ஒட்டுமொத்த நிலை குறித்தும் அலசப்படுகிறது. மேலும் என்னுடைய சொற்பொழிவில் இத்தகைய நடப்பு பிரச்சனைகளுக்கு இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் நான் பதில் அளிக்க முனைகிறேன். இந்த நிகழ்ச்சி உலகளவில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதன் அடிப்படையில் கூறுவதாயின் அதைப் பற்றி எனக்கு தெரியாது என்று நான் ஏற்கனவே கூறி உள்ளேன்.

எனினும் இதன் விளைவுகள் எவ்வாறு இருந்தாலும் அமைதி மற்றும் நீதியை நிலைநிறுத்துவதற்கான நம்முடைய முயற்சியை நாம் ஒருபோதும் கைவிட மாட்டோம். மேலும் உண்மையான, நிரந்தர அமைதியை உலகில் நிலைநாட்ட நாம் கொண்டிருக்கும் அதே விருப்பம் உங்களுக்கும் உண்டு என நான் உறுதியாக நம்புகிறேன். சமீபகாலமாக உலகைப் பாதித்து வரும் பல போர்கள் மற்றும் மோதல்களுக்கு ஒரு முடிவு ஏற்படுவதை நீங்கள் காண விரும்புகிறீர்கள் என்பதும் எனக்கு நிச்சயமாக தெரியும். மேலும் ஓர் அமைதியான உலகம் உருவாக வேண்டும். அதில் எல்லா மக்களும் தேசங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

ஒருவர் மற்றவருடைய உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்றும் விரும்புகிறீர்கள். ஆனால் ஒரு சோகமான மற்றும் நிலைகுலையச் செய்யக்கூடிய உண்மை என்னவெனில், ஒவ்வொரு வருடமும் போரில் இருந்தும் சண்டைகளில் இருந்தும் வெளிவருவதற்குப் பதிலாக அதற்கு நேர்மாற்றமான ஒரு நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. பகைமைகள் வலுத்துக் கொண்டிருக்கின்றன. போருக்கான புதிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதே நேரத்தில் பழைய பகைமைகளும் மறைவதற்கான அறிகுறிகளும் குறைவாகவே தோன்றுகின்றன.

நாம் கடினமான காலங்களைக் கடந்து கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் உணர்ந்தாலும், சில நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகள் எந்த அளவுக்கு

மோசமடைந்துள்ளது என்பதையும் இதன் விளைவுகள் எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதையும் பலர் உணராமலேயே உள்ளனர். உதாரணத்திற்கு சமீபத்தில் புளூம்பெர்கு பிஸினஸ் வீக்கில் (Bloomberg Business Week) 31.01.2019 அன்று வெளியான ஒரு கட்டுரையில் பீட்டர் காய் (Peeter Coy) என்னும் பத்திரிகையாளர் கூறியுள்ளதாவது,

''மனித சமூகத்தை ஒரு சில மணி நேரங்களில் அழித்து விடக்கூடிய அளவுக்குப் போதுமான அளவு அணு ஆயுதங்கள் இருந்தாலும், அணு ஆயுதப்போர் குறித்த கருத்துகள் வெகு குறைவான கவனத்தையே ஈர்க்கின்றன என்பது தான் ஆச்சரியமான விஷயமாகும்... நாம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் என்னவென்றால், குறிப்பாக அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையிலான ஆயுதக் கட்டுப்பாடு முறிந்து விட்டது. ஒரு புதிய அணு ஆயுதப் போட்டி உருவாகத் தொடங்கியுள்ளது. ஒருவரால் என்ன செய்ய முடியும் என்று கேட்டால் ஆயுத வியாபாரிகளை விடவும் மோதல் போக்கை கடைபிடிக்கும் உலக தலைவர்களை விடவும் பொது மக்களின் அழுத்தத்தாலும், மனித நேயர்களின் குரல் ஓங்கி ஒலிக்கும்போதுதான் ஆயுத கட்டுப்பாடு சாத்தியமாகும்''.

மேலும் அவர் தனது கட்டுரையில் சர்வதேச கல்விக்கான மிடில்பர்ரி கல்வி நிறுவனத்தின் (Middlebury Institute of International Studies) மூத்த உறுப்பினர் நிகோலாய் சோகோவின் (Nikolai Sokov) கருத்துக்களையும் கோடிட்டுக் காட்டியுள்ளார். அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்:

''ஐரோப்பாவில் ஒரு தீவிரமான, ஒருங்கிணைந்த அணுஆயுதப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருப்பதையே அனைத்து அறிகுறிகளும் சுட்டிக் காட்டுகின்றன''

மீதமுள்ள கட்டுரையில் உலகளாவிய அளவில் மற்றுமோர் ஆயுதப்போட்டி துவங்கி விட்டதையும், அணு ஆயுதப் போரின் அபாயத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது என்பதையும் அழுத்தமாக கூறுகிறார். சில நாட்களுக்கு முன்பு இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையில் பதற்றம் திடீரென்று அதிகரித்ததை நாம் கண்டோம். இரு நாடுகளுமே அணு ஆயுத சக்திகள். மேலும் இரு நாடுகளும் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ, மற்ற நாடுகளுடன் கூட்டணி அமைத்துள்ளன. எனவே போர் ஏற்பட்டால் அதன் விளைவு பரந்ததாகவும், வெகு தூரம் எட்டக் கூடியதாகவும் இருக்கும்.

நான் பல்வேறு தருணங்களில் வெளிப்படுத்தியுள்ள எனது கருத்து என்னவென்றால், அணு ஆயுத நாடுகளின் தலைவர்கள் அதைத் தூண்டுவதில் மகிழ்ச்சியடைபவர்களாகவும் உண்மையில் அணு ஆயுதப் போரின் அபாயகரமான விளைவுகளைப் புரிந்து கொள்ளாதவர்களாகவுமே தெரிகிறார்கள். இந்த ஆயுதங்கள் தங்களின் இலக்கு நாடுகளை அழிப்பதற்கு மட்டுமல்லாமல் முழு உலகின் அமைதியையும் நிலையான தன்மையையும் அழிப்பதற்கான சக்தியையும் பெற்றுள்ளன. எனவே தங்களுடைய நலனில் மட்டும் கவனம் செலுத்தாமல் முழு உலகிற்கும் எது சிறந்தது என்று தேசங்களும் அதன் தலைவர்களும் சிந்திப்பது மிகவும் அவசியமாகும். மற்ற நாடுகளுடனும், சமுதாயங்களுடனும் பேச்சுவார்த்தை என்பது மிக முக்கிய தேவையாகும். ஒவ்வொரு தரப்பும் சகிப்புத்தன்மையின் உயிரோட்டமுள்ள உணர்வுடனும், உலகில் உண்மையான நிலையான அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்ற பொது குறிக்கோளுடனும் செயல்பட வேண்டும்.

Spiegel Online (ஸ்பைகல் ஆன்லைன்) என்ற இணையப் பத்திரிகையின் நேர்காணலில் ஜெர்மனியின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் Sigmar Gabriel (ஸிக்மர் கேபுரியல்) தற்போதைய அரசியல் சூழலில் ஏற்படக்கூடிய பேராபத்துகள் குறைத்து மதிப்பிடப்படுவதாக சுட்டிக் காட்டியுள்ளார். இன்றைய உலகின் அரசியல் சூழ்நிலையை அவர் 1945 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் நிலவிய உலகின் சூழ்நிலையுடன் ஒப்பிடுகிறார்.

மேலும் ஜெர்மனியின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் கூறுகிறார்:

தற்போதைய உலகில் மிகப்பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பழைய மேற்கத்திய உலகம் தனியாகப் பிரிந்து விட்டது. அமெரிக்காவை முன்னணி நாடாகக் கொண்டு நாம் அதைச் சார்ந்திருக்க தொடங்கிய கடந்த 70 ஆண்டுகளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முற்றிலும் மாறிவிட்ட ஓர் உலகில் ஐரோப்பிய இறையாண்மையை ஏற்படுத்துவதற்காக நாம் இப்பொழுது போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இதுபோன்றே Newyork Times (நியூயார்க்க டைம்ஸ்) பத்திரிகையில் சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர் மிக்காயில் கார்பசேவ் (Mikhail Gorbachev) சமீபத்தில் I.N.F Treaty உடன்படிக்கை முறிக்கப்பட்டதை அடுத்து அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒரு புதிய அணு ஆயுதப் போட்டியை தொடங்கி விட்டதாக எழுதியுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது: ''உலக விஷயங்களில் இராணுவ மயமாக்கலின் முதல் பலி I.N.F உடன்படிக்கை அல்ல. 2002–ஆம் ஆண்டில் அமெரிக்கா Antiballistic Missile Treaty (கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளுக்கு எதிரான உடன்படிக்கையில்) இருந்து விலகிக் கொண்டது. இவ்வாண்டு ஈரானுடனான அணுஆயுத ஒப்பந்தத்திலிருந்தும் விலகியுள்ளது. இராணுவத்திற்கான செலவீனங்கள் வானளாவிய அளவில் உயர்ந்து விட்டன. மேலும் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்கின்றன.''

அவர் அணு ஆயுதப் போரின் ஆபத்தைக் குறித்து நம்மை எச்சரிக்கும்போது, ''அனைத்து நாடுகளும் ஒன்றுக்கு எதிராக மற்றொன்று கலந்து கொளும் போரில் குறிப்பாக அது அணு ஆயுதப் போராக மாறிவிடும்போது அந்தப் போரில் எவரும் வெற்றியாளராக முடியாது. இந்த சாத்தியக்கூறை மறுக்க முடியாது. சளைக்காத ஆயுதப் போட்டி, உலகளாவிய பதற்றம், பகைமை, உலகளாவிய நம்பிக்கையற்ற தன்மை ஆகியவை இதற்கான அபாயத்தை அதிகரிக்கவே செய்யும்''.

எனவே கருத்து கூறக்கூடிய நிபுணர்கள், அனுபவமிக்க அரசியல்வாதிகள் இத்தகைய முடிவிற்கு வந்துள்ளனர். அதாவது அணு ஆயுதப் போர் தொலைவிலுள்ள ஒரு விஷயம் அல்ல. மாறாக, அது ஒரு வளர்ந்து வரும் ஆபத்தாகும் என்பதை இனிமேலும் மறுத்து விட முடியாது. இன்றைய உலகின் சில முக்கியமான அச்சுறுத்தக் கூடிய பிரச்சனைகளையும் நாம் மேலோட்டமாகப் பார்த்தால் உலகம் ஒரு மோசமான வழியில் சென்று கொண்டிருப்பதை நம்மால் உணர முடிகிறது. கடந்த வருடம் வடகொரியாவுடன் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தத்தை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கின்றோம் என்று மிகுந்த தன்நம்பிக்கையுடன் அமெரிக்கா கூறியது. ஆனால் உருப்படியான எதுவும் நடக்கவில்லை என்பது சமீப நாட்களில் தெளிவாகி விட்டது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள மோதல்கள் ஓங்கிக் கொண்டே செல்கின்றன. தொடர்ந்து கடந்த பத்து வருடங்களாக சிரியா இரத்தக் களறி உடன் சூறையாடப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. அங்கே உள்நாட்டுப் போர் ஒரு முடிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்று கூறினாலும் இலட்சக்கணக்கான அப்பாவி மக்களின் மரணத்தையும் பல லட்சம் மக்கள் நாடு பெயர்ந்து செல்வதையும் தவிர கடந்த பத்து

ஆண்டுகளில் நாம் என்ன சாதித்து விட்டோம்? சாதாகமான எதுவுமே நடந்து விடவில்லை. ஆனால் சிரியாவின் எதிர்காலத்துடன் தங்களுடைய சுயநலன்களை முடிச்சுப் போட்டு வைத்துள்ள நாடுகளுக்கு இடையிலான பதற்றங்களினால் சிரியாவின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவும், நிலையற்றதாகவும் மாறியுள்ளது.

ஒரு பக்கம் ரஷ்யாவும், துருக்கியும் ஒன்று சேர்ந்துள்ளன. இன்னொரு பக்கம், அமெரிக்காவும், சவுதி அரேபியாவும் ஒன்று சேர்ந்து கொண்டு ஈரான் மேல் தொடர்ந்து அழுத்தத்தை ஏற்படுத்தி வருகின்றன. மேலும் அவர்கள் மீது பல்வேறு தடைகளை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றன. மத்திய கிழக்கில் தங்கள் ஆளுமையை ஏற்படுத்த வேண்டும்; ஆட்டிப் படைக்க வேண்டும் என்பதே இத்தகைய நாடுகளின் உண்மையான நோக்கமாகும் என்று அரசியல் வல்லுனர்கள் வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்து வருகின்றார்கள். இன்னொரு பக்கம் பரவி வரும் விஷயமும் மோதலுக்கான காரணமும் என்னவென்றால் துருக்கி மற்றும் தங்களுக்கென சுதந்திரமான தன்னாட்சி கேட்கும் குர்திஷ் இன மக்களுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து மோசமான நிலைக்கு சென்று கொண்டிருப்பதும் ஆகும்.

தாக்குதல் மற்றும் எதிர்தாக்குதலின் ஓர் அபாயகரமான சூழலில் உலகம் சிக்கிக் கொண்டிருக்கின்றது. எதிர்ப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. பகைமை உணர்ச்சிகள் மேலும் அதிகமாகவும், ஆழமாகவும் பதிந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சனைகள் நம்மை எங்கே கொண்டு செல்லும்? அல்லது இதனால் எவ்வளவு கொடூரமான விளைவுகள் வெளிப்படும்? என்பதை யாருமே அறிய மாட்டார்.

நான் இங்கே கூறியது பிரச்சனைகளில் ஒரு மேலோட்டமான பகுதி மட்டுமே ஆகும். உலகில் அமைதியை அச்சுறுத்தக்கூடிய, உலகின் நலனைப் பாதிக்கக்கூடிய இன்னும் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன.

உதாரணமாக, தாயிஷ் (ISIS - ஐஎஸ்ஐஎஸ்) அழிவின் விழிம்பில் இருப்பதாகவும், அவர்கள் ஏற்படுத்திய கிலாஃபத் முடிந்து விட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால் வல்லுனர்கள் தாயிஷ் தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பகுதியை இழந்து விட்டாலும் வெறுக்கத்தக்க அவர்களின் கொள்கைகள் தொடர்ந்து நீடிக்கின்றன என்று கூறுகின்றார்கள். உயிர் பிழைத்துக் கொண்ட அதன் உறுப்பினர்கள் தற்பொழுது சிதறி விட்டாலும் அவர்கள் மீண்டும் ஒருங்கிணைந்து ஐரோப்பாவிலோ மற்ற நாடுகளிலோ தாக்குதல்களை தொடுப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. மேலும் தற்பொழுது தேசியவாதம் மீண்டும் தனது கோரமான தலையைத் தூக்கி உள்ளது. மேற்கத்திய நாடுகளில் தீவிரமான வலதுசாரிக் கட்சிகள் மக்களிடையே பிரபலமாகி வருகின்றன.

அவர்களுக்கு முழுமையான அரசியல்ரீதியான பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் சமூகத்தின் அனைத்து நிலையிலும் நீதி ஏற்படுத்தப்படாத வரை இத்தகைய வலதுசாரிகள் தொடர்ந்து ஆதரவைப் பெருக்கிக் கொண்டே செல்வார்கள். இத்தகைய வலதுசாரிகள் புகழ்பெறுவதற்கு ஒரு முக்கியமான காரணம் என்னவென்றால், பரந்த அளவில் ஏற்பட்டுள்ள அகதிகளின் குடியேற்றம் ஆகும். இதன் காரணமாகக் கடுமையான எதிர்ப்பும் மேலும் நாட்டின் குடிமக்களை ஏய்த்தே இந்த அகதிகளுக்குப் பொருளாதார உதவியும் ஆதரவும் அளிக்கப்படுகின்றது என்ற தப்பான நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சனை குறித்து நான் ஏற்கனவே விரிவான முறையில் பேசி இருக்கின்றேன்.

எனவே மீண்டும் அது குறித்து இங்கு பேசத் தேவையில்லை என்றே நினைக்கிறேன். ஒவ்வொரு நாடும் தன் முழுத் திறனை அடைவதற்கும் அங்கு அமைதியை விளைவிப்பதற்கும் நேர்மையான முயற்சிகள் எடுத்தாலே தங்கள் நாடுகளை விட்டு வெளியேற வேண்டும் என்ற இந்த மக்களின் அந்த நிராசையான எண்ணம் குறைந்து விடும் என்று கூறுவது போதுமானது என்று நினைக்கிறேன்.

பெரும்பாலும் மக்கள் விரும்புவது என்னவென்றால், தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய திறன் தங்களுக்கு வேண்டும் என்பதே ஆகும். அத்தகைய வாய்ப்புகள் தங்களுக்கு மறுக்கப்படும் பொழுதே அவர்கள் மேலும் சிறந்த வாழ்க்கையைத் தேடி தங்களது வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதற்கேற்ப, அகதிகள் குடியேற்றப் பிரச்சனைக்கான நீண்டகால தீர்வு என்னவென்றால், இத்தகைய போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமைதியை ஏற்படுத்துவதும் அங்குள்ள மக்களுக்கு உதவுவதும் ஆகும். அவர்கள் ஒரு பரிதாபமான, ஆபத்தான வாழ்க்கையை வாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் அமைதியாக வாழ்வதற்கு உதவ வேண்டும்.

மேலும் இப்பிரச்சனைக்கான தற்சமயத்திற்கான இடைக்காலத் தீர்வு என்னவென்றால், தங்கள் நாடுகளிலுள்ள அரசியல் மற்றும் மார்க்க சம்பந்தப்பட்ட நிலைகள் காரணமாக தங்கள் நாடுகளிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு அடைக்கலம் தேடி வரக்கூடியவர்களையும் அகதிகளையும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடத்த வேண்டும். அதே நேரத்தில் நாட்டின் குடிமக்களின் மீது சுமையை ஏற்படுத்தி அந்த அகதிகளுக்கு உதவக் கூடாது. அப்படி குடியேறுபவர்கள் நீண்ட காலம் பயன்களைப் பெற்று வாழ்வதற்குப் பகரமாக அவர்கள் உடனடியாக ஒரு வேலையில் சேருவதற்கு உறுதியாக வலியுறுத்த வேண்டும். அவர்களுக்கு உத்வேகம் அளிக்க வேண்டும். ஊக்கப்படுத்த வேண்டும். அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும். தங்கள் சொந்த கால்களில் நிற்க வேண்டும். மேலும் தாங்கள் வாழக்கூடிய இந்தப் புதிய சமூகத்திற்கு ஆக்கப் பூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

அவ்வாறல்லாமல் அவர்கள் வரி செலுத்துபவர்களின் பணத்திலிருந்து தொடர்ந்து உதவி பெற்று வந்தால் அது நிச்சயமாக வருந்தத்தக்க நிலைமை ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்து விடும். உண்மையில் என்னுடைய நம்பிக்கை என்னவென்றால், சமூகத்தில் ஏற்படக்கூடிய இத்தகைய பெரும்பாலான வெறுப்புணர்ச்சிகளுக்கு அடிப்படையான காரணம், பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய ஏமாற்றமும், விரக்தியும் ஆகும். சில அமைப்புகள் இத்தகைய மக்களின் அச்சத்திலிருந்து பயனடைய முயல்கிறார்கள். அவர்கள் இந்த குற்றத்திற்கான பழியை அகதிகளின் மீதோ அல்லது ஏதாவதொரு மதத்தைப் பின்பற்றுபவர்கள் மீதோ சுமத்தி அவர்களுக்கெதிராக வெறுப்புணர்வுகளைத் தூண்டி விடுகிறார்கள்.

இவ்வாறு ஐரோப்பாவில் தற்போது உருவாகியுள்ள ஒரு தப்பெண்ணம் என்னவென்றால், ஆசிய மக்களும், ஆஃப்ரிக்க மக்களும் குறிப்பாக முஸ்லிம் அகதிகளும் இந்த சமூகத்திற்கு ஒரு பேராபத்தாக இருக்கின்றார்கள் என்பதாகும். அமெரிக்காவிலும் இதேபோன்ற அச்ச உணர்வுகள் முஸ்லிம்கள் குறித்தும், மெக்ஸிகோவிலிருந்து நாட்டிற்குள் நுழையக்கூடிய ஹிஸ்பானிக் மக்கள் மீதும் ஏற்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் நான் உறுதியாக நம்புவது என்னவென்றால், வல்லரசுகள் தங்கள் சுய நலன்களை ஒதுக்கி விட்டு ஏழை நாடுகளின் பொருளாதார நிலையை

உயர்த்துவதற்கு நேர்மையாக பாடுபட்டால் மேலும் அவர்களை கருணையுடனும், அனுதாபத்துடனும், மரியாதையுடனும் நடத்தினால் இத்தகைய பிரச்சனைகள் ஒருபோதும் எழாது.

தற்போது இங்கிலாந்தில் Brexit சம்பந்தமாகவும், ஐரோப்பிய யூனியனுடன் இங்கிலாந்தின் உறவு சம்பந்தமாகவும் மிகப்பெரிய அளவில் ஒரு நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. 2012–ஆம் ஆண்டு ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையில் இந்த விஷயம் சம்பந்தமான எனது கருத்துக்களைத் தெளிவுபடுத்தியுள்ளேன்.

அந்த உரையில் நான் கூறியது என்னவென்றால், ஒருவர் மற்றவர்களுடைய உரிமைகளை வழங்குவதன் மூலம் ஒற்றுமையை பேணிக் காக்க வேண்டும். அதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். பொதுமக்களின் அச்சங்கள் மற்றும் கவலைகள் நீக்கப்பட வேண்டும். மேலும் நான் கூறியது என்னவென்றால், ‘‘ஐரோப்பாவின் வலிமை அது ஒன்றாக இணைந்திருப்பதில்தான் உள்ளது. இத்தகைய ஒருமைப்பாடு ஐரோப்பாவில் மட்டுமல்லாமல் உலக அளவிலும் ஐரோப்பிய கண்டம் தங்கள் வலிமையையும், தாக்கத்தையும் தொடர்ந்து ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கும்.

ஏழு வருடங்களுக்கு முந்தைய எனது உரையில் அகதிகள் குறித்த மக்களின் அச்சத்தைப் போக்குவது குறித்தும், ஒருமைப்பாட்டின் பலன்கள் மற்றும் நன்மைகளை வலியுறுத்துவது குறித்தும் நான் கவனம் செலுத்தி இருந்தேன்.

எனினும் மக்களுடைய அச்சங்கள், கவலைகள் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. எனவே ஐரோப்பாவில் வாழக்கூடிய பெரும்பாலான மக்கள் ஐரோப்பிய யூனியன் உடைய நன்மைகள் குறித்து கேள்வி எழுப்ப ஆரம்பித்து விட்டார்கள். இதன் அப்பட்டமான உதாரணம் Brexit ஆகும். ஆனால் இத்தாலி, ஸ்பெயின் மற்றும் ஜெர்மனி போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் கூட வலதுசாரி, தேசியவாத கட்சிகள் தொடர்ந்து பிரபலமடைந்து வருகின்றன. மேலும் பல தொகுதிகளை வென்று வருகின்றார்கள். இதன் மூலம் அவர்கள் தொடர்ந்து ஐரோப்பிய யூனியனைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். அகதிகளுக்கெதிரான திட்டங்களைச் செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

எனவே நான் மேலும் சிறந்த முறையில் ஐரோப்பா ஒன்றுபடும் என்று நம்பியிருந்த வேளையில் கடந்த சில வருடங்களாக பிரிவினைகளும், குழப்பங்களும் அதிகமாகி விட்டதை நாம் பார்த்து வருகிறோம். இத்தகைய ஏமாற்றங்கள் ஏன் வெளிப்பட்டுள்ளன? இதன் காரணம், பொருளாதார கஷ்டங்களும், துயரங்களும், நீதியுடன் நடந்து குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கங்கள் தோல்வியடைந்ததுமே ஆகும். சர்வதேச ஒத்துழைப்பு ஆக்கப்பூர்வமானதும் நன்மைகளுக்காக ஒன்றுபடுத்தும் சக்தியும் ஆகும் என்ற கண்ணோட்டத்திலேயே நான் இருக்கின்றேன்.

எனவே ஐரோப்பிய பாராளுமன்றத்தில் கூறியது என்னவென்றால், இஸ்லாமியப் போதனைகளின் நோக்கில், முழு உலகமும் ஒன்றுபட நாம் பாடுபட வேண்டும். முழு உலகமும் ஒரே கரன்ஸியில் ஒன்று சேர வேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும். மேலும் சுந்திரமான வியாபாரம் மற்றும் வர்த்தகத்தில் முழு உலகமும் ஒன்றுபட வேண்டும். மேலும் சுதந்திரமான முறையில் போக்குவரத்து ஏற்படுவதற்கும், குடியேற்றம் ஏற்படுவதற்கும், ஏதுவான மற்றும் செயல்படுத்துவதற்குரிய கொள்கைகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் உலகம் ஒன்றுபட முடியும்.

எனவே, இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஒருமைப்பாட்டின் மூலமே அமைதியை ஏற்படுத்த முடியும். எனினும், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால் ஒருமைப்பாட்டிற்குப் பதிலாக நாம் பிரிவினையைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். உலகின் பொதுவான நலன்களுக்கு மேலாக நம்முடைய தனிப்பட்ட நலன்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம். இத்தகைய கொள்கைகள் உலகில் அமைதியையும், பாதுகாப்பையும் அடியோடு அழித்து விடும். ஏற்கெனவே அழித்துக் கொண்டும் இருக்கின்றன என்பது எனது நம்பிக்கையாகும். இஸ்லாத்தின்படி அமைதி மேலோங்க வேண்டுமென்றால் நாடுகளுக்கிடையே நீதியை ஏற்படுத்துவது ஒரு முன் நிபந்தனையாகும். இக்கட்டான சூழலில் இருக்கும் நாடுகளுக்கு மற்ற நாடுகளும் தங்களின் சொந்த செயல் திட்டங்களைப் பார்க்காமல் தன்னலமின்றி உதவி செய்ய வேண்டும்.

புனித குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: இரு பிரிவினர்களுக்கிடையில் மோதலோ, போரோ ஏற்பட்டால் மற்ற நாடுகள் அவர்களுக்கிடையே பாரபட்சமின்றி மத்தியஸ்தம் செய்து வைத்து ஒரு அமைதியான தீர்வை அடைய முயற்சி செய்ய வேண்டும். ஆனால் ஒரு தரப்பு தொடர்ந்து அநியாயமாக நடந்து கொண்டு அமைதியான தீர்வின் பக்கம் திரும்பாவிட்டால், பிற நாடுகள் ஒன்றிணைந்து வரம்பு மீறும் தரப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும். வரம்பு மீறும் நாடுகள் அல்லது தரப்பு, தவறிழைப்பதிலிருந்து தவிர்ந்து கொண்டால், அப்பொழுது அநியாயமான பொருளாதாரத் தடைகள் மூலம் அல்லது அவர்களின் வளங்களைக் கொள்ளையடிப்பதன் மூலம் அவர்களைப் பழிவாங்கக் கூடாது என்று இஸ்லாம் தெளிவாக வரையறுக்கிறது.

இருப்பினும் மீண்டும் மீண்டும் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கிடையில் தலையிட்ட நாடுகளின் அல்லது இழந்து நிற்கும் நாடுகளுக்கு நிவாரணம் வழங்கும் நாடுகளின் உதாரணங்களில் நாம் காண்பது என்னவென்றால், சமாதானத்தைக் கொண்டு வருகிறோம் என்ற சாக்கில் பலவீனமான நாடுகளின் வளங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் விதிகளை இணைத்து விடுகிறார்கள். தங்கள் சொந்த செல்வங்களுடன் திருப்தி அடைவதற்குப் பதிலாக சக்தி வாய்ந்த நாடுகள் பலவீனமான நாடுகளின் மீது தங்கள் கட்டுப்பாட்டை வலியுறுத்துகின்றன.

நான் கூறியுள்ளது போல் கிழக்கு அல்லது மேற்கு நாடுகளில் நிலவும் வெறுப்புணர்வுக்கும், அதனால் விளையும் விரோதப் போக்கிற்கும் பொருளாதார அநீதிகளே காரணிகளாகும். எனவே நாடுகள் மற்றும் அவற்றின் மக்களுக்கு இடையேயான பொருளாதார வேறுபாடுகளைக் களைவதற்கான பாலம் அமைப்பதற்கான ஒரு ஒருங்கிணைந்த முயற்சியானது அவசியமாகிறது. அனைத்து விதமான தீவிரவாதம் மற்றும் மத, இன அல்லது வேறு எந்த வகையான பாரபட்சமாயினும் அவற்றை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் நாம் ஒன்றிணைய வேண்டும்.

மக்கள் இன்னல்களுக்கு ஆளாகும் இடங்களில் அவர்களது தலைவர்கள் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில்லை என்றால் அமைதியைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட சர்வதேச அமைப்புகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் குடிமக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், சமாதானத்திற்காகவும், நீதியை ஏற்படுத்தவும், அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள நிலையற்ற தன்மை மற்றும் பிணக்குகள் முஸ்லிம் நாடுகளையே மையமாகக் கொண்டுள்ள நிலையில் உலகில் சமாதானத்தை கொண்டு வருவது பற்றி இஸ்லாம் என்ன போதிக்க முடியும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். இருப்பினும் அந்த நாடுகளின் பரிதாபமான

நிலை அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளில் இருந்தும் தூரமாக விலகிச் சென்று விட்டதனாலேயே ஏற்பட்டுள்ளது.

இஸ்லாமிய ஆட்சி மற்றும் தலைமைத்துவத்தின் துல்லியமான சித்தரிப்பைப் பெறுவதற்கு நாம் இஸ்லாத்தின் நிறுவனர், புனித இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் சகாப்தத்தைப் பார்த்தாக வேண்டும். புனித இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மதீனா நகரத்திற்கு குடிபெயர்ந்த பின் முஸ்லிம்ளும், யூதக் குடிமக்களும் சமாதானமாகவும், பரஸ்பர அனுதாபம், சகிப்புத்தன்மை மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் உணர்வுடன் வாழ்வதற்காகவும் யூத மக்களுடன் ஓர் உடன்படிக்கை செய்தார்கள்.

இந்த உடன்படிக்கை மனித உரிமைகள் மற்றும் ஆட்சி ஆகியவற்றின் மகத்தான சாசனமாக விளங்கியது. மேலும் மதீனாவில் வாழும் பல்வேறு சமூகங்களுக்கிடையில் சமாதானத்தை உறுதிப்படுத்தியது. அதன் நிபந்தனைகளின்படி அனைத்து மக்களும் தங்கள் நம்பிக்கை மற்றும் இனத்திற்கு அப்பாற்பட்டு ஒருவர் மற்றவரின் உரிமையை மதித்து நடக்க வேண்டும். நம்பிக்கைச் சுதந்திரமும், சுய நிர்ணய சுதந்திரமும் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படைகளாகும்.

மதீனா தாக்கப்பட்டால் அல்லது அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டால் முஸ்லிம்களும் யூதர்களும் ஒன்று சேர்ந்து மதீனாவைப் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அந்த உடன்படிக்கை ஒருமைப்பாட்டை அடித்தளமாகக் கொண்டிருந்தது. மேலும் ஒவ்வொரு சமுதாயமும் அவர்களின் நம்பிக்கை மற்றும் சம்பிரதாயங்களின்படி அவர்களின் உள் விவகாரங்களைத் தீர்க்கும் உரிமைகளைக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த உடன்படிக்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் உண்மையாகக் கடைபிடித்தார்கள் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது.

குடியேறிவர்கள் என்ற ரீதியில் முஸ்லிம்கள் புதிய சமுதாயத்திற்கு சேவை ஆற்றுவதற்கும், மதீனாவிலிருந்த அனைத்து குடிமக்களின் உரிமைகளையும் மதிக்கவும் செய்தனர். வெற்றிகரமான ஒருங்கிணைப்பு மற்றும் அமைதியான, சகிப்புத்தன்மையுடைய முற்போக்கு பன்முக சமுதாயத்தின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அந்த மதீனா விளங்கியது. மதீனா உடன்படிக்கை நேரடியாக திருக்குர்ஆனின் போதனைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. உதாரணமாக, திருக்குர்ஆன் அத்தியாயம் 16 வசனம் 91ல் இவ்வாறு கூறுகிறது: நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) ''நீதியுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப் போல)க் கொடுக்கவும் கட்டளையிடுகின்றான்''.

எனவே புனித குர்ஆன் மற்ற மக்களுடனும், மற்ற சமுதாயங்களுடனும் நல்லுறவு கொள்வதில் மூன்று நிலைகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளது. முதலாவதான குறைந்த நிலை, நீதியின் நிலையாகும். புனித குர்ஆன் அனைவரையும் நீதியாகவும், நியாயமாகவும் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது. இஸ்லாத்தில் வலியுறுத்தப்படும் நீதியின் தரம் புனித குர்ஆன் அத்தியாயம் 4 வசனம் 136ல் விவரிக்கப்பட்டுள்ளது. திருமறை கூறுகிறது:

''நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினருக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாயிருங்கள். (யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ) அவர் செல்வராயினும், ஏழையாயினும் சரி. அல்லாஹ் அவ்விருவருக்கும் (உங்களை விட) அதிக அளவில் நன்மையை விரும்பக் கூடியவன் ஆவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு அற்ப ஆசைகளைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் (உண்மையை) மறைத்தாலோ, தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிகின்றான் (என்பதை நினைவில் கொள்ளுங்கள்)''.

எனவே திருக்குர்ஆனின் அடிப்படையில் நீதி என்றால் ஒருவர் உண்மையைப் பாதுகாக்கத் தனக்கு எதிராகவோ அல்லது தனது உற்ற அன்பிற்குரியவருக்கும் எதிராகவோ கூட சாட்சியம் அளிக்கத் தயாராகி விட வேண்டும். புனித குர்ஆனினால் பரிந்துரைக்கப்பட்ட நல்லுறவு ஏற்படுத்துவதின் இரண்டாவது நிலை என்னவென்றால், ஒரு நபர் நீதியுடன் நடப்பது மட்டுமல்லாமல் அதற்கும் மேல் சென்று தாராள மனப்பான்மையையும், மன்னிப்பையும் வெளிப்படுத்துவதன் மூலம் மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல திருக்குர்ஆன் போதிப்பது என்னவென்றால், ஒரு ஆக்கிரமிப்பு நாடு தொடர்ந்து கொடூரமான செயல்களைச் செய்வதை நீங்கள் வெற்றிகரமாக தடுத்து விட்ட பிறகு அந்த நாட்டினை பழிவாங்கவோ அல்லது அதன் மீது துயரத்தை ஏற்படுத்தவோ முயற்சி செய்யக் கூடாது. மாறாக நீங்கள் அவர்களின் பொருளாதாரத்தையும் உள்கட்டமைப்பையும் புணரமைக்க உதவி செய்ய வேண்டும்.

இது அவர்களுக்கு மட்டுமில்லாமல் காலப்போக்கில் உங்களுக்கும் உதவியாக இருக்கும். போரின் அல்லது பிரிவினையின் மையமாக இருக்கும் நாடுகள் பொருளாதார ரீதியாக செழித்தோங்க உதவினால் அவர்கள் ஏமாற்றம் அல்லது மற்ற நாடுகளுக்கு எதிரான வெறுப்புணர்ச்சியை விட்டு விடுவார்கள். அவர்களுடைய மக்கள் குடிபெயர வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்காது.

இதுவே நீதியுடன் நடப்பது மட்டுமல்லாமல் அதற்கும் மேல் சென்று தாராள மனப்பான்மையையும், மன்னிப்பையும் வெளிப்படுத்தச் சொல்லும் இஸ்லாமிய போதனைகளின் உள்ளே பொதிந்திருக்கும் அடிப்படை ஞானமாகும். புனித குர்ஆன் கற்பிக்கும் மூன்றாம் நிலை, ஒரு தாய் தன் குழந்தையிடம் எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் மிகவும் தன்னலமற்ற அன்புடன் நடப்பது போன்று நாமும் மற்றவர்களை நடத்த வேண்டும் என்பதாகும். கொடையுள்ளத்துடன் மற்றவரை நடத்துவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. எனினும் இது நமது நிரந்தர ஆசையாக இருக்க வேண்டும்.

இறுதியாக, முஸ்லிம் நாடுகளிலோ அல்லது பரந்த சர்வதேச அளவிலோ சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு குறைந்தபட்சம் நீதியின் தேவைகளை அரசாங்கங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அனைத்து மக்களுக்கும் அவர்களின் உரிமைகள் வழங்கப்படும். மேலும் எது நன்மையோ, நீதியோ அதற்கு வழிவிட வேண்டும். மேலும் ஐ.நா போன்ற சர்வதேச நிறுவனங்கள், சில சக்திகளின் விருப்பத்திற்கு அடிபணியாமல் ஒவ்வொரு நாட்டையும் சமமான முறையில் நடத்திட வேண்டும். இதுவே சமாதானத்திற்கான வழிமுறையாகும். இதுவே ஒரு சிறந்த உலகிற்கான வழிகாட்டியாகும். இதுவே மனித குலத்தை மேலும் பேராபத்தில் வீழ்வதை விட்டும் தடுக்கக்கூடிய ஒரே வழியாகும்.

இந்த சில வார்த்தைகளுடன் என் உரையை முடிக்கிறேன். என் இதயப் பூர்வமான பிரார்த்தனை என்னவென்றால், அல்லாஹ் அனைவருக்கும் உண்மையான சமாதானத்தை வெளிப்படுத்துவானாக. நமது தலைக்கு மேலுள்ள போர் மற்றும் மோதல்களின் நீண்ட நிழல்களுக்குப் பதிலாக அமைதி மற்றும்

செழிப்பு ஆகியவற்றின் நீல வானத்தைக் கொண்டு வருவானாக. எண்ணற்ற மக்களுடைய வாழ்க்கையை பீடித்துள்ள உலகெங்கும் பேரழிவுகரமான போர்களுக்கும் வேதனைகளுக்கும் காரணமாக இருந்துள்ள ஏமாற்றங்கள் மற்றும் இழப்புகளுக்கு ஒரு முடிவு ஏற்படவும் நான் பிரார்த்தனை செய்கிறேன்.

மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குப் பதிலாகவும் தங்களது சொந்த உரிமைகளை வலியுறுத்துவதற்குப் பதிலாகவும் நாடுகளும் அவர்களது தலைவர்களும் ஒருவருக்கொருவர் உரிமைகளை நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கும் பயன்களைக் காண்பதற்காக நான் பிரார்த்திக்கின்றேன். சில மார்க்கங்கள் அல்லது குறிப்பிட்ட இனத்தின் மக்களின் மீது உலகின் பிரச்சனைகளுக்கான பழியைப் போடுவதற்குப் பதிலாக நாம் ஒருவர் மற்றவரின் நம்பிக்கை மற்றும் சமய பழக்க வழக்கங்களின் மீது சகிப்புத்தன்மையை வெளிப்படுத்தவும், நமது சமுதாயத்திலுள்ள பன்முகத்தன்மையை மதித்திடவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

மனித குலத்தில் உள்ள சிறந்த விஷயங்களைப் பார்ப்பதற்காகவும், நம் குழந்தைகளுக்கு ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்காகவும், சமூகத்தில் நீடித்த சமாதானத்தை வளர்ப்பதற்கும் ஒருவர் மற்றவரின் வலிமையையும், திறமையையும் பயன்படுத்துவதற்கும் நான் பிரார்த்திக்கிறேன். இதற்கு மாற்றமான விஷயங்களை நிச்சயமாக நாம் நினைத்துப் பார்க்க முடியாது. முன்னதாக நான் அணு ஆயுதப் போர் மற்றும் வளர்ந்து கொண்டே செல்லும் உலகளாவிய ஆயுதப் போட்டியைப் பற்றி சில வல்லுனர்களின் மேற்கோளை கோடிட்டுக் காட்டினேன். மனிதர்கள் இதுவரை பார்த்திராத ஒரு அபாயகரமான பேரழிவை நோக்கி உலகம் வேகமாக செல்கிறது என்றும், அதன் அழிவுகள் நம்மால் கட்டுக்குள் கொண்டு வர முடியாது என்ற அச்சத்திற்கு அந்த கட்டுரைகளும் மற்றும் பலவும் வலு சேர்க்கின்றன.

சில மதிப்பீட்டின்படி அணு ஆயுதப் போரின் விளைவுகள் உலகின் 90% வரை சென்று விடும். அது மட்டுமல்லாமல் இன்று ஒரு அணு ஆயுதப் போர் நடந்தால் நாம் இன்றைய உலகத்தை அழித்து விடுவது மட்டுமல்லாமல் எதிர்கால தலைமுறையினருக்கும் அழிவு மற்றும் துயரத்தின் ஒரு நீடித்த தொடரை விட்டுச் செல்வோம். எனவே நாம் நிதானமாக நம்முடைய செயல்களின் விளைவுகளை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாட்டிற்குள் அல்லது சர்வதேச அளவில் ஏதேனும் ஒரு சிக்கல் அல்லது முரண்பாட்டை நாம் கண்டிப்பாக சாதாரணமாக நினைக்கக் கூடாது. நாம் பொருளாதார சிக்கல்களையோ அல்லது குடியேற்றம் அல்லது வேறு எந்த நெருக்கடியையும் கையாளும்போது நாம் சகிப்புத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். மேலும் நம்மைப் பிரிக்கக் கூடிய தடைகளைத் தகர்க்க முயற்சிக்க வேண்டும். எல்லா விதமான பிரச்சனைகளையும் பேச்சுவார்த்தை, பரஸ்பரம் விட்டுக் கொடுத்தல் மற்றும் ஒருவருக்கொருவரின் உரிமைகளை நிறைவேற்றுதல் மூலம் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். மேலும் நாம் நமது அனைத்து சக்திகளையும், திறன்களையும் பயன்படுத்தி அமைதியை நிலைநாட்டுவதற்காகவே பயன்படுத்த வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மை அவ்வாறு செய்திட வைப்பானாக. ஆமீன். இந்த வார்த்தைகளோடு இங்கு இந்த மாலைப்பொழுதில் நம்முடன் கலந்து கொண்ட நமது விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி.

(தமிழில்: ஃபயாஸ் அஸ்லம் ஷேக் சாஹிப், சென்னை)

......☆......☆......☆......

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

காலத்தின் தேவை மற்றும் நிலைமைகளின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப உலகத்தில் அமைதியை நிலைநாட்ட அல்லாஹ்வின் அருளால் அன்னார் எத்தகைய பணிகளைச் செய்தார்களோ அத்தகைய பணிகளைப் பற்றி நாம் மட்டும் நமது நூல்களிலும், பத்திரிகைகளிலும் அன்னாரைப் பற்றி 'அமைதியின் தூதுவர்' என்று குறிப்பிடவில்லை. மாறாக, அந்நியர்களும் கூட உலகத்தில் அமைதியை பரப்பிவதில் அன்னாரைப் போன்று எவரும் இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றனர்.

கடந்த அமெரிக்கா சுற்றுப் பயணத்தின்போது 21 அக்டோபர் 2018 அன்று ஹுஸூர் அவர்கள் வாஷிங்டனிலிருந்து ஹோஸ்டனிற்கு விமானத்தில் செல்ல இருந்தது. 12:45 மணிக்கு ஹுஸூர் அவர்கள் விமான நிலையம் வருகை தந்தார்கள். UNITED AIRLINE ன் மூத்த அதிகாரி ஹுஸூர் அவர்களை வரவேற்றார். மேலும் 2 மணிக்கு விமானம் வந்தது. 2:32 மணிக்கு UNITED AIRLINE ன் விமானமான UA 484 வாஷிடங்டனின் Dulles Airport லிருந்து ஹோஸ்டன் ஜார்ஜ் புஷ் இன்டர்நேஷனல் விமான நிலையத்திற்கு புறப்பட்டது. விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திற்குப் பிறகு விமானத்தில் கேப்டன் தரப்பிலிருந்து இந்த அறிவிப்பு செய்யப்பட்டது:

**"ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது நமது விமானத்தில் பயணம் செய்கின்றார்கள். நாம் அவர்களை வரவேற்கின்றோம்..... ஹுஸூர் அவர்கள் அமைதியின் உலகளாவிய தூதுவர் ஆவார்கள். மேலும் உலகத்தில் மார்க்க சுதந்திரம், சகோதரத்துவம் மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்து வருகின்றார்கள்"**

(உருது பத்ர் 31 ஜனவரி 2019 பக்கம் 10 பத்தி 1)

உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளின் பாராளுமன்றங்களில் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை எடுத்துரைக்கும் நற்பாக்கியம் ஹுஸூர் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

ஹுஸூர்அவர்கள் 22 அக்டோபர் 2008 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிகழ்த்தினார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நமது வாழ்க்கையின் ஒரே நோக்கம் என்னவென்றால், நாம் உலகத்திற்கு முன்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிகளையும், இஸ்லாத்தின் அழகிய போதனைகளையும் முன் வைப்பதே ஆகும்.

சமூகத்தில் அமைதி நிலைபெற இஸ்லாம் கூறுகின்ற போதனை என்னவென்றால், நீதியிலிருந்து தமது பாதங்களை ஒருபோதும் பின்வாங்கக்கூடாது. எதுவரை என்றால் எதிரிகளுடன் கூட நீதியுடன் நடக்க வேண்டும் என்பதாகும். இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாற்றிலிருந்து நமக்கு தெரிய வருவது என்னவென்றால், இந்த போதனைகளின்படி செயல்பட்டவாறு நீதியின் அனைத்து எதிர்பார்ப்புகளும் முழுமையான முறையில் செயல்படுத்தப்பட்டது. மேலும் எவர்கள் முஸ்லிம்களுக்கு கடுமையான அநீதியை இழைத்தார்களோ அத்தகையவர்களை மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பழிவாங்கவில்லை. மாறாக, அவர்களை மன்னித்து விட்டார்கள். இன்னும் சொல்வதென்றால், அவர்களை தத்தமது மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கும் அனுமதியை வழங்கினார்கள் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது.

இந்த நிகழ்ச்சில் கலந்து கொண்ட மதிப்பிற்குரிய ஹேஸல் சாஹிபா (Secretry of state local Government for community) கூறுகின்றார்: என்னால் உண்மையுடன் கூற முடியும். அதாவது இந்த சொற்பொழிவு மிகுந்த தாக்கத்திற்கு ஆளாக்கியுள்ளதை நான் பார்க்கின்றேன். இத்தகைய சொற்பொழிவை அரசியல்வாதிகள் மிகக்குறைவாகவே நிகழ்த்துகின்றனர். இவ்வாறான சொற்பொழிவை மிகக் குறைவாகவே கேட்க முடிகிறது.

அல்லாஹ் உலகத்தை விரைவாக இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை ஏற்றுக் கொள்ளச் செய்வானாக. ஆமீன்

(மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர்)

# ஆங்கிலேய அரசாங்கத்துடன் வாளால் போர் செய்யாததற்கான காரணங்கள்

**ஹஸ்ரத் மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் சாஹிப் (ரலி)**
**(தமிழில்: மவ்லவி அபுல் ஹஸன் சாஹிப்)**

ஹஸ்ரத் மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் சாஹிப் (ரலி) அவர்களின் எல்லோராலும் அறியப்பட்ட பிரசித்திப் பெற்ற இந்த கட்டுரை ரூஹானி கஸாயினின் தொகுதி 17 லிருந்து எடுக்கப்பட்டதாகும். அதில் அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதிய ''ஆங்கிலேய அரசாங்கம் மற்றும் ஜிஹாத்'' என்ற புத்தகத்தை அறிமுகப்படுத்தி அதை தழுவியவாறு இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்கள்.

அன்னார் ஆங்கிலேயருக்கு எதிராக வாளைக் கொண்டு போர் செய்வது தடுக்கப்பட்டுள்ளது என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றை ஆமோதித்தவாறு ஃபத்வாவை (மார்க்கத் தீர்ப்பை) பிறப்பித்த எண்ணற்ற உலமாக்களின் சான்றை ஆதாரத்துடன் இக்கட்டுரையில் நிரூபித்துள்ளார்கள். மேலும் ஜிஹாதிற்கு பல அர்த்தங்கள் உள்ளன என்பதையும் கூறியுள்ளார்கள். இந்தக் கருத்தானது பத்ர் பத்திரிகையை வாசிக்கக் கூடியவர்களுக்கு அறிவை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

இந்தப் பத்திரிகை 22 மே 1900 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. இந்தப் பத்திரிகையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜிஹாதின் உண்மைத்துவம் மற்றும் தத்துவத்தைக் கூறியுள்ளார்கள்.மேலும் திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் வரலாற்றிலிருந்து ஜிஹாத் தொடர்பாக இஸ்லாத்தின் ஆரம்ப காலகட்டத்தில் முஸ்லிம்கள் இக்கட்டான சூழ்நிலையில் செய்யப்பட்ட போர்கள் அனைத்தும், தற்காலிகமானதாகவும், தற்காப்பிற்காகவும், மார்க்க சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்காகவும் செய்யப்பட்ட போராக இருந்தது என்பதை அன்னார் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவ்வாறு இல்லை என்றால் இஸ்லாத்தை விட சாந்தி, சமாதானம், அமைதி, சமரசத்தை முன்னோடியாகக் கொண்ட வேறு எந்த சிறந்த மார்க்கமும் இருக்க முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய எண்ணற்ற புத்தகங்களில் ஜிஹாது தொடர்பான விவாதங்கள் மீது கவனம் செலுத்தியுள்ளார்கள். அதற்கான காரணம் என்னவென்றால், அன்னாரின் இயக்கம் உலகிலுள்ள அனைத்து மார்க்கங்கள் மீதும் அத்தாட்சி மற்றும் ஆதாரங்களைக் கொண்டு முடிவுக்கு கொண்டு வந்து இஸ்லாத்தின் வெற்றியை நிரூபிக்க வேண்டியதாக இருந்தது. மேலும் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது. இஸ்லாம் மார்க்கம் தொடர்பான போதனைகளில் கட்டாயப்படுத்துதலையும், நிர்பந்தத்தையும் கையாளுகின்றது என்ற மிகப்பெரிய ஆட்சேபனை இஸ்லாத்தின் மீது கிழக்கத்திய தத்துவவாதிகள் மற்றும் மேற்கத்திய எழுத்தாளர்களுக்கு இருந்தது.

இலண்டனிலிருந்து வெளிவருகின்ற The Twenteth Century என்ற ஆங்கிலப் பத்திரிகையின் டிசம்பர் 1877 ஆம் ஆண்டு வெளியான இதழின் 832 ஆம் பக்கத்தில் பாதிரி மேலிக்கம் மீக்கால் என்பவர் இவ்வாறு எழுதுகிறார்:

திருக்குர்ஆன் உலகை இரண்டு பாகமாக பிரிக்கின்றது. ஒன்று, தாருல் இஸ்லாம் அதாவது இஸ்லாமிய நாடு. மற்றொன்று தாருல் ஹரப் அதாவது எதிரியின் நாடு. எவர்கள் முஸ்லிமாக இல்லையோ அவர்கள் அனைவரும் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் ஆவார்கள். இதன் அடிப்படையில் உண்மையான முஸ்லிமுடைய கடமை என்னவென்றால், நிராகரிப்பவர்களுக்கு எதிராக போர் செய்ய வேண்டும். எதுவரை என்றால் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது கொலை செய்யப்பட வேண்டும். இதையே ஜிஹாத் அல்லது புனிதப் போர் என்று கூறுகிறார்கள். உலகில் உள்ள அனைத்து நிராகரிப்பாளர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அவர்கள் ஒவ்வொருவரும் கொலை செய்யப்பட வேண்டும் என்ற நிலையில்தான் இதை முடிவுக்குக் கொண்டு வர முடியும். ஆக இஸ்லாத்தின் கலீஃபாவின் புனிதமான கடமை என்னவென்றால், சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போதெல்லாம் முஸ்லிமல்லாத நாட்டின் மீது ஜிஹாத் செய்ய வேண்டும்.

Sir William Muir என்பவர் 1877 ஆம் ஆண்டு இலண்டனில் அச்சடிக்கப்பட்ட Life of Muhammad என்ற புத்தகத்தின் 533 ஆம் பக்கத்தில் இவ்வாறு எழுதுகிறார்.

மார்க்க வெறுப்பு சுதந்திரத்தின் இடத்தையும் நிர்பந்தப்படுத்துதல் ஊக்குவிக்கின்ற இடத்தையும் பெற்று விட்டது. மேலும் இஸ்லாத்தின் தனித்துவமான அடையாளமாக தற்போது எங்கு நிராகரிப்பாளர்களைப் பார்த்தாலும் கொன்று விடுங்கள் என்ற சுலோகமாகவே இருக்கின்றது.

Major Aasbran 'Islam Under The Arab Role' என்கிற தன்னுடைய நூலில் 46 வது பக்கத்தில் ஜிஹாத் என்ற தலைப்பின்கீழ் இவ்வாறு எழுதுகிறார்:

அவர்களுக்கு துன்பங்கள் கொடுக்கப்பட்டு வந்த நேரத்தில் அவர்களால் விதிக்கப்பட்ட விதிகளில் மார்க்கத்தில் எந்த ஒரு நிர்பந்தமும் இருக்கக்கூடாது என்ற ஒரு நிபந்தனையும் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் வெற்றியின் போதை அவர்களின் நற்சிந்தனையின் ஓசையை பல காலத்திற்கு முன்னரே அமைதிப்படுத்தி விட்டது. அன்னார் போருக்கான ஒரு பொதுவான ஆணையைப் பிறப்பித்து விட்டார்கள். அதன் காரணமாக அவர்கள் ஒரு கையில் திருக்குர்ஆனையும், மறு கையில் வாளையும் எடுத்துக் கொண்டு எரிந்து கொண்டிருக்கும் நரகத்தின் தீப்பொறிகள் மற்றும் அழிந்து கொண்டிருக்கும் குடும்பத்தினர்களுக்கு மத்தியில் தன்னுடைய மார்க்கத்தைப் பரப்பினார்கள்.

கிழக்கத்தியர்கள் ஜிஹாதின் உண்மைத்துவத்தை புரியாத காரணத்தினால் இஸ்லாத்தின் முகத்தை மிகவும் அபாயகரமான தோற்றத்தில் வெளிப்படுத்தியுள்ளார்கள். அதனால்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது எண்ணற்ற நூல்களில் ஜிஹாத் தொடர்பான கோட்பாட்டின் மீது விவாதம் செய்து அதன் உண்மை நிலையை வெளிப்படுத்தியுள்ளார்கள். இது அல்லாமல் வேறு சில காரணங்களும் இந்த கோட்பாட்டின் தொடர்பாக மீண்டும் மீண்டும் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

(1) அன்னார் தன்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என வாதித்தார்கள். முஸ்லிம்களுடைய சிந்தனையோ வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றி அவர்கள் நிராகரிப்பாளர்களுடன் போர் புரிவார்கள். மேலும் இறுதி நாளில் வாளைக் கொண்டு இஸ்லாத்தைப் பரப்புவார்கள் என்பதாக இருந்தது.

ஆக இமாம் நத்வி அவர்கள் யளவுல் ஜிஸ்யா என்ற ஹதீஸிற்கு இவ்வாறு விளக்கம் எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றாகிய, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வரியை ரத்து செய்வார்கள்

என்பதன் உண்மையான பொருள், அன்னார் வரியை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மேலும் நிராகரிப்பாளர்களிடமிருந்து அவர்கள் இஸ்லாத்தில் இணையும் வரை மட்டும் அன்னார் ஏற்றுக் கொள்வார்கள் என்பதே ஆகும். அவர்களில் எவர் வரியை செலுத்தி தன்னைத்தானே விடுவிக்க விரும்புவாரோ அது அவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மாறாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அம்மக்களிடமிருந்து இஸ்லாத்தில் இணைவதை மட்டுமே ஏற்றுக் கொள்வார்கள். எவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவரை கொலை செய்து விடுவார்கள். இமாம் அபூ சுலைமான் அல்கத்தபாபி மற்றும் வேறு சில உலமாக்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றாகிய யளவுல் ஜிஸ்யா அதாவது வரியை ரத்து செய்வார் என்பதற்கு இந்த பொருளையே கூறியுள்ளார்கள்.

(நத்வியின் விளக்கவுரை, சஹீஹ் முஸ்லிம் தொகுதி 1 பக்கம் 87 தில்லியில் அச்சிடப்பட்டது & சஹீஹ் புகாரியின் விளக்க நூலாகிய ஃபத்ஹுல் பாரி, இப்னு ஹஜர் அஸ்கலானீ தொகுதி 2 பக்கம் 315)

அதேபோன்று போபாலைச் சார்ந்த நவாப் மவ்லவி சித்தீக் ஹுஸைன் கான் சாஹிப் அவர்கள் ஹிஜஜுல் கராமா என்கிற தன்னுடைய புத்தகத்தின் 374 ஆவது பக்கத்திலும், அன்னாரின் புதல்வர் நவாப் மவ்லவி நூருல் ஹுஸைன் கான் சாஹிப் என்பவர் 'இக்தரபுஸ் ஸாஆ' என்கிற தன்னுடைய புத்தகத்திலும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் போர்கள் தொடர்பான கருத்துக்களை இவ்வாறு எழுதுகிறார்கள்:

பூமியின் மேற்பரப்பில் உள்ள அனைத்து அரசர்களும் கட்டுப்பாட்டின்கீழ் வந்து விடுவார்கள். மஹ்தி தன்னுடைய ஒரு படையை இந்தியாவிற்கு அனுப்பி வைப்பார். அங்குள்ள அரசர்கள் கழுத்தில் சங்கிலி அணிந்தவாறு அன்னாருக்கு முன் ஆஜர்படுத்தப்படுவார்கள். இந்தியாவின் அனைத்து புதையல்களும் பைத்துல் முகத்தஸிற்கு அனுப்பி வைக்கப்படும். அந்த அனைத்து கருவூலங்களில் முகப்பு பைத்துல் முகத்தஸாக இருக்கும். இதே நிலையில் பல ஆண்டுகாலம் வரை மஹ்தி ஆட்சி புரிவார்.

(இக்தரபுஸ் ஸாஆ பக்கம் 80, ஹிஜ்ரி 1309 ஆம் ஆண்டு பனாரஸில் அச்சிடப்பட்டது)

ஆக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறுதிநாளில் வாளைக் கொண்டு நிராகரிப்பாளர்களை முஸ்லிமாக ஆக்குவார்கள். அல்லது வாளைக் கொண்டு அவர்களைக் கொலை செய்வார்கள் என்ற முஸ்லிம்களின் இந்த கொள்கைக்கேற்ப தன்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்று வாதித்த காரணத்தினால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஸ்தாபகரை ஆங்கிலேய அரசாங்கம் சந்தேகப் பார்வையுடன் பார்த்தது.

(2) இரண்டாவது காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னை மஹ்தி என்று வாதிப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னால் சூடானி மஹ்தி (1871–1882) அக்காலகட்டத்தில் தன்னை மஹ்தி என்று வாதித்தார். மேலும் சூடான் நாட்டின் போருக்கான அறிவிப்பைச் செய்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக போர் மற்றும் சண்டைச் சச்சரவை ஏற்படுத்தினார். இறுதியில் 1882 ஆம் ஆண்டில் அவர் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயர்கள் அதை மறக்கவுமில்லை. அதனால்தான் மஹ்தி என்று வாதம் செய்தவரை ஆங்கிலேய அரசாங்கம் நல்ல கண்ணோட்டத்துடன் பார்ப்பத்தில்லை. மேலும் அப்படிப்பட்ட நபரை அது ஏற்றுக் கொள்வதுமில்லை.

(3) மூன்றாவது காரணம் என்னவென்றால், சில உலமாக்கள் அன்னாருக்கு எதிராக அரசாங்கத்திடம் தவறான கருத்தைக் கூறி வந்தனர். மேலும் அரசாங்கத்திற்கு சூடான் மஹ்தியின் காலத்தை நினைவூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக அரசாங்கத்தை தூண்டி விட்டனர். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் பணி இதுவாகவே இருந்தது.

அவர் இஷாஅத்துஸ் சுன்னா என்ற தன்னுடைய பத்திரிகையில் இவ்வாறு எழுதுகிறார்:

அரசாங்கத்திற்கு அவர் மீது நம்பிக்கை வைப்பது உகந்தது அல்ல. மேலும் அவர் தொடர்பான அச்சம் இருந்து கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் சூடானி மஹ்தியிடமிருந்து ஏற்படாத அளவிற்கு இந்த காதியானி மஹ்தியிடமிருது மிகவும் அதிகமான இழப்புகள் ஏற்படும்.

(இஷாஅத்துஸ் சுன்னா, இதழ் 16, எண் 6 அடிக்குறிப்பு பக்கம் 167 – 1893 ஆம் ஆண்டு)

நான்காவது காரணம் என்னவென்றால், பாதிரிமார்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஆதாரங்கள் மூலமாக எதிர்கொள்ள முடியாமல் தோல்வியை தழுவினார்கள். அந்த தோல்வியின் காரணமாக அவர்கள் நம்முடைய மார்க்கத்தின் ஒருமித்த சிந்தனை கொண்ட ஆங்கிலேயே அரசாங்கத்திடம் அன்னார் தொடர்பாக தப்பெண்ணத்தை ஏற்படுத்தி அவரை கைது செய்தோ அல்லது அவர் மீது கட்டுப்பாட்டை விதித்தோ இஸ்லாத்தின் பிரச்சாரத்திலிருந்து விலக்கி வைப்பதன் மூலம் தம்முடைய பழி தீர்க்கும் முறையை எளிதாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணினார்கள்.

இதன் அடிப்படையில் கிறித்தவ பாதிரிமார்களால் ஜோடிக்கப்பட்ட பொய்யான கொலை வழக்கில் Father Henry Martin Clerk என்பவனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக சாட்சி கூறுவதற்காக நிறுத்தினார்கள்.

அவன் இவ்வாறு (பொய்) சாட்சி கூறினான்: மிர்ஸா சாஹிப் தொடர்பாக என்னுடைய கருத்து என்னவென்றால், மிகவும் ஒரு மோசமான குழப்பவாதி மற்றும் அபாயகரமான மனிதனை விட சிறந்தவராக நான் அவரை கருதுவதில்லை.

(ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 200)

பாதிரி ஹேன்றி மார்டின் கிளார்க் ஆங்கிலேய அரசாங்க அதிகாரிகளுடன் நன்கு பழகக் கூடியவனாக இருந்தான். அவர்களுடனேயே அவனுடைய உண்ணுதல், பருகுதல், அமருதல், எழுதல் இருந்தது. அதன் காரணத்தினால் ஆங்கிலேய அரசாங்க அதிகாரிகளிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக கூறி வந்தான். அதேபோன்று பாதிரி இமாமுத்தீன் போன்றவர்களும் தங்களுடைய எழுத்துக்களில் அன்னாருக்கு எதிராக இதுபோன்ற அவதூறுகளை எழுதி வந்தார்கள்.

(5) ஐந்தாவது காரணம் என்னவென்றால், 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சி நடந்து முடிந்து சிறிது காலமே கடந்த நிலையில் அன்னார் தன்னை வாக்களிக்கப்பட்ட மஹ்தி, மஸீஹ் என வாதித்தார்கள். அந்த கிளர்ச்சியில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் இருவரும் கலந்து கொண்டார்கள். ஆனால் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் தன்னுடைய ஆட்சியை மீண்டும் நிறுவ வேண்டும் என்பதற்காகவே அனைத்து குழப்பத்தையும் ஏற்படுத்தினார்கள் என்று கூறியவாறு விலகிக் கொண்டார்கள்.

மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் இறைக் கட்டளைக்கு ஏற்ப தன்னை மஹ்தி என்று வாதித்திருந்தார்கள். ஆங்கிலேயர்களின் பார்வையில் அது ஒரு கிளர்ச்சியாகவே கருதப்பட்டது. அதற்கான காரணம் என்னவென்றால், ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த முகலாய சாம்ராஜ்யத்தை சார்ந்தவராக இருந்தார்களோ அந்த ஆட்சிக்குத்தான் ஆங்கிலேயர்கள் தங்களுடைய கைகளால் 1857 ஆம் ஆண்டு முற்றுப்புள்ளி வைத்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அன்னார் தன்னை மஹ்தி என்று வாதம் செய்தது, மறைந்து போன தன்னுடைய குடும்பத்தின் மகத்துவம் மற்றும் ஆட்சியை மீண்டும் நிலைபெறச் செய்வதற்காகவே என்று ஆங்கிலேயர்கள் என்னுவது சரியானதுதான்.

குறிப்பாக மவ்லவி மற்றும் பாதிரிமார்களும் அன்னாருக்கு எதிராக ஆரசாங்கத்தை இரவும் பகலும் அயராமல் தூண்டி விட்டுக் கொண்டே இருந்தார்கள். மேலும் இரகசியமான முறையில் அரசாங்கத்திற்கு அன்னார் தொடர்பான தப்பெண்ணத்தை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். இந்த சூழ்நிலைகள் மற்றும் காரணங்களின் அடிப்படையில்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் ஜிஹாத் தொடர்பாக முஸ்லிம்களின் தவறான கருத்துக்களையும், கண்ணோட்டத்தையும் ரத்து செய்யும் விதமாக ஜிஹாதின் உண்மை நிலையை தெளிவாக விளக்கிக் கூறுவதற்காகவே குறிப்பாக இந்தப் பத்திரிகையை எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1857 ஆம் ஆண்டில் நடந்த கிளர்ச்சியின்போது அன்னாரின் குடும்பம் அரசாங்கத்திற்கு செய்த தொண்டை மீண்டும் மீண்டும் நினைவு கூறுவதற்கான காரணமும், மேலும் நான் மஹ்தி என்று வாதித்ததற்கான நோக்கம், என்னுடைய குடும்பத்திலிருந்து மறைந்துபோன சாம்ராஜ்ஜியத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவே இருக்குமென்றால் ஆங்கிலேயர்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் ஏன் என்னுடைய குடும்பத்தார்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தையும் கூற வேண்டும் என்பதுதான்.

## ஆங்கிலேய அரசாங்கத்துடன் வாளால் ஜிஹாது செய்யாததற்கான காரணம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆங்கிலேயார்களுடன் வாளைக் கொண்டு ஜிஹாது செய்வதை ஆகுமானதல்ல என்று கூறியதற்கான காரணம் என்னவென்றால், இஸ்லாமிய சட்டத்தின் பார்வையில் சமாதானம், நீதியை நிலைநாட்டக்கூடிய, முழுமையான மார்க்க சுதந்திரம் வழங்கக்கூடிய, முஸ்லிம்களின் உடமைகள் மற்றும் உயிர்களை பாதுகாக்கக்கூடிய அரசாங்கத்திற்கு எதிராக வாளால் ஜிஹாத் செய்வது ஆகுமானதல்ல.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆங்கிலேய அரசாங்கத்தை புகழ்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை எழுப்புவர்களை நோக்கி அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

"அறிவீனர்களே! நான் இந்த அரசாங்கத்தை புகழவில்லை. மாறாக, உண்மையான விஷயம் என்னவென்றால் இஸ்லாம் மார்க்கத்திலும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் அரசாங்கம் சிறிதளவும் தலையிடுவதில்லை. மேலும் அது தன்னுடைய மார்க்கத்தை முன்னேற்றமடையச் செய்வதற்காக நம்மீது எவ்வித ஆயுதங்களையும் பயன்படுத்தவில்லை. அப்படிப்பட்ட அரசாங்கத்திடம் திருக்குர்ஆனின் கருத்திற்கேற்ப மார்க்கப் போர் புரிவது ஹராமாகும். ஏனென்றால் இந்த அரசாங்கம் எந்தவொரு மார்க்கப் போரும் செய்யவில்லை"

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 75 அடிக்குறிப்பு பக்கம் 69)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: "அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுபடக்கூடிய கருத்தாகிய இஸ்லாமிய சட்டத்தின் தெளிவான இந்த தீர்ப்பானது அதாவது முஸ்லிம்கள் அமைதி, சமாதானம் மற்றும் சுதந்திரமான வாழ்க்கையை நடத்தக்கூடிய மேலும் நன்கொடைகள், வெகுமதிகள் வழங்கி நல்ல முறையில் நடந்து கொள்கின்ற, நன்மை மற்றும் நேர்வழியை பரப்புவதற்காக முழு ஒத்துழைப்பு தருகின்ற அரசாங்கத்தின் நிழலின் கீழ் வாழ்கின்ற முஸ்லிம்கள் அந்த அரசாங்கத்திற்கு எதிராக சண்டை மற்றும் போர் புரிவது முற்றிலும் (ஹராமாகும்) ஆகுமானதல்ல." (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 66)

13 வது நூற்றாண்டின் முஜத்தித் ஆக இருந்த ஹஸ்ரத் செய்யது அஹ்மது பரேல்வி (ரஹ்) அவர்களும் அதே கொள்கையில்தான் இருந்தார்கள். மவ்லானா முஹம்மது ஜஃபர் தானீஸ்ரி தொடர்பாக மவ்லானா முஹம்மது அலி ஜலன்தரி எழுதுகின்றார்கள்: இந்திய வரலாற்றிலும் அரசியலிலும் மவ்லானா ஜஃபர் தானீஸ்ரி மற்றும் மவ்லானா ஃபஸ்லே ஹக் கைர்ஆபாதி பெயரையும், அவர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக எடுத்த முயற்சியையும் அறியாத எந்த ஒரு மாணவரும் இருக்க முடியாது.

(ஆஸாத் 17 ஏப்ரல் 1950)

ஸவானே அஹ்மது என்று நூலாசிரியர் எழுதுகின்றார்: தாங்கள் இஸ்லாம் மார்க்கத்தை நிராகரிக்கக்கூடிய ஆங்கிலேயர்கள். மேலும் அந்த நாட்டின் ஆட்சியாளர்களாக இருக்கக்கூடிய ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போர் செய்து இந்திய நாட்டை ஏன் கைப்பற்றவில்லை என ஒருவர் கேட்டார்? அதற்கு அவர் இவ்வாறு பதிலளிக்கிறார்: ஆங்கிலேய அரசாங்கம் இஸ்லாத்தை நிராகரித்ததுதான். ஆனால் முஸ்லிம்கள் மீது எந்தவொரு அநீதியையும், கொடுமையையும் இழைக்கவில்லை. மேலும் அவர்களின் மார்க்கக் கடமையை செலுத்துவதிலிருந்தும், வணக்க வழிபாடுகளிலிருந்தும் அவர்களை தடுப்பதில்லை. நாம் அவர்களுடைய நாட்டில் பகிரங்கமான முறையில் அறிவுரை செய்து கொண்டிருக்கின்றோம். நம்முடைய மார்க்கத்தை நடைமுறைப்படுத்துகின்றோம். அதை ஒருபோதும் அவர்கள் தடுத்ததுமில்லை; தவறாக கருதவுமில்லை.

அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எட்ட வைத்தல் மற்றும் தூதர்களுக்கெல்லாம் தலைவராக திகழ்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தை உயிர்ப்பிக்க வேண்டும் என்பதே நம்முடைய உண்மையான நோக்கம் ஆகும். அதை நாம் இந்த நாட்டில் எவ்வித தடையுமின்றி செய்து வருகின்றோம். அவ்வாறிருக்க நாம் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிராக எந்தக் காரணத்தைக் கொண்டு போர் செய்ய முடியும். மேலும் இரண்டு பிரிவினர்களும் எந்தவொரு காரணமுமின்றி இரத்தம் சிந்துதல் என்பது இஸ்லாமிய சட்டத்திற்கு எதிரானதாகும். இந்த பதிலைக் கேட்டு அந்த கேள்வி கேட்டவர் அமைதியாகி விட்டார். மேலும் ஜிஹாதின் உண்மையான நோக்கத்தை அவர் புரிந்து கொண்டார்.

(ஸவானே அஹ்மது பக்கம் 71)

இதே புத்தகத்தில் 139 வது பக்கத்தில் எழுதுகிறார்: செய்யது சாஹிப் அவர்களுக்கும் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிராக ஜிஹாத் செய்வதற்கான எண்ணம் ஒருபோதும் இருந்ததில்லை.

ஒருமுறை அன்னாரிடம், ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிராக ஜிஹாத் செய்வது சரியா? தவறா? என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அன்னார் இவ்வாறு கூறினார்கள்: நன்னடத்தை, நல்லுள்ளம் கொண்ட மற்றும் பயங்கரவாதம் அல்லாத அரசாங்கத்திற்கு எதிராக ஜிஹாத் செய்வது எவ்வகையிலும் சரியில்லை. (ஸவானே அஹ்மது பக்கம் 57)

அதேபோன்று மர்ஹூம் சர் செய்யது அஹ்மது கான் அவர்கள் 'ரிஸாலா பகாவதே ஹிந்த்' என்ற தன்னுடைய நூலில்

ஆதாரங்களுடன் இந்தக் கருத்தை நிரூபித்துள்ளார்கள். அதாவது 1857 ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சியானது ஜிஹாத் அல்ல. மேலும் முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிராக ஜிஹாத் (போர்) செய்வதை ஆகுமானதாக கருதவில்லை.

அதேபோன்று மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அவர்களும் 'அல் இக்தஸாதி ஃபீ மஸாயிலுல் ஜிஹாத்' என்ற ஒரு பத்திரிகையை 1876 ஆம் ஆண்டு எழுதி அந்த பத்திரிகை தொடர்பாக இஸ்லாமிய உலமாக்களின் கருத்துக்களை பெறுவதற்காக அவர் லாஹூரிலிருந்து அஹமதாபாத் மற்றும் பட்னா வரை பயணத்தை மேற்கொண்டு பலதரப்பட்ட இஸ்லாமிய அமைப்புகளின் மிகப்பெரிய ஆலிம்களுக்கு இந்த பத்திரிகையை ஒவ்வொரு எழுத்தாக வாசித்துக்காட்டி அவர்களின் ஒன்றுபட்ட கருத்தை பெற்றுள்ளார்கள். அந்த புத்தகத்தில் அவர்கள் ஆதாரங்களை நினைவு கூர்ந்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:

அந்த ஆதாரங்களிலிருந்து மிகத் தெளிவாக விளங்கக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்திய நாடு கிறித்துவ அரசாங்க ஆதிக்கத்தின்கீழ் இருந்தபோதிலும் இஸ்லாமிய நாடாகவே இருக்கின்றது. எனவே அந்த நாட்டின் மீது எந்த அரசராலும் அவர் அரபியாக இருந்தாலும் சரி; அஜமியாக இருந்தாலும் சரி; சூடானி மஹ்தியாக இருந்தாலும் சரி; ஹஸ்ரத் சுல்தான் ஷா ஈரானியாக இருந்தாலும் சரி; அமீர் கராஸான் ஆக இருந்தாலும் சரி போர் மற்றும் தாக்குதல் தொடுப்பது ஒருபோதும் ஆகுமானதால்ல.

(அல் இக்தஸாதி ஃபீ மஸாயிலுல் ஜிஹாது பக்கம் 16)

மேலும் இவ்வாறு எழுதுகின்றார்: இஸ்லாமியர்கள் இந்தியாவில் ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுவதும், கிளர்ச்சி செய்வதும் ஹராமாகும்.

(இஷாஅத்துஸ் சுன்னா தொகுதி 6 எண் 10 பக்கம் 187)

மேலும் அவர் எழுதுகின்றார்: இந்த அமைதி, சுதந்திரம் மற்றும் ஆங்கிலேய அரசாங்கத்தின் நேர்மறையான ஆளுமை ஆகியவற்றை பார்த்து இந்தியாவில் உள்ள அஹ்லே ஹதீஸ் பிரிவினர் இந்த ஆட்சியை சிறந்ததாக கருதுவார்கள். மேலும் இஸ்லாமிய ஆட்சியின் குடிமகனாக இருப்பதை விட ஆங்கிலேய ஆட்சியின் குடிமகனாக இருப்பதையே சிறந்ததாக கருதுகிறார்கள். மேலும் அவர்கள் எங்கு சென்றாலும், எங்கு வாழ்ந்தாலும் (அரபு நாடாக இருந்ததாலும், ரோம் நாடாக இருந்தாலும்) வேற எந்த நாட்டின் அரசாட்சியின் குடிமகனாகவும் இருக்க விரும்பவில்லை.

(இஷாஅத்துஸ் சுன்னா தொகுதி 6 எண் 10 பக்கம் 293)

போபாலைச் சார்ந்த நவாப் மவ்லவி முஹம்மது சித்தீக் ஹஸன் கான், மவ்லவி நஸீர் ஹுஸைன் முஹத்திஸ் தஹ்லவி, மவ்லவி ரஷீது அஹ்மது கங்கோஹி, மவ்லவி அஷ்ரஃப் அலிதான்வி, மவ்லவி அப்துல் அஸீஸ் மற்றும் லூதியானாவைச் சார்ந்த மவ்லவி முஹம்மது முஃப்தி ஆகிய அனைவரின் கொள்கையும் கோட்பாடும் ஃபத்வாவும் (மார்க்கத் தீர்ப்பும்) ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்ப்பது முஸ்லிம்களுக்கு மார்க்கச் சட்டபடி ஹராமாகும் என்பதே ஆகும்.

(மவ்லவி முஹம்மது முஃப்தி லூதியானா அவர்கள் ஹிஜ்ரி 1306 ஆம் ஆண்டு எழுதிய நுஸ்ரத்துல் அப்ரார் என்ற புத்தகத்தை காண்க)

ஜமீன்தார் பத்திரிகையின் ஆசிரியரான மவ்லானா ஸஃபர் அலி கான் அவர்களும் இந்தியாவை இஸ்லாமிய நாடு என்று கூறியவாறு எழுதுகிறார்கள்:

ஜமீன்தார் மற்றும் அதைக் கண்காணிக்கக் கூடியவர்கள் ஆங்கிலேயே அரசாங்கத்தை இறைவனின் நிழலாக எண்ணினார்கள். அரசர்களைப் போல் வழங்கக்கூடிய தன்மை மற்றும் நீதியை நிலைநாட்டுதல் ஆகியவற்றை தங்கள் உள்ளத்தின் வெளிப்பாடாகவும், உளப்பூர்வமாக அவர்களை பாதுகாவலராகவும் கருதியவாறு உலகைக் காக்கின்ற அரசரின் நெற்றியில் இருந்து ஒரு துளி வியர்வைக்கு பகரமாக தங்களுடைய உடலிலிருந்து இரத்தத்தை சிந்துவதற்கு தயாராக இருந்தார்கள். இந்தியாவில் அனைத்து முஸ்லிம்களின் நிலையும் இதுதான்.

(ஜமீன்தார், 11 நவம்பர் 1911)

தொடர்ந்து இவ்வாறு எழுதுகின்றார்: முஸ்லிம்கள் ஒரு கணம் கூட இப்படிப்பட்ட அரசாங்கம் தொடர்பாக தப்பெண்ணம் கொள்ள முடியாது. தீய நடத்தை கொண்ட முஸ்லிம் எவராவது அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்வதற்காக தைரியத்தை வெளிப்படுத்துவார் என்றால் அவர் முஸ்லிமே இல்லை என்பதை முரசு கொட்டி நாம் அறிவிப்போம். (ஜமீன்தார் 11 நவம்பர் 1911)

அதேபோன்று அல்லாமா அஸ்செய்யதுல் ஹாயிரி முஜ்தஹிதுல் அஸ்ர் (ஷியா பிரிவின் தலைவர்) அவர்கள் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தவாறு எழுதுகின்றார்கள்:

எந்த ஆட்சியில் நீதி நிலைநாட்டப்பட்டு மேலும் மார்க்க சுதந்திரத்தை சட்டமாகவே பிரகடனப்படுத்தப்படுகிறதோ அப்படிப்பட்ட ஆட்சியின் நிழலின்கீழ் இருப்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். இதுபோன்ற இதற்கு நிகரான அரசாங்க ஆட்சியை உலகில் வேறு எங்கும் நாம் பார்க்க முடியாது. சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் இஸ்லாத்தை பரப்புவதற்காகவும் அதன் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காகவும் எந்தவொரு அபாயமும், அச்சமுமின்றி முழு சுதந்திரத்துடன் இன்று பகிரங்கமாக சொற்பொழிவு மற்றும் அறிவுரை செய்கின்றீர்கள்.

இதற்கு முன்னால் எந்த அரசாங்கத்திடமிருந்தும் கிடைக்காத அனைத்து விதமான பொருட்களும் இந்த அருளுக்குரிய நற்பேறு பெற்ற ஆட்சி காலத்தில் நமக்கு மிகவும் எளிதாக கிடைக்கிறது. இதற்கு முன்னால் முஸ்லிம் அல்லாத ஆட்சியாளர்கள் காலத்தில் முஸ்லிம்கள் தங்களுடைய பள்ளிவாசலில் பாங்கு கூறவே முடியாத நிலை இருந்தது. அவ்வாறிருக்க மற்ற விஷயங்கள் தொடர்பாக என்ன கூற முடியும்? ஹலாலான பொருளை உண்ணுவதிலிருந்து தடுக்கப்பட்டது. மேலும் முறையாக எந்த ஆய்வும் மேற்கொள்ளப்பட்டதும் கிடையாது...

இதன் காரணமாகவே நான் ஒவ்வொரு ஷிஆவிற்கும் இந்தக் கருணைக்கு பகரமாக (மார்க்க வடிவில் நமக்கு கிடைத்துள்ள சுதந்திரத்தை) மன உறுதியுடன் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு விசுவாசம் உள்ளவராகவும், நன்றி செலுத்தக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் இவ்வாறு நடந்து கொள்வதை இஸ்லாமிய சட்டமும் அவர்களைத் தடுப்பதில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் நீதிமானாக திகழ்ந்த நவ்ஷேர்வான் என்ற மன்னர் ஆட்சியை புகழ்ந்து பெருமையாகவும் கூறியுள்ளார்கள்.

(மவ்இஸாயே தஹ்ரீஃபே குர்ஆன், 24 ஏப்ரல் பக்கம் 67,68 லாஹூரில் அச்சிடப்பட்டது)

அதேபோன்று ஷம்சுல் உலமாக மவ்லானா நஸீர் அஹ்மது தஹ்லவி தில்லியில் உள்ள டவுன் ஹாலில் 5 அக்டோபர் 1888 ஆம் ஆண்டு நிகழ்த்திய தன்னுடைய உரையில் ஆங்கிலேய அரசாங்கம் தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்:

ஆங்கிலேய அரசாங்கம் கொடுங்கோல் ஆட்சி புரிகின்றதா என்ன? தவ்பா! தவ்பா! தாய் தந்தையை விட கருணைமிக்க அரசாங்கமாக இருக்கின்றது.

(மவ்லானா மவ்லவி ஹாஃபிஸ் நஸீர் அஹ்மது தஹ்லவியின் உரையின் தொகுப்பு, தொகுதி 1, பக்கம் 9, 1890 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

தொடர்ந்து கூறுகின்றார்: ஆங்கிலேய அரசாங்கத்தின் ஆட்சியில் நாம் எந்த அளவிற்கு மகிழ்ச்சியாக இருந்தோமோ நம்முடைய தேவைகளை எவ்வாறு அவர்கள் பூர்த்தி செய்தார்களோ வேறு சமுதாயத்தில் அவ்வாறு ஏற்பாடு செய்வதற்கான தகுதி இருந்ததில்லை. (பக்கம் 26)

கண்ணியத்திற்குரிய டாக்டர் சர் செய்யது அஹ்மது கான் அவர்கள் முஸ்லிம் வீரர்களிடம் ஆங்கிலேய அரசாங்கம் தொடர்பாக உரை நிகழ்த்தியவாறு கூறுகின்றார்கள்:

நீதி தவறாத அரசரின் ஆளுமையின்கீழ் குடியுரிமை பெறுவது என்பது உண்மையில் எல்லாம் வல்ல இறைவன் தன் அடியார்கள் மீது செய்த கருணை ஆகும். அனைத்து குடிமக்களும் இந்த நீதி தவறாத மன்னருக்கு நன்றி உணர்வோடு இருக்கின்றார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்தியா மற்றும் இங்கிலாந்து குடிமக்களின் ராணியாக திகழ்கின்ற மகத்துவம் வாய்ந்த மகாராணி விக்டோரிய்யா, அன்னாரின் ஆட்சியும், அரசும் நீண்ட காலமாக நிலைக்கட்டுமாக. மார்க்க சமுதாய பாகுபாடின்றி நம்மீது நீதி மற்றும் நேர்மையுடன் ஆட்சி செய்கின்ற அந்த மகாராணிக்கு இந்தியாவின் குடிமக்களாகிய நாம் தலை முதல் பாதம் வரை விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு செய்வது நம்முடைய மற்றும் ஒளிமயமான மார்க்கத்தின் போதனையாகும். நாம் அவர்களின் ஆட்சிக்கு விசுவாசம் உள்ளவர்களாக திகழ்ந்து நன்றி செலுத்துவது நம்மீது கடமையாகும்.

(கண்ணியத்திற்குரிய டாக்டர் சர் செய்யது அஹ்மது கான் அவர்களின் உரையின் தொகுப்பு, டிசம்பர் 1892 பக்கம் 15)

மேலும் 10 மே 1886 ஆம் ஆண்டு அலிகடில் உரை நிகழ்த்தியபோது ஆங்கிலேய அரசாங்கத்துடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறியவாறு கூறுகின்றார்கள்:

என்னுடைய அறிவுரை என்னவென்றால், அரசாங்கத்துடன் உங்களுடைய உள்ளத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். நேர்மையான உள்ளத்துடன் நடந்து கொள்ளுங்கள். மேலும் அரசாங்கத்துடன் எல்லா விதத்திலும் நம்பிக்கையை மேற்கொள்ளுங்கள். (பக்கம் 239)

ஆங்கிலேய அரசாங்கத்துடன் ஜிஹாது செய்வது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த கோட்பாட்டை கூறியுள்ளார்களோ அதே கருத்தைத்தான் அனைத்து பிரசித்தி பெற்ற உலமாக்களும் சான்றுகளைக் கொண்டு உறுதிப்படுத்தி உள்ளார்கள்.

மேலே கூறப்பட்ட கருத்துகளைத் தவிர்த்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் மற்றும் மார்க்க முஸ்லிம் தலைவராக திகழ்கின்ற அஹ்மதி அல்லாத நபரின் (வக்கீல் மலக் முஹம்மது ஜாஃபர்) வாக்குமூலத்தை எடுத்து வைப்பதும் உகந்ததாக இருக்கும். மலக் சாஹிப் எழுதுகின்றார்கள்:

மிர்ஸா சாஹிபின் காலகட்டத்தில் அன்னாருடைய பிரசித்திபெற்ற சக்திவாய்ந்த எதிரிகள் உதாரணமாக முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, பீர் மெஹர் அலி ஷாஹ் கோல்டவி, மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிப் மற்றும் சர் செய்யது அஹ்மது கான் சாஹிப் ஆகிய அனைவரும் மிர்ஸா சாஹிப் எவ்வாறு ஆங்கிலேயர்களுடன் நடந்து கொண்டார்களோ அதேபோன்று இவர்களும் விசுவாசத்துடன் நடந்து கொண்டார்கள். இதன் காரணமாகத்தான் அந்தக் காலத்தில் மிர்ஸா சாஹிப் அவர்களின் கொள்கையை ரத்து செய்தவாறு எழுதப்பட்ட பிரசுரங்களில் அன்னார் தங்களுடைய போதனைகளில் அடிமைத்தனத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை செய்துள்ளதாக எங்குமே கூறப்படவில்லை.

(அஹ்மதிய்யா தஹ்ரீக் பக்கம் 243)

சுருக்கமாக அன்னார் ஆங்கிலேய அரசாங்கத்தை புகழ்ந்து கூறியதும், அதனுடன் விசுவாசமாக நடந்து கொண்டதற்கான காரணம் இந்த நிபதந்தனையின் அடிப்படையில்தான்:

(1) அந்த ஆங்கிலேய அரசாங்கம் பஞ்சாபில் உள்ள முஸ்லிம்களுக்கு சீக்கிய அரசாங்கத்தின் கொடுமையிலிருந்து இரட்சிப்பைப் பெற்றுத் தந்தது. (2) அந்த ஆட்சியானது நாட்டில் அமைதியை நிலைநாட்டியது. (3) அந்த ஆட்சி நாட்டில் முழுமையான சுதந்திரத்தை வழங்கியது.

## ஜிஹாத் அதாவது வாளால் போர் செய்வது என்பது தடுக்கப்பட்டதற்கான மற்றொரு காரணம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாளைக் கொண்டு ஜிஹாத் செய்வது தடுக்கப்பட்டுள்ளது என்று கூறியவாறு இந்த கருத்தை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார்கள். அதாவது இந்த நாட்டில் மற்றும் இந்த காலத்தில் ஜிஹாத் வாளைக் கொண்டு போர் புரிதல் என்பது தடுக்கப்பட்டதற்கான காரணம் என்னவென்றால், அதற்கான நிபந்தனைகள் பொருந்தாததே ஆகும்.

ஆக இது தொடர்பாக அன்னார் ஹகீக்கத்துல் மஹ்தி என்ற புத்தகத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஜிஹாத் செய்வதற்கான எந்த ஒரு ஆகுமான காரணமும் இல்லாததால் தற்போதைய நாட்களில் வாளைக் கொண்டு போர் செய்வதற்கான அவசியமே இல்லாமல் போயிற்று.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: (காஃபிர்கள்) நிகராகரிப்பாளர்கள் நமக்கு எதிராக எதை மேற்கொள்கிறார்களோ அதையே நாமும் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டும் என்பதே நமக்கு வழங்கப்பட்ட கட்டளையாகும். அல்லது நிராகரிப்பாளர்கள் நம்மை எவ்வாறு நடத்துகிறார்களோ அப்படியே நாமும் அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும். எதுவரை அவர்கள் நமக்கு எதிராக வாளை எடுக்கவில்லையோ அதுவரை நாமும் அவர்களுக்கு எதிராக வாளை எடுக்கக்கூடாது.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 454)

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஜிஹாதிற்கான காரணங்கள் அல்லது நிபந்தனைகள் இந்த காலகட்டத்தில் இந்த நகரங்களில் காணப்படவில்லை என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை.

(தொஹ்ஃபா கோல்டுவிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 82)

இதே கருத்தைத்தான் நவாப் மவ்லவி சித்தீக் ஹுஸைன் கான் அவர்களும் தர்ஜுமான் வஹாபிய்யா என்ற நூலில் 20 வது பக்கத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: மார்க்கச் சட்டத்தின் விதிமுறைகள் பொருந்தாமல் இமாம் இல்லாத நிலையிலும் ஜிஹாத் செய்வத ஒருபோதும் அனுமதிக்கப்பட்டதல்ல.

மேலும் மாணவி நஸீர் கான் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: இஸ்லாம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மட்டும்தான் ஜிஹாத் செய்வதற்கான அனுமதி வழங்கியுள்ளது. நாட்டை வெற்றி கொள்ள வேண்டும் என்ற மன இச்சையை

முழுமைப்படுத்துவதற்காக அல்ல. மாறாக தலைமைத்துவம் மற்றும் இஸ்லாமிய ஆட்சி இருக்க வேண்டும் என்பது ஜிஹாதிற்கான நிபந்தனையாகும். மேலும் எதிரிகள் முதலில் தாக்குதல் தொடுத்திருக்க வேண்டும் என்பதும் அடிப்படையான நிபந்தனையாகும். (ஜமீன்தார் 14 ஜூன் 1926)

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி எழுதுகின்றார்: மார்க்கப் போருக்கான மிகப்பெரிய முக்கியமான நிபந்தனை என்னவென்றால் முஸ்லிம்களிடையே காலத்தின் இமாம் அல்லது கலீஃபா இருப்பது அவசியமாகும். எவ்வாறு இருக்க வேண்டுமென்றால் அதில் இஸ்லாமிய மகத்துவத்திற்கு பிளவு ஏற்படும் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கக்கூடாது. மாறாக, இஸ்லாத்தின் வெற்றி வாகையே அவர்களின் சிந்தனையில் மிகைத்து காணப்பட வேண்டும்.

(அல் இக்திஸாத் ஃபீ மஸாயிலுல் ஜிஹாது பக்கம் 31)

மேலும் அவர்கள் எழுதுகின்றார்கள்: தற்போதைய காலகட்டத்தில் மார்க்கச் சட்டத்தின் அடிப்படையில் செய்யக்கூடிய ஜிஹாதிற்கான எந்தவொரு சூழலும் இல்லை. ஏனென்றால் தற்போது முஸ்லிம்களின் இமாமிற்கு இருக்க வேண்டிய தன்மைகள், பண்புகள், நிபந்தனைகள் கொண்ட ஒரு இமாம் இல்லாத காரணத்தினாலும், தன்னுடைய எதிரிகளை வெற்றி கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையுடைய கம்பீரமுள்ள பெருங்கூட்டம் (முஸ்லிம்கள்) அவர்களிடையே இல்லாத காரணத்தினாலும் ஜிஹாதிற்கான அவசியம் இல்லை. (பக்கம் 42)

காஜா ஹுஸைன் நிஸாமி தெஹ்லவி எழுதுகின்றார்கள்: ஜிஹாது தொடர்பான இக்கருத்தை நம்முடைய குழந்தைகளும் அறிந்ததுதான். அதாவது நிராகரிப்பாளர்கள் மார்க்க விவகாரங்களில் குறிக்கிடுவார்களேயானால் போருக்கான அனைத்து ஆயுதங்களும், தாக்குதலுக்கான அனைத்து பொருள்களும் வைத்திருக்கின்ற நீதி தவறாத இமாம் (தலைவர்) போர் செய்வதற்கான ஆணையை பிறப்பிக்கிறார் என்றால் அப்போது அனைத்து முஸ்லிம்கள் மீதும் போர் செய்வது கடமையாகி விடுகிறது.

ஆனால் ஆங்கிலேயர்கள் நம்முடைய மார்க்கத்தில் குறுக்கிடுவதும் இல்லை. பிற விவகாரங்களிலும் கொடுமைப்படுத்தக்கூடிய விதமாக ஆதிக்கம் செலுத்துவதுமில்லை. நம்மிடத்தில் போருக்கான பொருட்களும் இல்லை. அவ்வாறான சூழ்நிலையில் நாம் பிறர் கூறுவதை கேட்கவும் மாட்டோம். மேலும் நம்முடைய உயிரை அழியவிடவும் மாட்டோம்.

(ஷேக் னோஸி பத்திரிகை பக்கம் 17, காஜா ஹுஸைன் நிஸாமி எழுதியது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றுவதற்கு முன்னரே இன்னும் சொல்வதென்றால் பிறப்பதற்கு முன்பே ஜிஹாதிற்கான ஒரு சந்தர்ப்பம் தோன்றியது. பதிமூன்றாம் நூற்றாண்டின் முஜத்தித் ஹஸ்ரத் செய்யது அஹ்மது பரேல்வி அவர்கள் பஞ்சாபில் உள்ள சீக்கியர்களுக்கு எதிராக ஜிஹாதிற்கான அறிவிப்பைச் செய்தார்கள்.

அவ்வாறு ஏன் செய்தார்கள் என்ற காரணத்தை மவ்லவி மஸ்ஊது அஹ்மது நத்வி எழுதுகின்றார்கள்:

அப்போது பஞ்சாபில் சீக்கிய ஆட்சியின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. முஸ்லிம் பெண்களின் கற்பு மற்றும் கௌரவத்திற்கு எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாமல் இருந்தது. அவர்களின் இரத்தம் (ஹலால்) ஆகுமானதாக ஆகிவிட்டது. மாட்டிறைச்சியின் குர்பானி தடுக்கப்பட்டது. பள்ளிவாயில்கள் குதிரை லாயமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. ஐந்து நதிகளாக திகழ்ந்த முஸ்லிம் நகரங்களை கொடுமையின் எல்லையற்ற வெள்ளமானது அடித்துச் சென்று விட்டது. கண்கள் இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தது. ஆனால் செயல்களின் ஆற்றலோ ஊனமாகி விட்டது.

(ஹிந்துஸ்தான் கி பெஹலி தாரீக், பக்கம் 37)

செய்யது அஹ்மது சாஹிப் அவர்களின் ஷஹாதத் மற்றும் அன்னார் தோல்வி அடைந்ததற்கான காரணத்தைக் குறிப்பிட்டவாறு எழுதுகின்றார்கள்:

தன்னுடைய துர்பாக்கிய நிலையின் துக்கத்தை எந்த வார்த்தைகளால் கூறுவது என்று எண்ணும்போது முல்லாக்களின் (மார்க்க அறிஞர்கள்) ஃபத்வாக்கள் (தீர்ப்புகள்) மற்றும் எல்லையோர பாதுகாவலர்கள் செய்த நம்பிக்கைத் துரோகம் நினைவுக்கு வரும்போதெல்லாம் அது உள்ளத்தை துளைக்கிறது. மேலும் கண்களிலிருந்து ரத்தம் வழிந்து ஓடுகிறது....

அறிவற்ற முல்லாக்கள் முஜாஹிதீன்களை வஹாபி என்று அழைக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களின் சீர்திருத்தம் மற்றும் அவர்களுக்கு உதவி புரிவதற்காக செய்யது சாஹிப் அவர்கள் அவர்களுக்காக உயிரை அர்ப்பணித்தார்கள். அன்னார் சுயமே அவர்களின் உயிருக்கு எதிரி ஆகிவிட்டார்கள். அவர்களுடைய உணவில் விஷம் கலந்து கொடுக்கப்பட்டது.

பிஷாவர் வெற்றி அடைந்தும் கூட அதன் தலைவரின் நம்பிக்கைத் துரோகத்தினால் செய்யது சாஹிப் அவர்களால் நியமிக்கப்பட்ட செயலாளர்கள் மற்றும் முக்கியமான நபர்கள் பகிரங்கமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். அதுமட்டுமல்ல உள்ளம் எத்தகு வெறுப்பை அடைந்தது என்றால் பெஷாவரின் சுற்றுப்புறத்தை விட்டுவிட்டு காகான் பள்ளத்தாக்குடன் இணைந்து காணப்பட்ட வாரி என்ற பள்ளத்தாக்கிற்கு இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள். இறுதியில் பாலாகோட் இடத்தில் ஷஹீதாக்கப்பட்டார்கள். (பக்கம் 47)

அன்னாரின் ஜிஹாதிற்கான நோக்கம் பஞ்சாபில் உள்ள முஸ்லிம்களை சீக்கியரின் கொடுங்கோல் மற்றும் தன்னிச்சையாக செயல்பட்ட ஆட்சியிலிருந்து ஈடேற்றமும், மார்க்க சுதந்திரமும் பெற்றுத் தருவதே ஆகும். சீக்கியர்களுக்கு பகரமாக ஆங்கிலேயர்களின் ஆட்சி அங்கு அமைந்ததன் மூலமாக அந்த நோக்கமானது பூர்த்தி ஆகிவிட்டது. அதைப் பற்றி மவ்லானா முஹம்மது ஜாஃபர் தானீஸ்ரி அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

செய்யது சாஹிப் அவர்களுக்கு ஆங்கிலேயே அரசாங்கத்துடன் ஒருபோதும் ஜிஹாத் செய்வதற்கான எண்ணம் இருந்ததில்லை. அன்னார் இந்த சுதந்திர அதிகாரத்தை தன்னுடைய அதிகாரமாக கருதி வந்தார்கள்.

(ஸவானே அஹ்மது கலா, பக்கம் 139)

இந்த காரணமாகத்தான் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இவ்வாறு எழுதுகிறார்: சகோதரர்களே! தற்போது வாளைக் கொண்டு போர் புரிவதற்கான காலம் இல்லை. அதற்கு பகரமாக தற்போது பேனாவைக் கொண்டு செயல்பட வேண்டும். முஸ்லிம்களுக்கு கையே இல்லாத நிலையில் அவர்கள் கையில் வாளை ஏந்துவது எவ்வாறு சாத்தியமாகும். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் கொடிய விரோதியாக இருக்கிறார்.

ஷியா பிரிவினர்கள் சுன்னியையும் (சுன்னத்துல் வல் ஜமாஅத்), சுன்னி ஷியாவையும், அஹ்லே ஹதீஸ் அஹ்லே தக்லீதையும், இதுபோன்று ஒவ்வொரு அமைப்பும் பிற அமைப்பை அதே கண்ணோட்டத்தில் பார்க்கிறது.

(இஷாஅத்துஸ் சுன்னா, தொகுதி 6 பக்கம் 365)

வாளினால் ஜிஹாத் செய்வது என்பது தடுக்கப்பட்டதற்கான மூன்றாவது காரணமாக அன்னார் (அலை) அவர்கள் இதைக் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தொடர்பாக, அவர் மார்க்க சுதந்திரம் நிலவுகின்ற காலகட்டத்தில்தான் தோன்றுவார் என்றும் மேலும் (அக்காலத்தில்) மார்க்கத்திற்கான போர் மற்றும் சண்டையின் அவசியமே இருக்காது என்றும் கூறியுள்ளார்கள்.

இது தொடர்பாக கவர்ன்மண்ட் அங்கரேஸ் அவ்ர் ஜிஹாத் (ஆங்கிலேய அரசாங்கமும் ஜிஹாதும்) என்ற நூலில் அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் மகத்துவத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து யளவுல் ஹர்ப் என்ற வார்த்தை வெளிவந்து 1300 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் பொருள் என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும்போது சண்டைகளை முடிவுக்கு கொண்டு வருவார். மேலும் திருக்குர்ஆனின் இந்த வசனத்தின் பக்கமே இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது மஸீஹ் தோன்றுவதற்கான காலம் வரும்வரை போர் செய்யுங்கள்.

(கவர்ன்மன்ட் அங்கரேஸி அவ்ர் ஜிஹாது, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 8)

இந்தக் காலத்தில் எவரும் முஸ்லிம்களை மார்க்கத்திற்காக கொலை செய்வதில்லை என்பதனால் இந்த கட்டளையின் அடிப்படையில் அவர்கள் ஒன்றும் அறியாத மக்களை கொலை செய்கிறார்கள். (பக்கம் 13)

ஆக அன்னார் ஜிஹாதை புறக்கணித்ததற்கான காரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறப்பித்த வழிகாட்டலை செயல்படுத்தும் விதமாகத்தான் மார்க்கச் சண்டையை தடுத்தார்களே தவிர சுயமே தன்னுடைய சார்பாக அல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் பொருள் என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் முழுமையான மார்க்க சுதந்திரம் கிடைத்த பிறகும் மார்க்கத்திற்காக போர் புரிவதற்கான அவசியம் இருக்காது என்பதாகும்.

இந்தப் பத்திரிகையை வெளியிட்ட சில நாட்களுக்கு பிறகு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் மார்க்க ஜிஹாத் தடுக்கப்பட்டதற்கான ஃபத்வாவை கவிதை வடிவில் கூறியுள்ளார்கள். அதனுடைய முதல் நான்கு கவிதைகள் இதுவாகும்:

*அன்பர்களே! தற்போது ஜிஹாத் செய்வதற்கான சிந்தனையை விட்டு விடுங்கள்*

*மார்க்கத்தில் தற்போது போர் மற்றும் சண்டை ஹராமாகி விட்டது*

*மார்க்கத்தின் இமாமாக திகழ்கின்ற மஸீஹ் தற்போது வந்து விட்டார்*

*மார்க்கத்தின் அனைத்து விதமான போர்களும் தற்போது முடிவுக்கு வந்துவிட்டன*

*அவர் போரை நிறுத்துவார் என்று செய்தியை நீங்கள் ஏன் மறந்து விட்டீர்கள்*

*இந்தச் செய்தியானது புகாரியில் இல்லையா என்பதை நீங்கள் திறந்து பாருங்கள்*

*ஈருலகிற்கும் தலைவராக இருக்கக்கூடிய முஸ்தஃபா அவர்கள் ஈஸா மஸீஹ் போர்களை புறக்கணித்து விடுவார் என்று கூறிவிட்டார்கள்*

இந்த கவிதையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜிஹாத் செய்வதை புறக்கணியுங்கள் என்று தீர்ப்பளித்தவாறு மேற்கூறப்பட்ட மூன்று காரணங்களையும் மிகவும் அழகான முறையில் எடுத்துக் கூறி விட்டார்கள்.

(தொஹ்ஃபா கோல்டுவிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 77–80)

## ஜிஹாதின் வகைகள்

மேலும் அன்னார் வாளினால் மட்டும் செய்யப்படக்கூடிய போர் மட்டும் ஜிஹாத் அல்ல. மாறாக, ஜிஹாத் என்ற சொல்லில் பல அர்த்தங்கள் பொதிந்துள்ளன என்ற இந்த கருததை மிகவும் தெளிவாக கூறியுள்ளார்கள். திருக்குர்ஆனை காஃபிர்களுக்கு எட்ட வைப்பது உண்மையான தூதுச் செய்தி மூலம் போதனைகள் அறிவுரைகள் செய்வதும் ஜிஹாத் ஆகும். மாறாக ஜிஹாதே கபீர் (பெரிய ஜிஹாத்) ஆகும்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

فَلَا تُطِعِ الْكٰفِرِيْنَ وَجَاهِدْهُمْ بِهٖ جِهَادًا كَبِيْرًا

எனவே நீர் நிராகரிப்பவர்களைப் பின்பற்றாதீர். நீர் (குர்ஆனாகிய) இதனால் அவர்களுடன் பெரும் அறப்போர் நிகழ்த்துவீராக. (25:53)

மவ்லானா அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கமளித்தவாறு எழுதுகிறார்கள்:

இதிலிருந்து வாளினால் செய்யக்கூடிய ஜிஹாத் நோக்கம் அல்ல என்பது தெரிய வருகிறது. நிச்சயமாக ஜிஹாதே கபீர் என்பது, உண்மையில் நிலைத்திருப்பது. மேலும் அதன் வழியில் அனைத்து விதமான துன்பங்களையும் கஷ்டங்களையும் சகித்துக் கொள்வதற்கு பெயர்தான் ஜிஹாத் ஆகும்.

(மஸ்அலே கிலாஃபத் வ ஜஸீராயே அரப் பக்கம் 109)

மேலும் மவ்லவி ஸஃபர் அலி கான் அவர்கள் இந்த வசனம் தொடர்பாக எழுதுகிறார்கள்: இந்த வசனத்தில் ஜாஹித்ஹும் என்பதன் பொருள் காஃபிர்களுக்கு போதனைகள் அறிவுரைகள் மற்றும் பிரச்சாரத்தின் மூலம் அழைப்பு விடுத்து அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும்ட என்பதாகும். இமாம் ஃபக்ருத்தீன் ராஸி அவர்களும் தங்களுடைய விளக்க உரையில் இதே கருத்தைக் கூறியுள்ளார்கள். (ஜமீன்தார் 25 ஜூன் 1931)

மவ்லானா ஹய்தர் ஸமான் சித்தீகி எழுதுகிறார்:

அதேபோன்று ஹதீஸ்களில் கொடுங்கோல் ஆட்சியாளர்களுக்கு முன் உண்மையை போதிப்பது மிகப்பெரிய ஜிஹாத் என்று கூறப்பட்டுள்ளது.

اِنَّ مِنْ اَعْظَمِ الْجِهَادِ كَلِمَةُ حَقٍّ عِنْدَ سُلْطَانٍ جَائِرٍ

(அபூதாவூது, திர்மிதி)

மார்க்கத்தின் ஞானத்தைப் பரப்புவதும், மார்க்க கல்விக் கூடங்களை நிறுவுவதும், மார்க்கத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படுகின்ற ஒவ்வொரு பணியும் உண்மையில் ஜிஹாதாகவே கருதப்படும்.

(இஸ்லாம் கா நஸரியாயே ஜிஹாத் பக்கம் 128–130)

மேலும் ஹதீஸில் வந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பி வரும்போது கூறினார்கள்:

رَجَعْنَا مِنَ الْجِهَادِ الْاَصْغَرِ اِلَى الْجِهَادِ الْاَكْبَرِ

அதாவது நாங்கள் சிறிய ஜிஹாதிலிருந்து மிகப்பெரிய ஜிஹாதின் பக்கம் வந்துள்ளோம். (பைஹக்கி)

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாளினால் செய்யக்கூடிய போருக்கு சிறிய போர் எனவும் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தக்கூடிய போருக்கு மிகப்பெரிய ஜிஹாத் என்றும் கூறியுள்ளார்கள்.

இதைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாளைக் கொண்டு போர் செய்யக்கூடிய நிபந்தனைகள் காணப்படவில்லை என்று கூறியவாறு கூறுகிறார்கள்:

பாருங்கள். நான் ஒரு கட்டளை கொண்டு வந்துள்ளேன். அந்த கட்டளையானது இப்போதிருந்து வாளைக் கொண்டு போர் புரிவது முடிவு பெற்று விட்டது. ஆனால் தன்னுடைய ஆன்மாவைத் தூய்மைப்படுத்தக்கூடிய ஜிஹாத் எஞ்சியுள்ளது.

மேலும் இவ்விஷயத்தை நான் என்னுடைய சார்பாக கூறவில்லை. மாறாக, இறைவனுடைய நோக்கமும் இதுவே ஆகும். சஹீஹ் புகாரியில் வந்துள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகழில் يضع الحرب என்று எழுதப்பட்டுள்ள இந்த ஹதீஸை சிந்தித்துப் பாருங்கள். அதாவது மஸீஹ் வரும்போது மார்க்கப் போர்களை முடிவுக்கு கொண்டு வந்து விடுவார்.

(கவர்ன்மன்ட் அங்கரேஸி அவ்ர் ஜிஹாத், ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 15)

### போர் தடுக்கப்பட்டது தற்காலிக தீர்ப்புதான்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளில் காணப்படுகின்ற முன்னறிவிப்புகளுக்கேற்ப நிரந்தரமாக வாளைக் கொண்டு (ஜிஹாத்) போர் செய்வதை ரத்து செய்யவில்லை. மாறாக, அன்னாருடைய காலத்தில் வாளைக் கொண்டு போர் புரிவதற்கான நிபந்தனைகள் பொருந்தாத காலம் வரையிலும் புறக்கணித்தும், விலக்கியும் வைத்துள்ளார்கள். மேலும் ஜிஹாதே அக்பர் மற்றும் ஜிஹாதே கபீரை செயல்படுத்துவதற்காக மீண்டும் மீண்டும் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்: இக்காலத்தில் ஜிஹாத் ஆன்மீக சூழலை மேற்கொண்டுள்ளது. மேலும் இக்காலத்தில் ஜிஹாத் என்பது இஸ்லாத்தின் கலிமாவை மேலோங்கச் செய்தில் முயற்சி செய்வது, எதிரிகளின் ஆட்சேபனைகளுக்கு பதிலளிப்பது மற்றும் உறுதிவாய்ந்த மார்க்கமாகிய இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை உலகில் பரப்புவதே ஜிஹாத் ஆகும். எதுவரை எல்லாம் வல்ல இறைவன் மாற்று சூழலை வெளிப்படுத்தவில்லையோ அதுவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையை உலகில் வெளிப்படுத்திக் கொண்டே இருங்கள். இதுதான் ஜிஹாத் ஆகும்.

(ரிஸாலா தரூது ஷரீஃப் பக்கம் 113)

எதுவரை எல்லாம் வல்ல இறைவன் வேறொரு மாற்று சூழலை வெளிப்படுத்தவில்லையோ என்ற வார்த்தை மற்றும் ஈஸா மஸீஹ் போர்களை புறக்கணித்து விடுவார் என்ற கவிதை வரியானது வாளைக் கொண்டு மார்க்கப் போர் செய்வது தடுக்கப்பட்டுள்ளது என்ற அன்னாரின் தீர்ப்பானது எதுவரை வாளைக் கொண்டு போர் புரிவதற்கான நிபந்தனைகள் பொருந்தாதோ அதுவரை தற்காலிகமானதுதான் என்ற கருத்தை மிகவும் தெளிவாக விளக்குகின்றது.

அதேபோன்று அன்னார் பாதிரி இமாமுத்தீன் அவர்களின் ஜிஹாத் தொடர்பான ஆட்சேபனைக்கு பதிலளித்தவாறு கூறுகிறார்கள்:

இந்த குறை கூறுபவர் இஸ்லாத்தின் ஜிஹாதை பற்றி குறிப்பிட்டுள்ளார். மேலும் திருக்குர்ஆன் எந்த ஒரு நிபந்தனையும் இன்றி ஜிஹாத் தொடர்பாக வெளிப்படையான கிளர்ச்சியை போதிக்கின்றது என்று எண்ணுகிறார். சிந்திக்கக்கூடியவர் எவராது இருந்தால் இதைவிட மிகப்பெரிய பொய்யை இட்டுக்கட்டி கூற முடியாது என்பதை அறிந்து கொள்வார்.

ஆக திருக்குர்ஆன் வெறுமனே போருக்கான கட்டளையை பிறப்பிக்கவில்லை. மாறாக எவர்கள் இறைவனுடைய அடியார்களை நம்பிக்கை கொள்வதிலிருந்து தடுக்கின்றார்களோ, இறைவனுடைய கட்டளைகளை செயல்முறைப் படுத்துவதிலிருந்தும், அவனை வணங்குவதிலிருந்தும் அவர்களை தடுப்பார்களோ அப்படிப்பட்ட மக்களுடன் போர் புரிவதற்கான கட்டளையை பிறப்பிக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

முஸ்லிம்களுடன் எந்த ஒரு காரணமுமின்றி போர் புரிகின்றவர்களுடனும், நம்பிக்கையாளர்களை அவருடைய வீடுகளில் இருந்தும் நாட்டிலிருந்தும் வெளியேற்றுபவர்களுடனும், அல்லாஹ்வின் படைப்பினங்களை நிர்ப்பந்தப்படுத்தி தன்னுடைய மார்க்கத்தில் நுழையச் செய்பவர்களுடனும், இஸ்லாமிய மார்க்கத்தை அழித்துவிட வேண்டும் என விரும்புகின்றவர்களுடனும் மற்றும் முஸ்லிமாக ஆகுகின்ற மக்களை தடுக்கின்றவர்கள் மீதும் போர் செய்வதற்கான கட்டளையை பிறப்பித்துள்ளது. மேலும் இம்மக்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளானவர்கள் ஆவார்கள்.

وَوَجَبَ عَلَى الْمُؤْمِنِيْنَ اَن يُّحَارِبُوْهُمْ اِنْ لَّمْ يَنْتَهُوْا

(நூருல் ஹக் தொகுதி 1 ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 62)

அன்னாரின் இந்த எழுத்துக்களிலிருந்து மிகவும் தெளிவாகக்கூடிய விஷயம் என்னவென்றால், அன்னாருடைய பார்வையில் வாளைக் கொண்டு போர் புரிவதற்கான நிபந்தனைகள் காணப்படும்போது அச்சமயத்தில் நம்பிக்கையாளர்கள் மீது வாளைக் கொண்டு போர் புரிவது கடமையாகிவிடும்.

இஸ்லாம் எங்கு சீர்திருத்தம் மற்றும் ஆன்மாவை தூய்மைப்டுத்துவதற்கு ஜிஹாதே அக்பர் என்றும் போதனைகள், அறிவுரைகள் மற்றும் பிரச்சாரங்களை ஜிஹாதே கபீர் என்றும் கூறி அவைகளை நிரந்தரமாகவும் கட்டாயமாகவும் குறிப்பிட்டுள்ளதோ அங்கு அது வாளுடன் ஜிஹாத் செய்வதை ஜிஹாதே அஸ்கர் மற்றும் தற்காலிகமானது என்று கூறி நிபந்தனைகளை விதித்து விட்டது. எங்கு அதற்கான நிபந்தனைகள் காணப்படுகின்றதோ அங்கு வாளால் போர் செய்வது அவசியமாகும். எங்கு நிபந்தனைகள் பொருந்தவில்லையோ அங்கு போர் நடைபெறாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலகட்டத்தில் இந்தியாவில் வாளைக் கொண்டு போர் செய்வதற்கான நிபந்தனைகள் காணப்படாததன் காரணமாக அன்னார் இவ்வாறான தீர்ப்பை வழங்கினார்கள். மேலும் மேலே குறிப்பிட்டவாறு அனைத்து பிரசித்தி பெற்ற உலமாக்கள் தங்களுடைய எழுத்தாலும், செயலாலும் அன்னாரின் கொள்கையை ஆமோதித்தார்கள்.

ஆனால் 1947 ஆம் ஆண்டில் இந்தியா பிரிந்ததற்குப் பிறகு நிலைமை மாறிவிட்டது. பஞ்சாபின் கிழக்குப் பகுதியில் முஸ்லிம்களை முற்றிலுமாக ஒழிப்பதற்காக அவர்கள் மீது நன்றாக சிந்தித்து புரிந்து செயல்படக்கூடிய ஒரு திட்டத்தின் அடிப்படையில் முஸ்லிம் அல்லாதவர்கள் தாக்குதல் நடத்தினார்கள். எதிரி சுயமே தாக்குதலை தொடுத்தான். ஆனால் அவனுடைய நோக்கம்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

# திருக்குர்ஆனின் வசனங்களின் ஒளியில் ஜிஹாதின் உண்மை நிலை

நஸீர் அஹ்மது ஆரிஃப், முரப்பி ஸில்ஸிலா, நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாது மர்கஸிய்யா காதியான்
(தமிழில்: மவ்லவி M. ஷஹாபுத்தீன் சாஹிப்)

இஸ்லாம் மார்க்கம் ஒரு முழுமையான மார்க்கம் ஆகும். மேலும் திருக்குர்ஆன் ஒரு முழுமையான வாழ்வாதாரம் ஆகும். அது மனிதனுடைய வாழ்விற்கு முழுமையான வழிகாட்டியாக இருக்கின்றது. மேலும் ஆன்மீக விஷயமாக இருந்தாலும், பௌதீக விஷயமாக இருந்தாலும் மனிதன் தன்னுடைய வாழ்வை கழிப்பதற்கு என்னென்ன நிபந்தனை தேவைப்படுகின்றதோ அவை அனைத்தையும் போதிக்கின்றது.

திருக்குர்ஆனில் ஜிஹாத் தொடர்பாக அதன் பிரிவுகள் மற்றும் விளக்கங்கள் குறித்து கூறப்பட்டுள்ளவற்றை நான் சுருக்கமாக உங்கள் முன்பு வைப்பதற்கு முயற்சி செய்வேன்.

ஜிஹாத் என்கின்ற சொல் ஜஹத என்பதிலிருந்து வந்துள்ளது. இது அரபி மொழியில் மூலச்சொல்லாகும். இதனுடைய பொருள் மிக அதிகமாக உழைத்தல் என்பதாகும். மேலும் ஜிஹாதுடைய ஒரு பொருள் என்னவென்றால், ஏதாவதொரு பணியை முழு முயற்சியுடன் செய்வது மேலும் அதில் எவ்விதமான குறைபாடு ஏற்படாமல் செய்து முடிப்பது என்பதாகும்.

(தாஜுல் உரூஸ்)

பொதுவாக ஜிஹாத் என்பதற்கு கொலை செய்தல், சண்டை போடுதல் என்று கூறப்படுகிறது. ஆனால் இந்த பொருள் முற்றிலும் தவறாகும். அகராதியின் அடிப்படையில் அதற்குப் பொருள், உழைத்தல், முழுமையாக முயற்சி செய்தல் என்பதாகும்.

நாம் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை ஆராய்ந்து பார்க்கும்போது நமக்கு ஜிஹாதின் நான்கு பெரும் பிரிவுகள் பற்றி அறிய முடிகிறது. அந்த நான்கு பிரிவுகள் தொடர்பாக திருக்குர்ஆனுடைய வசனங்களின் ஒளியில் நான் சுருக்கமாக உங்கள் முன்பு வைப்பேன்.

(1) ஜிஹாத் பின் நஃப்ஸ் அதாவது ஆன்மாவிற்கு தீங்கு விளைவிக்கும் விஷயங்களுக்கு எதிராக ஜிஹாது செய்வதும், தம்முடைய ஆன்மாவை எல்லா விதமான ஷய்த்தானிய பணிகளிலிருந்து பாதுகாத்து வைத்துக் கொள்வது.

(2) ஜிஹாத் ஃபில் குர்ஆன் அதாவது திருக்குர்ஆன் மூலமாக இஸ்லாத்தைப் பரப்புதல். திருக்குர்ஆனின் அழகிய உண்மையான அமைதியை விரும்பக்கூடிய போதனையை பரப்புதல்.

(3) ஜிஹாத் ஃபில் மால் அதாவது அல்லாஹ்வின் வழியில் செல்வத்தை செலவு செய்தல். மேலும் மார்க்க அவசியத்திற்கு அதிகமாக பொருளாதார தியாகம் செய்தல்.

(4) ஜிஹாத் ஃபிஸ் ஸைஃப் அதாவது தற்காப்பிற்காக போர் செய்தல்

### ஜிஹாத் பின் நஃப்ஸ்

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

அதாவது மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம் நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (அன்கபூத்:70)

இதன் பொருள் என்னவென்றால், எவர்கள் அல்லாஹ்வின் மீது அன்பை அதன் உச்சத்திற்குக் கொண்டு சென்றார்களோ மேலும் அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெறுவதற்கு முழுவதுமாக முயற்சி செய்து கொண்டே இருக்கின்றார்களோ அப்படிப்பட்டவர்களுக்கு அல்லாஹ் வெற்றியை வழங்குகின்றான். மேலும் தன்னுடைய நெருக்கத்தை வழங்குகின்றான். மேலும் அவர்களுடைய இந்த முயற்சிகள் அனைத்தையும் ஒருபோதும் வீணாக விட்டுவிடுவதில்லை. மாறாக, அதன் விளைவாக, அவர்களுக்கு உலகத்தின் நோக்கங்களில் கூட வெற்றியை வழங்கி விடுகின்றான். மேலும் அல்லாஹ் தன் பக்கம் வருவதற்கான அழகான வழியை அவர்களுக்காக திறந்து வைத்து விடுகின்றான். மேலும் அவர்கள் நன்மைகளின் முன்னேற்றங்களில் மிகப்பெரிய அந்தஸ்தை அடைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு போரிலிருந்து திரும்பி வரும்போது கூறினார்கள்:

நாம் ஜிஹாதே அஸ்கரிலிருந்து ஜிஹாதே அக்பரை நோக்கி வந்து கொண்டிருக்கின்றோம். மேலும் ஜிஹாத் என்றால் அடியான் தன்னுடைய விருப்பங்களுக்கு எதிராக சண்டையிடுதல் ஆகும்.

(கன்ஸுல் உம்மால், கிதாபுல் ஜிஹாது ஃபில் ஜிஹாதில் அக்பர் மினல் அஹ்மால்)

இந்த நபிமொழியிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஜிஹாத் பின் நஃப்ஸ் என்பது மிகப்பெரிய ஜிஹாத் ஆகும். ஆகையால் எவர்கள் அல்லாஹ்வுடன் அன்பு மற்றும் அவனை அடைய வேண்டும் என்பதற்காக முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்கு நன்மையின் வழிகள் திறந்து கொண்டே செல்கின்றன. ஆனால் இதற்கான நிபந்தனை என்னவென்றால், அவர்கள் அல்லாஹ் கூறிய அந்த தரத்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். எல்லா விதமான இடையூறுகளையும் பார்த்து ஒருபோதும் சோர்ந்து விடக்கூடாது. மேலும் எவ்விதமான சோதனைகளையும் பார்த்து ஒருபோதும் நிராசையை வெளிப்படுத்தி விடக்கூடாது. மாறாக, முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும்.

ஆகையால் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த ஜிஹாதில் முழுவதுமாக தம்முடைய பங்கை வகிக்கின்றது. ஒவ்வொரு மைதானத்திலும் அது நன்மைக்கான மைதானமாக இருந்தாலும் சரி; அவை சோதனைக்கான மைதானமாக இருந்தாலும் சரி அதில் நிலைத்து நின்று தம்முடைய பாதங்களை முன்னோக்கி வைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் அல்லாஹ்வுடைய நெருக்கம், அன்பு மற்றும் நேசத்தை காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒருவேளை எதிரிகள் ஒரு கதவை அடைத்து விட்டார்கள் என்றால், அல்லாஹ் அவர்களுக்காக நூறு கதவுகளை திறந்து விடுகின்றான். மேலும் அவர்கள் தங்களுடைய இந்த நன்மையின் காரணத்தினால் அல்லாஹ்வின் அன்பில் முன்னேற்றம் அடைந்து நாளுக்கு நாள் முன்னோக்கி சென்று கொண்டிருக்கின்றார்கள். மேலும் ஒவ்வொரு மைதானத்திலும் மற்ற முஸ்லிம்களை விட முன்பு இருக்கின்றார்கள். இந்த விஷயத்தை ஜமாஅத்தைச் சாராத நபர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்.

(1) மதிப்பிற்குரிய ஷேக் முஹம்மது அக்பர் சாஹிப் M.A அவர்கள் எழுதுகின்றார்கள்:

முஸ்லிம்களுக்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாஅத்தில் சிறப்பான திறமை பெற்றவர்கள், ஆர்வமுள்ளவர்கள், தம்மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள், நிலைத்து நிற்பவர்கள் உள்ளனர்.

முழு உலகத்தின் ஆன்மீக நோய்க்கான மருத்துவம் அவர்களிடம் உள்ளது என்று எண்ணுகின்றார்கள். (மௌஜே கௌஸர், 192)

(2) மதிப்பிற்குரிய மக்பூளுர் ரஹீம் முஃப்தி சாஹிப் எழுதுகின்றார்கள்:

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தேர்ச்சி பெற்ற, திறமையான மேலும் உழைக்கக்கூடிய நபர்கள் இருப்பதற்கு ஒரு காரணம் என்னவென்றால் அல்லது முக்கிய காரணம் என்னவென்றால், அவர்கள் கடந்த ஒரு நூற்றாண்டு முழுவதும் ஒவ்வொரு பகுதியிலும் எல்லா விதமான சண்டை சச்சரவுகள் மேலும் கருத்து வேறுபாடுகளை விட்டு தூர விலகி தங்களுடைய ஜமாஅத் மற்றும் ஜமாஅத்தின் நபர்களுடைய சீர்திருத்த முன்னேற்றம் தொடர்பான திட்டங்களைத் தீட்டி அதற்காக முயற்சியும், உழைப்பும் மேற்கொண்டுள்ளனர். (ரோஸ்னாமா மஷ்ரிக் 24 பிப்ரவரி 1994)

**ஜிஹாத் ஃபில் குர்ஆன்**

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

فَلَا تُطِعِ الْكٰفِرِيْنَ وَجَاهِدْهُمْ بِهٖ جِهَادًا كَبِيْرًا

அதாவது எனவே நீர் நிராகரிப்பவர்களைப் பின்பற்றாதீர். நீர் (குர்ஆனாகிய) இதனால் அவர்களுடன் பெரும் அறப்போர் நிகழ்த்துவீராக. (25:53)

இந்த வசனத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் கூறுகின்றான்: நீங்கள் நிராகரிப்பவர்களின் பேச்சைக் கேட்காதீர்கள். மேலும் திருக்குர்ஆனைக் கொண்டு ஜிஹாத் செய்யுங்கள். மேலும் இந்த ஜிஹாது தப்லீக்கே இஸ்லாம் என்கின்ற ஜிஹாது ஆகும். இது ஜிஹாதின் இரண்டாவது பெரிய ஜிஹாத் ஆகும். மேலும் இந்த ஜிஹாது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். ஆனால் இன்றைய காலத்து முஸ்லிம்கள் இந்த ஜிஹாதில் இருந்து பல மைல் தூரத்தில் இருக்கின்றார்கள்.

அல்லாஹ்வுடைய மாபெரும் அருள் அஹ்மதிய்யா ஜமாஅத் மீது உள்ளது. அல்லாஹ் இந்த பணியை அதாவது ஜிஹாதே அக்பர் என்பதை இன்றைய காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் ஒப்படைத்துள்ளான். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த ஜிஹாதில் அல்லாஹ்வின் அருளால் ஒரு தனித்தன்மை பெற்றுள்ளது. மேலும் இதற்காக ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையை எடுத்துரைக்கிறது. மேலும் அதனுடைய உண்மையான அழகான மேலும் அமைதி நிறைந்த போதனையின் மூலமாக அனைவருக்கும் அதனுடைய ஒளியை பரப்புகின்றது. மேலும் திருக்குர்ஆனுடைய சிறப்பான அருட்களை எடுத்துக்கூறி இஸ்லாத்துடன் தொடர்பை ஏற்படுத்துகின்றது. இந்த வியூகத்தை மற்றவர்களும் ஒப்புக் கொள்கின்றார்கள்.

(1) ஜமீன்தார் பத்திரிகையின் ஆசிரியர் மவ்லானா ஜாஃபர் அலி கான் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

வீட்டில் அமர்ந்து கொண்டு அஹ்மதிகளை ஏசி விடுவது எளிமையான காரியமாகும். ஆனால் இந்த ஒரு ஜமாஅத் மட்டும்தான் தம்முடைய முபல்லிக்களை பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி உள்ளது என்பதை நம்மால் ஒருபோதும் மறுக்க முடியாது.

(ஜமீன்தார் பத்திரிகை லாஹூர் டிசம்பர் 1926)

(2) மதிப்பிற்குரிய அப்துல் ஹக் சாஹிப் தம்முடைய கட்டுரை 'உலமாயே இஸ்லாம் ஸே குஜாரிஷ்' என்ற தலைப்பில் எழுதுகின்றார்கள்: காதியானிகளுடைய டெலிவிஷன் பாகிஸ்தானின் ஒவ்வொரு வீடுகளிலும் புகுந்து விட்டது. திருக்குர்ஆனுடைய திலாவத் மற்றும் விளக்கங்கள், ஹதீஸ் போதனைகள், இறைவனை புகழ்ந்து கவிதைகள் மேலும் அனைத்து சமுதாயம் மட்டுமல்லாமல் சிறப்பாக அரபிகளிடமும் காதியானிகள் இந்த விஷயங்களைத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறி இளைய சமுதாயத்தின் சிந்தனைகளில் முழுவதுமாக இதை பதிந்து விட்டார்கள்.

(ஹஃப்த்தே ரோசல் இஸ்திஸாம், 24 ஜனவரி 1997)

(3) மவ்லானா மன்ஸூர் அஹ்மது சாஹிப் தம்முடைய ஒரு நேர்காணலில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ரஷ்ய மொழியில் காதியானி ஜமாஅத் திருக்குர்ஆனுடைய மொழியாக்கத்தைச் செய்து முழு ரஷ்யாவிலும் பரப்பி உள்ளது. குறைந்தபட்சம் நூறு மொழிகளில் திருக்குர்ஆனுடைய மொழியாக்கத்தை வெளியிட்டுள்ளார்கள். அவை முழு உலகிலும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

(ஹஃப்து ரோசா வஜூது கராச்சி 2000 பக்கம் 31)

(4) காஸி முஹம்மது அஸ்லம் ஸைஃப் சாஹிப் அவர்கள் ஃபிரோஸ்பூரி தீனி ஜமாஅத்தோன் கேலியே லம்ஹா ஃபிக்ரிய்யா என்ற தலைப்பில் எழுதுகின்றார்கள்:

காதியானிகளுடைய பட்ஜெட் கோடிக்கணக்கான ரூபாய் கொண்டதாக உள்ளது. தப்லீக் என்ற பெயரில் முழு உலகிலும் தம்முடைய வலையை வீசியுள்ளனர். அவர்களுடைய முபல்லிக்கள் வெகு தூர நாடுகளுடைய தூசிகளை தட்டிக் கொண்டிருக்கின்றார்கள். மனைவி மக்கள் மற்றும் வீடுகளை விட்டு வெகு தூரத்திற்குச் சென்று உணவு இல்லாமலும், சிக்கனமான வாழ்க்கையை கொண்டதாகவும், ஆப்ரிக்காவில் கொதிக்கும் பாலைவனங்களிலும், ஐரோப்பாவின் குளிர்ப் பிரதேசங்களிலும், ஆஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்காவில் இஸ்லாம் குறித்து தப்லீக் செய்வதற்காக அலைந்து கொண்டிருககின்றார்கள்.

(ஹஃப்து ரோசா அல்ஹதீஸ் லாஹூர் 11 செப்டம்பர் 1992 பக்கம் 11,12)

ஆகையால் இதுவொரு மாபெரும் ஜிஹாதே அக்பர் ஆகும். அது இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக எதிரிகள் மிகவும் கவலையுடன் இந்த சொற்களை பயன்படுத்தி உள்ளார்கள். ஆனால் இன்று அவர்களுக்கு இதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த ஜிஹாதை அவர்கள் செய்வதில்லை. மேலும் அஹ்மதிகள் மீது அவதூறுகளை பரப்புகிறார்கள். அதாவது அஹ்மதிகள் ஜிஹாதை ஏற்றுக் கொள்வதில்லை.

அல்லாஹ் இன்று திருக்குர்ஆன் மூலமாக ஜிஹாத் செய்வதற்கான பணியை அஹ்மதிகளிடம் தந்துள்ளான். ஒவ்வொரு மைதானத்திலும் வெற்றியையும், உதவியையும் வழங்கிக் கொண்டிருக்கின்றான். எவ்வாறிருப்பினும் மாபெரும் எதிர்ப்பிற்கிடையிலும் உலகின் தொலை தூர நாடுகளுக்கும் சென்று இந்த ஜிஹாதை அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து கொண்டிருக்கின்றது. மேலும் பெருமானார் (ஸல்) அவர்களை ஏசிப்பேசிக் கொண்டிருந்த அந்த மக்களை பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தரூதும் ஸலாமும் கூறக்கூடியவர்களாக மாற்றி விட்டது.

**ஜிஹாத் ஃபில் மால்**

அல்லாஹ்வின் வழியில் மதத்தை பரப்புவதற்காக செல்வத்தைச் செலவு செய்வதும் ஜிஹாது ஆகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَّ جَاهِدُوْا بِاَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ

நீங்கள் உங்கள் பொருள்களையும் உங்கள் உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் வழியில் அறப்போர் செய்யுங்கள். (9:41)

அல்லாஹ்வுடைய அருளினால் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த ஜிஹாதில் தனித்தன்மை மற்றும் சிறப்பான ஒரு அந்தஸ்தைப் பெற்றுள்ளது. மேலும் ஒவ்வொரு நாளும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீதும் உதிக்கும்போது இந்த ஜிஹாதின் அருளின் காரணத்தினால் புதுப்புது கதவுகள் திறந்து கொண்டே செல்கின்றன.

அஹ்மதிகளுக்கு சோதனைகள் மற்றும் பெரும் துன்பத்தின் காலகட்டம் வந்தாலும் அவர்கள் தங்களுடைய பொருள் மற்றும் உயிர்களைத் தியாகம் செய்து எவ்வாறான ஒரு உதாரணத்தை காண்பிக்கின்றார்கள் என்றால் அதற்கான உதாரணம் கிடைப்பது கடினமான விஷயம் மட்டுமல்ல; மாறாக, சாத்தியமற்றதாகும். மேலும் அஹ்மதி அல்லாதவர்கள் நம்முடைய இந்தப் பொருளாதார தியாகத்தைப் பார்த்து வியப்பிற்குள்ளாகிறார்கள். இது சம்பந்தமாக மற்றவர்களுடைய தாக்கங்களை உங்கள் முன்பு வைப்பேன்.

(1) மதிப்பிற்குரிய ஹாபிஸ் அப்துல் வாஹித் சாஹிப் தங்களுடைய பதிப்பில் எழுதுகின்றார்கள்:

ஒரு அனுபவத்தின் அடிப்படையில் உலகத்திலுள்ள அனைத்து அஹ்மதிகளும் தங்களுடைய மாதாந்திர வருமானத்தில் ஒரு பகுதியை தங்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் தங்களுடைய மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவு செய்கின்றார்கள். மேலும் ஏதாவது பெரிய அளவு அவசியம் ஏற்பட்டால் அது இதில் சேராத செலவுகள் ஆகும். இந்த வழியின் மூலமாக இப்பொழுது அவர்களிடம் ஒரு நிரந்தரமான தொலைக்காட்சி ஒளிபரப்பு உள்ளது. மேலும் ரேடியோ நிலையம் நிறுவப்பட்டுள்ளது. அதன் மூலமாக 24 மணி நேரமும் காதியானி சம்பந்தமான கொள்கை பரப்பப்படுகிறது.

(இதாரியத்துல் இஃதஸாம் 11 பிப்ரவரி 2000)

(2) அப்துர் ரஹீம் அஷ்ரஃப் சாஹிப் எழுதுகின்றார்கள்:

இவர்களில் (அஹ்மதிய்யா ஜமாஅத்) சில நாடுகளைச் சார்ந்த ஜமாஅத்துகள் மேலும் நபர்கள் கோடிக்கணக்கான ரூபாய்க்கான சொத்துக்களை சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா ரப்வா மற்றும் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியானுடைய பெயரில் அர்ப்பணம் செய்துள்ளார்கள். (ஹஃப்து ரோஸா அல் முனீர் 2 மார்ச் 1956)

(3) மதிப்பிற்குரிய மவ்லவி மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்கள் தம்முடைய ஒரு நேர்காணலில் கூறுகின்றார்கள்:

ஒவ்வொரு காதியானியும் தம்முடைய வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை தங்களுடைய மார்க்கத்தைப் பரப்புவதற்காக காதியானி ஜமாஅத்திற்கு தருகின்றனர். ஆயிரக்கணக்கானவர்கள் தங்களுடைய சொத்துக்களில் ஒரு பகுதியை வஸிய்யத் செய்துள்ளனர். ஒரு மணி நேரத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் கணக்கின் அடிப்படையில் டிவி சேனல் வழங்கியுள்ளது. 24 மணி நேரமும் டிவி சேனல் ஒளிபரப்பப்படுகிறது. நம்மிடம் இவ்வளவு பெரிய வசதிகள் இல்லை.

(ஹஃப்து ரோஸா வஜூது கராச்சி 28 நவம்பர் 2000)

ஆகையால் இன்று அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எப்படிப்பட்ட பற்றுள்ளவர்களை வழங்கியுள்ளான் என்றால் அவர்கள் தியாகத்தின் உதாரணங்களை நிலைநாட்டுகின்றார்கள். ஒவ்வொரு புதிய நாளும் புதிய பொலிவுடன் பொருளாதார தியாகம் செய்பவர்களின் வரலாற்றை பதிவு செய்து கொண்டிருக்கின்றது. மேலும் இந்த பற்றுள்ளவர்கள் அல்லாஹ்வுடைய கட்டளையின்படியே நடக்கின்றார்கள். மேலும் அல்லாஹ்வின் அருள் என்பதைப் புரிந்தவாறு பொருளாதார ஜிஹாதில் பங்கு பெறுகிறார்கள். மேலும் எந்த நபரும் ஜமாஅத்தின் மீது கருணை காட்டும் அடிப்படையில் தியாகம் செய்கிறோம் என்று நினைப்பதில்லை. மாறாக, இந்த நோக்கம் அல்லாஹ்வுடைய தூதுச் செய்தியை உலகத்தில் எட்ட வைப்பது என்பதாகும். எவ்வாறிருப்பினும் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பணிகளை செய்ய விடாமல் தடுப்பது மற்றும் நோக்கங்களில் வெற்றி அடையச் செய்வதிலிருந்து தடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் செய்கின்றார்கள். இவர்களுடைய சொத்துக்களை அழித்துள்ளார்கள். செல்வங்களை அபகரித்துள்ளார்கள்.

ஆனால் ஒவ்வொரு சோதனையின்போதும் ஜமாஅத் நிலைத்து நிற்கின்றது. மேலும் தங்களுடைய பொருளாதாரத்தின் உயர் தரத்தை ஒருபோதும் விழச் செய்வதில்லை. அவர்களுடைய பொருளாதாரத்தின் காரணத்தினால் இஸ்லாத்தின் போதனைகள் உலகத்தின் ஒவ்வொரு எல்லை வரை சென்றடைகின்றது. மேலும் அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதிய்யா ஜமாஅத் 212 நாடுகளில் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்கின்ற கொடியை நாட்டி உள்ளது. மேலும் இந்த தொடர் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

**ஜிஹாத் ஃபிஸ் ஸைஃப்**

ஜிஹாதின் இந்த நான்காவது பிரிவு அதனுடைய பெயர் ஜிஹாத் ஃபிஸ் ஸைஃப் ஆகும். அதாவது தற்காப்புப் போர். எதிரிகள் மார்க்கத்தை அழித்து விடுவதற்காக மார்க்கத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்றால் அப்போது அந்த நேரத்தில் தற்காப்பிற்காக போர் செய்வதற்கு ஜிஹாது என்று கூறுவார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த ஜிஹாதை ஜிஹாதே அஸ்கர் என்று கூறியுள்ளார்கள்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

أُذِنَ لِلَّذِيْنَ يُقْتَلُوْنَ بِأَنَّهُمْ ظُلِمُوْا ۭ
وَإِنَّ اللّٰهَ عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ ۨ

அதாவது எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ அவர்களுக்குப் (போரிட) அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான்.

الَّذِيْنَ أُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ إِلَّآ أَنْ يَّقُوْلُوْا رَبُّنَا اللّٰهُ ۭ
وَلَوْلَا دَفْعُ اللّٰهِ النَّاسَ بَعْضَهُمْ بِبَعْضٍ لَّهُدِّمَتْ
صَوَامِعُ وَبِيَعٌ وَّصَلَوٰتٌ وَّمَسٰجِدُ يُذْكَرُ فِيْهَا اسْمُ اللّٰهِ
كَثِيْرًا ۭ وَلَيَنْصُرَنَّ اللّٰهُ مَنْ يَّنْصُرُهٗ ۭ إِنَّ اللّٰهَ لَقَوِيٌّ عَزِيْزٌ

அதாவது எங்களின் இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காக மட்டும் அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது). மேலும் அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்க வைக்கவில்லையாயின் கோயில்களும், ஆலயங்களும், மடங்களும், அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவு கூரப்படும் பள்ளிவாயில்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ் அவனு(டைய மார்க்கத்து)க்கு உதவுபவர்களுக்கு நிச்சயமாக உதவுவான். நிச்சயமாக அல்லாஹ் சக்தி வாய்ந்தவனும், மிகைத்தோனுமாவான். (22:40,41)

எவ்வாறிருப்பினும் இஸ்லாம் ஒரு அமைதியின் மார்க்கம் ஆகும். மேலும் ஆக்கிரமிப்பு மற்றும் தாக்குதல் செய்வதற்கான அனுமதியை இஸ்லாம் வழங்குவதில்லை. மாறாக, தம்மைக் காத்துக் கொள்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. மேலும் அதுவும் எவ்வாறான சூழலில் நடைபெறும் என்றால் எதிரிகள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் முதலில் ஆரம்பிக்க வேண்டும். இது வெறும் வாதம் மட்டுமல்ல. மாறாக, முஸ்லிம்கள் அவ்வாறு செய்தும் காண்பித்தார்கள். மேலும் போரில் ஒருபோதும் முஸ்லிம்களின் கை முதலில் ஓங்கியது கிடையாது.

மேலே குறிப்பிட்ட வசனத்தின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் இதற்கான அனுமதி வழங்கியிருந்தான். அப்படிப்பட்ட சூழலுக்குப் பிறகுதான் முஸ்லிம்கள் தங்களுடைய தற்காப்பிற்காக சண்டையிட்டார்கள். சில இஸ்லாமிய ஆலிம்கள் இதற்கு சில நிபந்தனைகளைக் கூறியுள்ளார்கள். அது இல்லாமல் போர் செய்வதற்கான அனுமதி இல்லை.

(1) மதிப்பிற்குரிய மவ்லானா ஸஃபர் அலி கான் சாஹிப் எழுதுகின்றார்கள்:

(1) தலைமை. (2) இஸ்லாமிய அமைப்பின் அடிப்படையில் ஆட்சி. (3) எதிரிகளுடைய முதல் தாக்குதல்.

(அக்பார் ஜமீன்தார் 14 ஜூன் 1934)

(2) மல்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப் எழுதுகின்றார்கள்:

1. முஸ்லிம்களில் இமாம் மற்றும் கலீஃபா இருக்க வேண்டும்.

2. முஸ்லிம்களில் எந்த அளவுக்கு பெரும்பான்மை இருக்க வேண்டுமென்றால் அவர்களுடைய இஸ்லாமிய கம்பீரம் உடையும் என்ற அபாயம் ஏற்பட வேண்டும்.

(அல் இக்திஸாது ஃபீ மஸாயீல் அல் ஜிஹாது பக்கம் 51,52)

3. மவ்லவி நதீர் ஹுஸைன் சாஹிப் தெஹ்லவி எழுதுகிறார்கள்:

ஜிஹாதிற்கு பல நிபந்தனைகள் உள்ளன. எதுவரை அவை இல்லையோ ஜிஹாது செய்ய முடியாது.

(ஃபதாவா நதீரிய்யா பாகம் 3, அல் இமாராத்து வல் ஜிஹாது என்ற நூல் பக்கம் 282)

ஆலிம்களுடைய இந்த கருத்துகளிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அவர்களுடைய பார்வையில் ஜிஹாது ஃபிஸ் ஸைஃப் செய்வதற்கு ஐந்து நிபந்தனைகள் முழுமையடைவது அவசியமாகும். அவற்றில் ஏதாவது ஒன்று கூட இல்லை என்றால் மார்க்கத்தின் அடிப்படையில் போர் செய்வதற்கு அனுமதி இல்லை. மேலும் அந்த நிபந்தனைகள் கீழ்வருமாறு:

(1) காலத்தின் தலைவர் இருக்க வேண்டும். (2) இஸ்லாமிய ஆட்சி முறை இருக்க வேண்டும். (3) ஆயுதங்கள் போன்றவை சண்டைக்கு அவசியமானது இருக்க வேண்டும். (4) ஏதாவதொரு நாடு தங்களுடையதாக அல்லது அதன் பகுதியாக இருக்க வேண்டும். (5) எதிரிகளுடைய தாக்குதல் முதலாவதாக இருக்க வேண்டும்.

இன்றைய முஸ்லிம்கள் மற்றும் அவர்களுடைய ஆலிம்கள் ஜிஹாதிற்கான கோஷம் எழுப்புகிறார்கள். அப்பாவி மக்களின் உயிர்களைக் கொலை செய்கின்றார்கள். அல்லது கொலை செய்ய வைக்கின்றார்கள். அதனுடன் இந்த ஜிஹாதிற்கு எவ்விதமான தொடர்பும் இல்லை. திருக்குர்ஆன் கூறும் ஜிஹாது என்பது இந்த ஜிஹாது அல்ல. இது திருக்குர்ஆன் கூறும் ஜிஹாதாக இருக்குமென்றால் அல்லாஹ் நிச்சயமாக இவர்களுக்கு வெற்றியை வழங்குவான். மேலும் இவர்கள் வெற்றி பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் வரலாறு சாட்சி பகர்கின்றது. ஒவ்வொரு மைதானத்திலும் இவர்களுக்கு தோல்வி கிடைத்தது. இவர்கள் தோல்வியின் முகத்தைப் பார்த்தவர்களாக இருந்தார்கள்.

ஆகையால் இந்த விஷயத்தை நன்கு புரிய வேண்டியது அவசியமாகும். இஸ்லாம் என்பது அமைதியை போதித்தபோதிலும் முஸ்லிம்களிடம் ஜிஹாதுடைய இந்த தவறான விளக்கம் எங்கிருந்து வந்தது. அது இஸ்லாத்தின் எதிரிகளின் திட்டமாகும். இஸ்லாம் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது. மேலும் அதனை எதிர்கொள்வது சாத்தியமில்லாமல் அகிவிட்டது என்பதை அவர்கள் பார்த்தார்கள்.

மறுபுறம் அவர்கள் அதை அழிப்பதற்காக மேலும் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த விரும்பினார்கள். ஆகையால் அவர்கள் இஸ்லாத்தில் நுழைந்தார்கள். தவறான கொள்கைகளை பரப்ப ஆரம்பித்தார்கள். மேலும் இஸ்லாத்தில் மிக அதிகமாக குழப்பங்களை உருவாக்கினார்கள். மேலும் முஸ்லிம்களிடம் இவற்றை பரப்பி தவறான எண்ணங்களுக்கு அவர்களை ஆளாக்கினார்கள்.

எனவே இந்த தவறான சிந்தனையின் காரணத்தினால் அவற்றை அழிப்பதற்காக அல்லாஹ் இன்று ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், இமாம் மஹ்தியாகவும் ஆக்கியுள்ளான். அன்னார் ஜிஹாதுடைய உண்மையான விளக்கத்தை எடுத்துக்கூறி அந்த தவறான கருத்துக்களை அகற்றினார்கள். மேலும் ஜிஹாதை தற்காலிகமாக ஒத்தி வைத்து அறிவிப்புச் செய்தார்கள். மேலும் இந்த ஒத்தி வைப்பு என்பது அன்னார் தன் புறமிருந்து ஒருபோதும் செய்யவில்லை. மாறாக, பெருமானார் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பிற்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி அவர்களுடைய காலத்தில் மார்க்கப் போர் ஒத்தி வைக்கப்படும். யஸவுல் ஹரப் அதாவது போர் நிறுத்தப்படும்.

(புகாரி கிதாபுல் அன்பிய்யா, பாபு நுஸூல் ஈஸப்னு மர்யம்)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் தம்மை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி என்று வாதம் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப போர் செய்வதற்கான நிபந்தனைகள் இல்லாததன் காரணத்தினால் அது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என அறிவிப்புச் செய்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நண்பர்களே! போருக்கான சிந்தனையை இப்போது விட்டுவிடுங்கள். மார்க்கத்திற்காக இப்போது சண்டையிடுவது மற்றும் போர் செய்வது ஹராமாக்கப்பட்டுள்ளது. யஸவுல் ஹரப் என்ற செய்தியை ஏன் மறந்து விட்டீர்கள்? திறந்து பாருங்கள். என்ன புகாரியில் எழுதப்படவில்லையா?

(ரூஹானி கஸாயின் தொகுதி 17 தொஹ்ஃபா கோல்டுவிய்யா பக்கம் 77,78)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: இந்த விஷயத்தில் எவ்வித ஐயமுமில்லை. அதாவது இந்த காலத்தில் மேலும் இந்த நாட்டில் ஜிஹாதிற்கான நிபந்தனைகள் இல்லை... சமாதானம் சாந்திக்கான காலகட்டத்தில் ஜிஹாது இல்லை.

(ரூஹானி கஸாயின் தொகுதி 17, தொஹ்ஃபா கோல்டுவிய்யா பக்கம் 82 அரபி வாசகத்தின் மொழியாக்கம்)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: அவர்கள் தங்களுடைய செயல்களை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் அவர்களுடன் சண்டையிடுவது நம்பிக்கையாளர்களின் மீது கட்டாயமாகும்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின் ஒளியில் ஜிஹாத் என்பதின் உண்மை விளக்கம்

**முரப்பி ஃபலாஹுத்தீன் கமர், நஸாரத் உலியா, தென் இந்தியா**
**(தமிழில்: முஅல்லிம் M. ஷாஜஹான் சாஹிப்)**

இஸ்லாம் மார்க்கம் ஒரு நிறைவானதும், முழுமையானதுமான மார்க்கமாக இருப்பதைப் போன்று இஸ்லாம் மார்க்கத்தின் ரஸூலும் முழுமையானவர் ஆவார். மேலும் இஸ்லாத்தின் வேதமும் ஒரு முழுமையான வேதம் ஆகும். மேலும் எவ்வாறான முழுமையான வாழ்க்கை நெறிமுறைகளை கொண்டது எனில் அது வாழ்வின் அனைத்து களத்திலும் மனிதனுக்கு வழிகாட்டுகிறது. மனிதனுக்கு அவனின் பிறப்பின் நோக்கத்தை தெரிவிக்கிறது. மேலும் வாழ்க்கையின் தத்துவத்தை கற்பிக்கிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய முன்மாதிரி மற்றும் நபிமொழிகளின் ஒரு அசாதாரணமான கருவூலத்தை முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கியுள்ளார்கள். அது உம்மத்திற்கு மறுமை வரை செயல் வழிகாட்டியாகவும், தாகித்த ஆன்மாக்களுக்கு தாகம் தீர்க்கக் கூடியதாகவும் உள்ளது. இஸ்லாம் மார்க்கம் வாழ்வின் மற்ற துறைகளின் கொள்கை கோட்பாடுகளை எங்கு அறிமுகம் செய்கிறதோ அங்கு இஸ்லாத்தின் எதிரிகள் சார்பாக எப்போதாவது போரின் கட்டாயம் ஏற்படும் எனில் தமது தற்காப்புக்கான சட்டதிட்ட நிலைகளையும் கூறியுள்ளது. மேலும் நமது அன்பிற்குரிய தலைவரும் பின்பற்றத் தகுந்தவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையில் நமக்கு இதன் காட்சிகளை காண முடிகிறது.

திருக்குர்ஆனில் அல்லாஹ் நம்பிக்கையாளர்களைப் பார்த்து கூறுகின்றான்:

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ كَانَ
يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْاٰخِرَ وَذَكَرَ اللّٰهَ كَثِيْرًا

அதாவது அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்புகின்ற மேலும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்கின்ற உங்களுக்கு நிச்சயமாக ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே மிகச் சிறந்த முன்மாதிரி ஆவார்கள். (33:22)

தற்காலத்தில் இஸ்லாத்தின் எதிரிகள் சார்பாக பல்வேறு ஆட்சேபணைகள் மூலம் இஸ்லாம் குறி வைக்கப்படுகிறது. அவற்றில் மிகப்பெரிய ஆட்சேபணை ஜிஹாத் என்பதை எடுத்துக் கொண்டு இஸ்லாம் என்ற அமைதி நிறைந்த மார்க்கத்தை பயங்கரவாதத்துடன் இணைத்து கூறப்படுகிறது. இஸ்லாத்தின் எதிரிகள், உலகிற்கு முன்னால் இஸ்லாம் பயங்கரவாதத்தின் கட்டளைகளை தருகிறது. மேலும் வலுக்கட்டாயமாக மக்களை முஸ்லிம்களாக ஆக்குவதை அனுமதிக்கிறது என்ற விஷயங்களை எடுத்து வைக்கின்றனர். நவூதுபில்லாஹ்.

மேலும் சிலர் தமது கண்மூடித்தனமான வெறுப்பின் காரணமாக ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் வாளின் மூலம் இஸ்லாத்தை பரப்பினார்கள் என்று கூறிவிடுகிறார்கள். நவூதுபில்லாஹ்.

இந்த ஆட்சேபணைகளுக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, இஸ்லாத்தின் எதிரிகள் குருட்டுத்தனமான வெறுப்பு ஆகும். மற்றொன்று முஸ்லிம் ஆலிம்கள் ஜிஹாத் என்பதற்கு தவறான விளக்கங்களை தந்திருப்பதாகும். மாறாக, உண்மை நிலை இதற்கு நேர்மாற்றமானதாகும். இன்றும் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை மற்றும் அவர்களின் அருளுக்குரிய முன்மாதிரியின் மூலம் ஜிஹாத் என்பதை புரிய முயற்சி செய்வோம். அதன் மூலம் ஜிஹாதின் உண்மை விளக்கத்தை தெரிந்து கொள்ள முடியும்.

ஜிஹாத் என்ற வார்த்தை ஜஹத என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். ஜஹத என்பதின் பொருள் கடுமையை பொருத்துக் கொள்வது மற்றும் ஏதேனும் வேலையை செய்வதில் முழுமையாக முயற்சி செய்வது, எந்தக் குறையும் இல்லாதவாறு செய்வது ஆகும். (தாஜுல் உரூஸ்)

எனவே திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளில் ஜிஹாதின் பல வகைகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் மூன்று பெரிய வகைகள் கூறப்பட்டுள்ளன. மேலும் உண்மையில் அதுவே முக்கியமானதாகும். அந்த மூன்று வகைகள் இதுவாகும்.

(1) ஜிஹாதே அக்பர் அதாவது ஆன்மாவின் ஜிஹாத்.

(2) ஜஹாதே கபீர் அதாவது திருக்குர்ஆனின் மூலம் செய்யப்படுகின்ற ஜிஹாத்.

(3) ஜிஹாதே அஸ்கர் அதாவது வாளினால் செய்யப்படுகின்ற ஜிஹாத்.

### முதல் வகை ஜிஹாதே அக்பர் அதாவது ஆன்மாவின் ஜிஹாத்

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் 63 வருட அருளுக்குரிய வாழ்க்கையில் ஜிஹாதே அக்பரின் தொடர் மக்காவின் ஹிரா குகையின் இருள் முதல், ஒளிமிக்க மதீனாவின் அரியணைகளின் வெற்றி வாகைகள் வரை பரவியுள்ளது. அன்னாரின் வாழ்க்கையின் அனைத்து நிலையும் ஜிஹாதே அக்பர் அதாவது ஆன்மாவின் ஜிஹாதில் மூழ்கியே இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீமையிலிருந்து விலகி தூய்மையாக இருப்பது, போதுமென்ற மனம், இறையச்சம், பரிசுத்தம், சகோதரத்துவம், மனிதத்துவம் மற்றும் உண்மையை பேணுதல், நம்பி ஒப்படைத்ததை பேணுதல் போன்றவற்றில் எவ்வாறான உயரிய முன்மாதிரியை நிலைநாட்டினார்கள் என்றால் எதிரிகளும் அன்னாரை உண்மையாளர் நம்பிக்கைக்குரியவர் எனக் கூறாமல் இருக்க முடியவில்லை.

நபிமொழியில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதம் செய்தபோது மக்காவாசிகள் சார்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் மீதும் அநீதி இழைக்கப்பட்டது. அது நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. அண்டை அயலார்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டின் மீது கல் எறிவது, வாசலில் முற்களை போடுவது போன்ற செயல்களை செய்து வந்தனர்.

ஒரு முறை கஅபாவின் அருகில் அன்னார் தொழுது கொண்டிருந்தார்கள். உக்பா பின் அபி முயீத் என்பவன் அன்னாரின் கழுத்தில் துணியைப் போட்டு அன்னாருக்கு மூச்சு திணறும் அளவுக்கு இறுக்கினான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்தவுடன் அவர்கள் ஓடி வந்து அந்த தீயவனின் தீங்கிலிருந்து அன்னாரை விடுவித்தார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். மேலும் சஜ்தாவில் சென்றபோது எவரோ அன்னாரின் மீது ஒட்டக கருப்பையை கொண்டு வந்து வைத்து விட்டார். அன்னாரின் முதுகில் இருந்த அந்த கருப்பையை சிலர்

வந்து அகற்றாதவரை அதன் சுமையின் காரணமாக அன்னாரால் அப்போது தலையை உயர்த்த முடியவில்லை.

(சஹீஹ் புகாரி, கிதாபுஸ் ஸலாத்)

இந்த அனைத்து விதமான அநீதிகள் இழைக்கப்பட்ட போதிலும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னித்தல் மற்றும் கண்டும் காணாமல் விட்டு விடுதல் என்ற ஜிஹாதை செய்தவர்களாக எப்போதும் தீமைக்குப் பதில் நன்மை, துஆ மற்றும் கருணையை வழங்கி வந்தார்கள். ஏனென்றால் இந்த மகத்தான ஜிஹாதிற்காகவே அன்னார் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

அறிவிப்பில் வருகிறது:

عن النبى صلى الله عليه وسلم انه من بعض غزواتة فقال رجعنا من
الجهاد الاصغر الى الجهاد الاكبر قال وهى مجاهدة النفس

அதாவது ஒரு முறை ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒரு போரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள், நாம் அனைவரும் சிறிய ஜிஹாத் அதாவது போரிலிருந்து திரும்பி வருகிறோம். மேலும் பெரிய ஜிஹாதே அக்பர் அதாவது ஆன்மாவின் ஜிஹாதின் பக்கம் செல்கிறோம் என்று கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால், கிதாபுல் ஜிஹாது ஃபில் ஜிஹாதில் அக்பரி மினல் அஃமால், தொகுதி 4, ஹதீஸ் எண் 11260, அத்தராஸில் இஸ்லாமீ ஹலபில் அச்சிடப்பட்டது)

இன்னோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

المجاهد من جاهد نفسه فى طاعة الله

அதாவது முஜாஹிதா என்பது என்னவென்றால் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதில் தமது ஆன்மாவை கஷ்டத்தில் ஆழ்த்துவதாகும். (மிஷ்காத், கிதாபுல் ஈமான்)

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகப்பெரிய ஜிஹாதாக ஆன்மாவின் ஜிஹாதை கூறி இருக்கின்றார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் செயல் முன்மாதிரியும் இதற்கு சான்று பகர்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் தமது இறுதி மூச்சு வரை இந்த ஜிஹாதில் எப்போதும் நிலைத்து நின்றார்கள்.

உதாரணமாக, ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிப்புச் செய்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவில் எழுந்து தொழுவார்கள். எதுவரை என்றால் அன்னாரின் அருளுக்குரிய பாதங்கள் மறத்துவிடும். ஒருமுறை நான் அன்னார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் உங்களின் முன் பின் அனைத்து தவறுகளையும் மன்னித்திருக்கும்போது ஏன் இவ்வளவு சிரமத்தை மேற்கொள்கின்றீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், எனது இறைவனின் இந்த அருள் மற்றும் கருணைக்கு நான் நன்றி செலுத்தும் அடியானாக ஆக வேண்டாமா? என்று கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுத் தஃப்ஸீர், சூரா அல் ஃபதஹ்)

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த ஜிஹாதே அக்பரை மேலும் விளக்கியவர்களாக கூறினார்கள்:

عن انس رضى الله عنه ان البنى صلى الله عليه وسلم
قال جاهد والمشركين باموالكم و انفسكم والسنتكم

அதாவது ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தமது செல்வங்கள், தமது உயிர்கள், தமது நாவுகள் மூலம் இணை வைப்பவர்களுடன் ஜிஹாது செய்யுங்கள்.

(அபூ தாவூது... தொஹதி 1 பக்கம் 339)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஹாதே அக்பருக்கு கீழ் மூன்று வகையான ஜிஹாதை இணைத்து விட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆன்மாவின் ஜிஹாத் எவ்வாறு அவசியமோ அதேபோன்று செல்வத்தின் ஜிஹாதும், நாவின் ஜிஹாதும் கடமையாகும்.

ஆகவே இதன் உதாரணமும் நமக்கு நபிமொழிகளில் கிடைக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் அன்னாரின் ஒரு சைகையில் தமது அனைத்தையும் இறைவனின் வழியில் தியாகம் செய்து விட்டனர்.

நபிமொழியில் வருகிறது; ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் தமது தந்தை அஸ்லம் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்புச் செய்கின்றார்கள். நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதோ ஒரு போரின் தேவைக்காக இறைவழியில் செல்வத்தை செலவு செய்ய எங்களுக்கு கூறினார்கள். அந்த நாட்களில் அதிகமான செல்வம் என்னிடம் இருந்தது. நான் எனது உள்ளத்தில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட நன்மையை அதிகமாக சம்பாதிக்க முடியும் எனில் இன்று அதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது என்று எண்ணினேன். நான் பாதி செல்வத்தை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவைக்கு சென்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமரே! எவ்வளவு செல்வத்தை கொண்டு வந்துள்ளீர்கள். மேலும் மனைவி மக்களுக்காக எவ்வளவு செல்வத்தை விட்டு விட்டு வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான், ஹுஸூர்! நான் பாதி செல்வத்தை கொண்டு வந்துள்ளேன். பாதி செல்வத்தை விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களிடம் இருந்த அனைத்தையும் கொண்டு வந்திருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், அபூபக்ரே! எவ்வளவு செல்வம் கொண்டு வந்துள்ளீர்கள். மேலும் வீட்டினருக்கு எவ்வளவு விட்டு விட்டு வந்துள்ளீர்கள் என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹுஸூர் (ஸல்) அவர்களே! என்னிடமிருந்த அனைத்தையும் கொண்டு வந்துள்ளேன். மேலும் மனைவி மக்களுக்காக அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். அதாவது இறைவன் மீது தவக்கல் இருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதனைக் கேட்ட பிறகு, என்னால் ஹஸ்ரத் அபூபக்ரை ஒருபோதும் முந்த முடியாது என தமது உள்ளத்தில் கூறிக் கொண்டார்கள்.

(திர்மிதி, அப்வாபுல் மனாகிப் ஃபி மனாகிப் அபிபக்ர் வ உமர் (ரலி)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் மார்க்கம் மற்றும் சமுதாய தேவைகளைக் கருத்தில் கொண்டு பொருள் தியாகத்தின் தற்காலிக திட்டங்களை ஒருபுறம் முன் வைத்தார்கள் என்றால், மறுபுறம் ஏழைகள், அநாதைகள், விதவைகள் மற்றும் சமுதாய நலனுக்காக ஸக்காத்தின் வடிவில் செல்வத்தின் ஜிஹாத் செய்வதை நிரந்தரமானதாக நிலைநாட்டினார்கள். மேலும் இந்த செல்வத்தின் ஜிஹாதில் நபித்தோழர்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஹாதின் அர்த்தத்தை மேலும் விளக்கியவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அநீதியாளரான

மன்னனிடம் உண்மை மற்றும் நீதியை எடுத்துக் கூறுவது மிகச்சிறந்த ஜிஹாத் ஆகும். (திர்மிதி, கிதாபுல் ஃபிதன்)

மற்றொரிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மிக மேலான செயல்களில் ஜிஹாது இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். பிறகு பெண்களாகிய நாங்கள் ஜிஹாது ஏன் செய்யக்கூடாது? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் மேலான ஜிஹாத், ஹஜ் மப்ரூர் ஆகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்க்கையின் அனைத்து துறைகளுடன் ஜிஹாதை இணைத்துள்ளார்கள் என்பது இந்த அனைத்து அறிவிப்புகளிலிருந்தும் தெளிவாகிறது.

### இரண்டாவது ஜிஹாதே கபீர் அதாவது திருக்குர்ஆனின் மூலம் செய்யப்படுகின்ற ஜிஹாத்

தற்போது நான் ஜிஹாதின் இரண்டாவது வகையின் பக்கம் வருகின்றேன். அது ஜிஹாதே கபீர் எனக் கூறப்படும். அதாவது திருக்குர்ஆனின் மூலம் செய்யப்படுகின்ற ஜிஹாத். அதாவது திருக்குர்ஆனின் மூலம் முழு உலகிலும் இஸ்லாத்தை தப்லீக் செய்தல் ஆகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَجَاهِدْهُمْ بِهٖ جِهَادًا كَبِيْرًا

அதாவது நீர் திருக்குர்ஆனின் போதனைகளை அன்பு, நேசம், ஆதாரம் மற்றும் சான்றுகள் மூலம் மற்றவர்கள் வரை கொண்டு சேர்ப்பாயாக. **(25:53)**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரவும் பகலும் இந்த ஜிஹாதை நிறைவேற்றுவதிலேயே கழிந்தது என நபிமொழி மற்றும் வரலாற்று அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. இறைவன் அன்னார் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆனை வழங்கினான். அது ஆதாரம் மற்றும் தெளிவான சான்றுகளின் ஒரு கடல் ஆகும். எதிரிகளும் அதன் ஈர்ப்பில் ஈர்க்கப்படாமல் இருக்க முடியவில்லை. இதன் காரணமாகவே மக்கத்து நிராகரிப்பவர்கள் அனைவரும் முஹம்மது (ஸல்) அவர்கள் சூனியக்காரர் ஆவார். எவர்கள் அவரின் பேச்சைக் கேட்பார்களோ அவர்களின் மீது சூனியம் தன் வேலையை காட்டுகிறது என்று பரப்பினார்கள். நவூதுபில்லாஹ்.ஆகவே இஸ்லாத்தை எதிர்க்கின்றவராக இருந்த ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த திருக்குர்ஆனின் ஜிஹாதின் விளைவாகவே இஸ்லாத்தில் நுழைந்தார்கள். மேலும் நம்பிக்கையாளர்களின் இந்த சிறிய ஜமாஅத் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சில வருடத்திற்குள் ஒரு பெரும் கூட்டமாக மாறியது.

### மூன்றாவது ஜிஹாதே அஸ்கர் அதாவது வாளின் மூலமாக செய்யப்படுகின்ற ஜிஹாத்

தற்போது நான் எனது கட்டுரையின் இறுதி மற்றும் மிக முக்கிய பகுதியின் பக்கம் வருகின்றேன். ஜிஹாதின் மூன்றாவது வகை ஜிஹாதே அஸ்கர் ஆகும். அதாவது வாளின் மூலமாக செய்யப்படுகின்ற ஜிஹாத். இதன் மூலம் இஸ்லாத்தின் எதிரிகள், இஸ்லாம் வாளினால் பரவியது என்ற தாக்கத்தை உலகிற்கு முன்னர் எடுத்து வைக்கின்றனர். நவூதுபில்லாஹ்.

மேலும் இன்றைய காலத்தின் பெயர் தாங்கிய முஸ்லிம் ஆலிம்கள் இந்த ஜிஹாதின் தவறான விளக்கங்களின் மூலம் அப்பாவி மக்களின் இரத்தத்தை உரிமையின்றி சிந்தச் செய்கின்றனர். உண்மையில் இவ்வாறான மக்களின் காரணமாகவே இஸ்லாம் என்ற அழகு மற்றும் அமைதி நிறைந்த மார்க்கத்தினை பயங்கரவாதத்துடன் இணைக்கப்படுகிறது.

வாருங்கள்! இன்று நாம் வாளின் மூலமாக செய்யப்படுகின்ற ஜிஹாதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின் ஒளியில் அன்னார் (ஸல்) அவர்கள் வாளின் மூலமாக செய்யப்படுகின்ற ஜிஹாதிற்கு என்ன விளக்கம் தந்துள்ளார்கள். மேலும் எந்த நிலையில் அதன் கட்டளை வழங்கப்பட்டது. மேலும் அவ்வாறான நிலை ஏற்பட்டபோது அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள் என்ன வரையறைகளை கூறினார்கள். மேலும் முஸ்லிம் சமூகத்திற்கு என்ன முன்மாதிரியை காண்பித்தார்கள் என்பதைக் காண்போம்.

இந்த விவகாரம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி ஈடு இணையற்றதாகும் என்பது மிக தெளிவாகும். அவர்கள் தமது முழு வாழ்நாளும் அநீதிக்கு எதிரில் அநீதி இழைக்கும் கட்டளையை வழங்கியதில்லை. அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள் மீதும் மக்கத்து நிராகரிப்பாளர்கள் ஒவ்வொரு நாளும் புத்தம்புது அநீதி மற்றும் துன்பங்களை தருவதில் ஆர்வமாக இருந்து வந்தனர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் எப்போதும் மன்னிக்கும் கட்டளையை வழங்கி வந்தார்கள்.

வரலாற்றில் வருகிறது. மக்கத்து அநீதிகளின் நாட்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சஹாபியான ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களும் மேலும் சில சஹாபாக்களும் பெருமானார் (ஸல்) அவர்களிடம், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே! நாங்கள் முஸ்லிமாக இல்லாதபோது கண்ணியத்திற்கு உரியவர்களாக இருந்தோம். எங்களை எவரும் கண் உயர்த்திப் பார்க்க முடியாது. தற்போது இந்த நிராகரிப்பாளர்கள் எங்களை கோழை மற்றும் பலவீனமானவர்களாக கருதுகிறார்கள். நாங்கள் அவர்களை எதிர்க்கவும், அவர்களுக்கு பாடம் புகட்ட எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டனர்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் எனக்கு மன்னிக்குமாறு கட்டளை வழங்கி இருக்கின்றான். எனவே நான் உங்களுக்கு போர் செய்ய அனுமதி வழங்க முடியாது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அன்னாரின் சஹாபாக்களும் தொடர்ச்சியாக பதிமூன்று ஆண்டுகள் அநீதியாளர்களின் அநீதிக்கு, பொறுமை மற்றும் துஆவின் மூலம் பதில் தந்தார்கள். மேலும் அவர்களின் அநீதியின் காரணமாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வந்தது.

ஆனால் மக்காவில் இஸ்லாத்தின் எதிரிகள் அன்னார் (ஸல்) அவர்களை அங்கும் பின் தொடர்வதை விட்டு விடவில்லை. அன்னாரை அழித்து விட ஒவ்வொரு தருணமும் முயற்சி செய்தனர். ஆகவே பதினைந்து வருடங்கள் தொடர்ச்சியாக அநீதிகளை தாங்கிக் கொண்ட பிறகு அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இப்போது நீங்கள் அவர்களை எதிர்த்துப் போர் செய்யுங்கள். ஏனெனில் இப்போது அநீதி எல்லை கடந்து விட்டது என அனுமதியை வழங்குகிறான். எனவே அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

اُذِنَ لِلَّذِيْنَ يُقٰتَلُوْنَ بِاَنَّهُمْ ظُلِمُوْا ؕ
وَاِنَّ اللّٰهَ عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ ۙ
الَّذِيْنَ اُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ اِلَّاۤ اَنْ يَّقُوْلُوْا رَبُّنَا اللّٰهُ ؕ
وَلَوْلَا دَفْعُ اللّٰهِ النَّاسَ بَعْضَهُمْ بِبَعْضٍ لَّهُدِّمَتْ

صَوَامِعُ وَبِيَعٌ وَّصَلَوٰتٌ وَّ مَسٰجِدُ يُذْكَرُ فِيْهَا اسْمُ اللّٰهِ كَثِيْرًا ۗ وَلَيَنْصُرَنَّ اللّٰهُ مَنْ يَّنْصُرُهٗ ۗ اِنَّ اللّٰهَ لَقَوِيٌّ عَزِيْزٌ

அதாவது எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ அவர்களுக்குப் போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. எவர்கள் இறைவன் அல்லாஹ் என்று சொன்னதற்காக மட்டும் அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும், மேலும் அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடிக கொடுக்க வைக்கவில்லையாயின் அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவு கூரப்படும் ஆலயங்களும், மடங்களும், வணக்கத்தளங்களும், பள்ளிவாயில்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ் அவனுக்கு உதவுபவர்களுக்கு நிச்சயமாக உதவுவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தோன் ஆவான். (22:40,41)

வாளினால் செய்யப்படுகின்ற ஜிஹாதிற்கு எவ்வாறான சந்தர்ப்பத்தில் அனுமதி வழங்கப்பட்டது என்பது இந்த திருக்குர்ஆன் வசனத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஏதேனும் சமூகத்தின் மீது அநீதி எப்போதெல்லாம் உச்சத்தை அடைகிறதோ மேலும் உரிமையில்லாத கொலைகளை செய்தவாறு போர் தொடுக்கப்படுகிறதோ மேலும் அல்லாஹ்வின் பெயர் கூறப்படுவதால் அவர்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றப்படுகிறார்களோ அப்போது தமது தற்காப்புக்காக வாள் ஏந்துவதை அல்லாஹ் அனுமதி வழங்குகிறான்.

மேலும் நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் ஹஸ்ரத் முஸ்தஃபா (ஸல்) அவர்களும் இந்த நிபந்தனையின் அடிப்படையிலேயே தற்காப்பு போர்களை செய்தார்கள். அதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறான முன்மாதிரியை நிலைநாட்டினார்கள் என்றால் அதன் பத்தில் ஒரு பங்கு கூட அரபின் மற்ற போர்களில் காணக்கிடைப்பதில்லை. அரபுகளின் போர்களில் சிறு சிறு விவகாரங்களின் காரணமாக பல வருடங்களாக எந்த மக்கள் போர் செய்தனரோ அவர்கள் போரின்போது கொல்லப்பட்டவர்களை சிதைப்பது மேலும் பெண்கள், குழந்தைகள், முதியவர்களை கொல்வதற்கும் தயங்க மாட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்மாதிரி காணக் கிடைக்காதது ஆகும்.

ஹதீஸில் வருகிறது: முஸ்லிம்களே! அல்லாஹ்வின் பெயருடன் வெளியேருங்கள். மேலும் மார்க்கத்தின் பாதுகாப்புக்கான எண்ணத்தில் போர் செய்யுங்கள். ஆனால் எச்சரிக்கையாகவும், போர்ச் செல்வத்தில் கையாடல் செய்யாமல் இருங்கள். எந்த சமூகத்துடனும் ஏமாற்றத்துடன் நடக்க வேண்டாம். மேலும் எதிரிகளில் மரணித்தவர்களின் உடலை சிதைக்க வேண்டாம். மேலும் குழந்தைகள், பெண்கள், மார்க்க வழிபாட்டுத் தளத்தின் மக்களை கொலை செய்ய வேண்டாம். மேலும் மிக வயதானவர்களை கொலை செய்ய வேண்டாம். மேலும் நாட்டில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துங்கள். மேலும் மக்களுடன் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். ஏனெனில் கருணை காட்டுபவர்களை இறைவன் நேசிக்கின்றான். (சஹீஹ் முஸ்லிம்)

இன்று பெயர் தாங்கிய முல்லாக்கள் ஜிஹாது என கோஷமிட்டு அப்பாவி மக்களை கொலை செய்கின்றார்கள். மேலும் கொலை செய்ய விரும்புகின்றார்கள். இந்த வரம்பு மீறல் கண்டிக்கத்தக்கதும், வெறுக்கத்தக்கதும் ஆகும். இதற்கு இஸ்லாத்துடனும், இஸ்லாத்தின் ஸ்தாபகருடனும், திருக்குர்ஆனுடனும் எவ்வித தொடர்பும் இல்லை.

நமது அன்பிற்குரிய நபி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இன்றிலிருந்து 1400 வருடங்களுக் முன்னரே கூறியுள்ளதாவது, முஸ்லிம்கள் மீது எப்படிப்பட்ட ஒரு காலம் வரும் என்றால் அப்போது அவர்களிடம் செயல் மற்றும் கொள்கையில் சீர்குலைவு ஏற்பட்டு விடும். கடுமையான கருத்து வேறுபாடு ஏற்படும். இவ்வாறான குழப்பம் நிறைந்த காலத்தில் முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்காக இறுதிக்காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களை இறைவன் அனுப்பி முஸ்லிம்களின் செயல் சீர்திருத்தத்துடன் கொள்கை சீர்திருத்தத்தையும் செய்வான். மேலும் அவர்களின் வருகையுடன் போர் தடை செய்யப்படும். அவர் போரை தடை செய்வார் என்று கூறப்பட்டுள்ளது.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் அன்பிய்யா, பாபு நுஸூல் ஈஸப்னு மர்யம்)

உண்மையில் இமாம் மஹ்தியின் காலத்தில் ஜிஹாதின் நிபந்தனைகள் முழுமையாகாத காரணத்தாலும் மேலும் அந்த காலம் தெளிவான ஆதாரம் மற்றும் ஜிஹாத் பேனாவின் மூலம் நடைபெறும் காலமாக இருக்கும் என்பது இந்த முன்னறிவிப்புகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இந்த காலத்தில் இவ்வாறான தவறான கொள்கைகளை சீர் செய்வதற்கு அல்லாஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை இமாம் மஹ்தியாக அனுப்பி இருக்கின்றான்.

அன்னார் இவ்வாறு அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள்: நண்பர்களே! ஜிஹாதின் சிந்தனையை இப்போது விட்டு விடுங்கள். இப்போது மார்க்கத்தில் போர் சண்டை விலக்கப்பட்டதாகும். நீங்கள் ஏன் யளவுல் ஹர்ப் என்ற செய்தியை மறந்து விட்டீர்கள். இது புஹாரியின் இல்லையா என்பதை நீங்கள் திறந்து பாருங்கள். ஈருலகத் தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கூறி விட்டார்கள். அதாவது ஈஸா மஸீஹ் போர்களை தடை செய்வார். இந்தக் கட்டளையைக் கேட்ட பின்னரும் எவர் போருக்கு செல்வாரோ அவர் நிராகரிப்பாளர்களிடமிருந்து கடுமையான இழிவைப் பெறுவார். இந்த முன்னறிவிப்பு ஓர் அடையாளம் என்ற ரீதியில் ஆகும். சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்களுக்கு இது போதுமானதாகும்.

(தொஹ்ஃபா கோல்டவிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 77)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இன்று முதல் மனிதன் வாளால் செய்து வந்த ஜிஹாது இறைவனின் கட்டளைக்கேற்ப முடிவுற்றது. இப்போது இதன் பிறகும் எந்த மனிதர் நிராகரிப்பாளர்கள் மீது வாள் ஏந்துவாரோ மேலும் தன் பெயரை காஸி என்று வைத்துக் கொள்வாரோ அவர் இன்றிலிருந்து பதிமூன்று நூற்றாண்டுகள் முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றாகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரும்போது வாளினால் செய்யப்படும் அனைத்துப் போர்களும் முற்றுப் பெற்று விடும் என்பதை மறுப்பவர் ஆவார். ஆகவே இப்போது எனது வருகைக்கு பின் வாளினால் எந்தப் போரும் செய்யப்படாது. என் புறமிருந்து அமைதி மற்றும் சமாதானத்தின் வெள்ளைக் கொடி ஏற்றப்பட்டுள்ளது.

(குத்பா இல்ஹாமிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 16 பக்கம் 28)

இறைவன் நம் அனைவருக்கும் ஜிஹாதின் உண்மையான விளக்கத்தை புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

......☆......☆......☆......

# ஜிஹாத் பற்றிய தவறான கண்ணோட்டத்தின் தீய விளைவுகளும் அதற்கான தீர்வும்

முஹம்மது ஷரீஃப் கவ்ஸர், ஆசிரியர், ஜாமிஆ அஹ்மதிய்யா, காதியான்
(தமிழில்: முபல்லிக் N. ஜியாவுல் ஹக் சாஹிப்)

சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு மதத்திற்கான அடிக்கல் நாட்டினார்கள். அதன் பெயரை அல்லாஹ் திருக்குர்ஆனில் இஸ்லாம் என்றும் அதில் இணையக் கூடியவர்களின் பெயரை முஸ்லிம் என்றும் வைத்துள்ளான்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

اِنَّ الدِّيْنَ عِنْدَ اللّٰهِ الْاِسْلَامُ

அதாவது நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் மார்க்கம் இஸ்லாமே ஆகும். (3:20)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

هُوَ سَمّٰىكُمُ الْمُسْلِمِيْنَ

அதாவது நிச்சயமாக அல்லாஹ் உங்களின் பெயரை முஸ்லிம் என வைத்துள்ளான். (22:79)

## இஸ்லாம் என்பதன் பொருள்

இஸ்லாம் என்பது ஓர் அரபிச் சொல் ஆகும். அது சலிம என்ற மூலச் சொல்லிலிருந்து வந்துள்ளது. சலிம என்றால் சாந்தி, அமைதி என்று பொருள். இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் اَلسَّلَامُ مِنَ الْاِسْلَامِ அதாவது சாந்தி, அமைதி போன்றவை இஸ்லாத்திலிருந்து வந்துள்ளது எனக் கூறியுள்ளார்கள்.

மேலும் அல்லாஹ் அனைத்து மக்களிடமும் இவ்வாறு கூறுகின்றான்:

وَاللّٰهُ يَدْعُوْٓا اِلٰى دَارِ السَّلٰمِ

அதாவது அல்லாஹ் அமைதியின் வீட்டின்பால் அழைக்கின்றான். (10:26)

இஸ்லாத்தின் மற்றொரு பொருள் என்னவென்றால், அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு முழுமையான முறையில் கட்டுப்படுவது ஆகும்.

இஸ்லாம் எப்படிப்பட்ட மார்க்கம் என்றால் அது தன்னை ஏற்கக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமிற்கும் அனைத்து மனிதர் மீதும் அன்பு, நேசம் மற்றும் நன்மையுடன் நடப்பதற்கான போதனையை வழங்குகிறது. அது அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராக, எந்தக் கொள்கையை பின்பற்றுபவராக, எந்த இடத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரியே! ஒரு முஸ்லிம் ஒரு நாளில் ஐவேளை தொழுகையை தொழுவார். ஒவ்வொரு தொழுகையின் முடிவிலும் வலதுபுறம் திரும்பி 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூறுவார். பிறகு இடதுபுறம் திரும்பி இதே வார்த்தைகளைக் கூறுவார்.

இதன் பொருள், எனது வலதுபுறம் உள்ளவர்களே (அவர் எவராக இருந்தாலும் சரி) உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும உண்டாவதாக என்று கூறுவார். பிறகு இதேபோன்ற துஆவை இடதுபுறம் உள்ளவர்களுக்காகவும் வேண்டுவார். யாரையாவது சந்தித்தால் அவரிடம் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூறுவார். அதாவது உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும் கருணையும் உண்டாவதாக எனக் கூறுவார்.

ஆக இஸ்லாம் மற்றும் முஸ்லிம் என்ற பெயரே இந்த மார்க்கம் தன்னைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு தங்களால் முடிந்த வரை உலக மக்களுக்காக சாந்தி சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்ற போதனையை வழங்குகிறது என்ற உண்மையை பிரகடனப்படுத்தக் கூடியதாகும்.

## இஸ்லாத்தின் தோற்றுனர் அனைத்துலகத்தின் அருட்கொடை

அல்லாஹ் இஸ்லாத்தின் தோற்றுனர் சய்யிதுனா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை அனைத்துலகத்தின் அருட்கொடையாக அனுப்பியுள்ளான்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ

அதாவது நாம் உம்மை அனைத்துலகத்திற்கும் அருட்கொடையாக அனுப்பியுள்ளோம். (21:108)

இந்த வசனத்தில் முஸ்லிம்களுக்கு மட்டும் என்றோ, அரபியர்களுக்கு மட்டும் என்றோ அல்லாஹ் கூறவில்லை. மாறாக அன்னார் அனைத்துலகத்திற்கும் அருட்கொடை ஆவார்கள். ஆகையால் தன்னை முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடன் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமும் அன்னாரது முன்மாதிரியின்படி செயல்பட்டவாறு இறை படைப்பினங்களுக்கு தொல்லையாக இருப்பதிலிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டும்.

## ஒவ்வொரு மனிதனிடமும் ஏன் அன்பு கொள்ள வேண்டும்?

இங்கு ஒவ்வொரு மனிதனிடமும் அன்பு மற்றும் அனுதாபம் ஏன் கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. இதற்கான பதில் பெருமானார் (ஸல்) அவர்களின் நபிமொழியில் கிடைக்கிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اَلْخَلْقُ عِيَالُ اللّٰهِ فَاَحَبُّ الْخَلْقِ اِلَى اللّٰهِ مَنْ اَحْسَنَ اِلٰى عِيَالِهٖ

அதாவது அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பம் ஆவார்கள். ஆக படைப்பினங்களில் அவனுக்கு பிடித்தவர் யார் என்றால் அவனுடைய குடும்பத்துடன் சிறந்த முறையில் நடந்து கொள்பவரே ஆவார்.

(மிஷ்காத், கிதாபுல் ஆதாப்)

திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், உலகிலுள்ள பல்வேறு மதத்தைச் சார்ந்த மக்களும், பல்வேறு பகுதிகளில் வாழக் கூடியவர்களும் அல்லாஹ்வின் குடும்பம் ஆவார்கள். எவ்வாறு மனிதன் தனது குடும்ப நபர்களுடன் அன்பு செலுத்துவானோ அதேபோன்று அவன் உலகின் அனைத்து மனிதர்களையும் தனது குடும்பமாக கருதி அவர்களுடன் அன்பு மற்றும் நன்னடத்தையுடன் நடக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலமாகவே நாம் அல்லாஹ்வின் அன்பிற்குரியவராகவும், நேசத்திற்குரியவராகவும் ஆக முடியும். இவையின்றி ஒருபோதும் சாத்தியமில்லை. ஏனென்றால் எந்த அல்லாஹ்வின் மீது ஒவ்வொரு முஸ்லிமும் நம்பிக்கை வைத்துள்ளாரோ அவன் ரப்புல் ஆலமீன் ஆவான். 'அஸ்ஸலாம்' ஆவான். அதாவது சாந்தியை ஏற்படுத்தக் கூடியவன் ஆவான். ஆகையால் இந்த பண்புகளைக் கொண்ட இறைவனுடன் தொடர்பு

கொண்டுள்ளதன் எதிர்பார்ப்பு மற்றும் கடமை என்னவென்றால் அவர் தனது சுற்றுவட்டாரத்தில், தெருவில் தனது ஆற்றல் மற்றும் சக்திக்கேற்ப ருபூபிய்யத் மற்றும அஸ்ஸலாம் என்ற பண்பின் உண்மையான வெளிப்பாடாக வேண்டும். இல்லையென்றால் இறைவனுடன் தொடர்பு கொண்டதற்கான உரிமையை இழந்து நிற்பார்.

**ரஹ்மத்துல்லில் ஆலமீன் ஏன் போர் செய்தார்கள்?**

இதற்கான விடை என்னவென்றால், சய்யிதுனா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய வயது நாற்பதாக இருந்தபோது அல்லாஹ்வின் புறமிருந்து அன்னார் மீது வஹீ இறங்கத் தொடங்கியது.

இதன் அடிப்படையில் அன்னார் மக்காவாசிகளிடம் இவ்வாறு கூறினார்கள்: அதாவது என்னை அல்லாஹ் நபியாக அனுப்பியுள்ளான். ஆகையால் நீங்கள் ஓர் இறைவனை வணங்குங்கள். பாவம், தீமை மற்றும் அநீதி நிறைந்த வாழ்க்கையிலிருந்து பாவமன்னிப்புக் கோருங்கள்.

அரபியில் لِلْمَطَرِ مُحِبٌّ وَكَارِهٌ என்ற ஓர் உதாரணம் உள்ளது. அதாவது மழையை விரும்பக்கூடியவர்களும் உள்ளனர்; வெறுக்கக் கூடியவர்களும் உள்ளனர்.

உலகியல் மழையைப் போன்று ஆன்மீக மழையையும் சிலர் விரும்ப ஆரம்பித்தனர். சிலர் வெறுக்க ஆரம்பித்தனர். விரும்பக்கூடியவர்கள் மற்றும் ஏற்றவர்கள் மென்மை, நல்லொழுக்கம் மற்றும் அன்பின் வழியினை பின்பற்றினர். வெறுத்த பகைவர்கள் கொடுமை, வெறுப்பு மற்றும் தீமையிழைக்கும் வழியினை பின்பற்றத் தொடங்கினர். ஒவ்வொரு நாளும் இந்த பிளவு அதிகரித்துக் கொண்டே சென்றது. மக்காவின் பகைவர்கள் நாம் முஹம்மது (ஸல்) அவர்களை ஏற்பவர்களை தனது ஆற்றல் மற்றும் நிர்பந்தத்தைக் கொண்டு முழுவதுமாக அழித்து விடலாம் எனக் கருதினர்.

மறுபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாம் அன்பு மற்றும் ஆதாரங்களைக் கொண்டு உங்களுக்கு இஸ்லாத்தின் உண்மையை உணர்த்திக் கொண்டே செல்வோம் எனக் கூறி வந்தார்கள்.

மேலும் நாம் உங்களை இஸ்லாத்தை ஏற்க வேண்டும் என நிர்பந்தப்படுத்த மாட்டோம். ஏனென்றால் திருக்குர்ஆனில் அல்லாஹ் لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ அதாவது மார்க்கத்தின் விஷயத்தில் எவ்வித நிர்பந்தமும் இல்லை (2:257) என்று கூறியுள்ளான். மேலும் இவ்வாறும் அல்லாஹ் கூறியுள்ளான்:

وَقُلِ الْحَقُّ مِنْ رَّبِّكُمْ ۫ فَمَنْ شَآءَ
فَلْيُؤْمِنْ وَّ مَنْ شَآءَ فَلْيَكْفُرْ

அதாவது உமது இறைவனிடமிருந்து வந்துள்ளதே உண்மையாகும். யார் விரும்புகிறாரோ அவர் ஏற்கட்டும். யார் நிராகரிக்கின்றார்களோ அவர் நிராகரிக்கட்டும். (18:30)

ஒரு நாள் அல்ல; ஒரு மாதம் அல்ல; ஒரு வருடம் அல்ல. மாறாக, தொடர்ச்சியாக பதிமூன்று ஆண்டுகள் சய்யிதுனா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களும் அன்னாரது தோழர்களும் பகைவர்களின் கைகளினால் துன்பம், தொல்லை மற்றும் கஷ்டத்தினை அனுபவித்து வந்தனர். அதில் சிலர் ஷஹீதும் ஆகினர். அதற்கு பதிலாக பொருமானார் (ஸல்) அவர்கள் தீவிரவாதத்தை பின்பற்றவில்லை. கற்களை எறிந்தவர்களுக்கு எதிராக கற்களை எறியவில்லை. ஏசிப்பேசுபவர்களுக்கு எதிராக ஏசிப்பேசவில்லை. மேலும் இந்த மென்மை ஏதோ கோழை தன்மையின் காரணத்தினால் அல்ல. மாறாக, மனிதநேயம் மற்றும் மனிதனுடன் அன்பின் காரணமாகவே ஆகும். மேலும் அவர்களின் இந்த துயரம் அறியாமையின் காரணமாகும் என்ற எண்ணத்தினால் ஆகும்.

இல்லையென்றால் மக்காவின் தலைவர்களில் ஒருவராக இருந்த ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் முஸ்லிமாக ஆன நேரத்தில் நாங்கள் கண்ணியமிக்கவர்களாகவும், அதிகாரமிக்கவர்களாகவும் இருந்தோம். எங்களை ஏறெடுத்து பார்ப்பதற்குக் கூட யாருக்கும் தைரியம் வந்தது கிடையாது. ஆனால் முஸ்லிமான பிறகு இஸ்லாத்தின் பகைவர்கள் எங்களை பலவீனமானவர்களாக கருதுகின்றனர். ஆகையால் எங்களுக்கு அவர்களை எதிர்ப்பதற்கு அனுமதி வழங்குங்கள் என்று கேட்டார். அதற்கு மனிதயினத்துடன் அளவற்ற அன்பு கொள்ளக்கூடிய ரஹ்மத்துல்லில் ஆலமீன் அவர்கள் اِنِّيْ اُمِرْتُ بِالْعَفْوِ அதாவது எனக்கு மன்னித்து, விட்டுக் கொடுத்து வாழ்வதற்கான கட்டளை இடப்பட்டுள்ளது. ஆகையால் நான் உங்களுக்கு ஒருபோதும் எதிர்ப்பதற்கு அனுமதி வழங்க முடியாது எனக் கூறினார்கள். (நிஸாயி)

சுருக்கம் என்னவென்றால், பதிமூன்று ஆண்டு காலம் மக்காவின் எதிரிகளால் தொடர்ச்சியாக அநீதியை தாங்கிக் கொண்ட பின்னர் பெருமானார் (ஸல்) அவர்கள், இவர்கள் இஸ்லாத்தை புரிவதுமில்லை. மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை சுதந்திரமாக வாழவிடுவதுமில்லை. ஆகையால் தற்போது இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. ஒன்று, அவர்களுடன் சண்டையிடுவது அல்லது நாட்டைத் துறந்து ஹிஜ்ரத் செய்வது என்று கருதினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கருணையின் உணர்வின்கீழ் எந்த மனிதரது இரத்தத்தையும் சிந்தச் செய்வதை விரும்பவில்லை. இந்த வகையில் அன்னார் ஸஃபர் மாதம் 28 ஆம் தேதி ஹிஜ்ரி 1ல் அதாவது 11 செப்டம்பர் 622 ஆம் ஆண்டு மக்காவிலிருந்து முன்னூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மதீனாவிற்கு இடம்பெயர்ந்து சென்றார்கள்.

முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களும், முஸ்லிம்களும் ஹிஜ்ரத் செய்து சென்ற பின்னர் பகைவர்கள் அவர்களைப் பின்தொடராமல் இருந்திருக்க வேண்டும். ஆனால் வருத்தம் என்னவென்றால், அவ்வாறு செய்யாமல் அவர்கள் மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களை அழிப்பதற்கு ஆயத்தம் செய்யத் தொடங்கினர். சிரியாவின் பக்கம் தனது வாணிப குழுவை அனுப்பி வைத்தனர். அதன் மூலமாக கிடைக்கும் வருமானத்தை வைத்து போருக்குத் தேவையான பொருட்களை வாங்க முயன்றனர்.

இந்த வகையில் மக்காவாசிகள் எல்லா விதமான ஆயுதங்களையும் வைத்திருந்த ஆயிரம் போர் வீரர்களைக் கொண்ட படையை மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக அனுப்பி வைத்தனர். மக்காவின் நிராகரிப்பாளர்கள் மதீனாவின் மீது திடீரென்று தாக்குதல் நடத்தி முஸ்லிம்களை முற்றிலுமாக அழித்து விட வேண்டும். முஸ்லிம் என்று கூறக்கூடிய ஓர் ஆண், ஒரு சிறு குழந்தை கூட இருக்கக்கூடாது என கருதினர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

(மக்காவில்) அவர்கள் மிகவும் கடுமையான முறையில் பெரும்பாலான முஸ்லிம்களை அழித்தனர். பதிமூன்று ஆண்டுகாலம் கொண்ட ஒரு நீண்ட காலம் அவர்கள்

இவ்வாறுதான் செய்து வந்தனர். கருணையின்றி இறைவனின் விசுவாசமிக்க அடியார்கள் மனித இனத்தின் கவுரவம் அந்த தீய விலங்குகளின் வாளினால் துண்டு துண்டாக்கப்பட்டனர். அனாதை குழந்தைகள் மற்றும் ஏழை பெண்கள் தெருக்களில் பலியிடப்பட்டனர். இதற்கு இறைவன் புறமிருந்து தீமைக்கெதிரில் எவ்விதமான சண்டையும் இடக்கூடாது என கடுமையாக வலியுறுத்தப்பட்டு இருந்தது. இந்த வகையில் அந்த பரிசுத்தவான்கள் அவ்வாறே செய்தனர். அவர்களது குருதியினால் தெருக்கள் சிவப்பாகின. ஆனால் அவர்கள் எதிர்க்கவில்லை. குர்பானிகள் போன்று அறுக்கப்பட்டார்கள். ஆனால் எவ்வித கூச்சலுமிடவில்லை.

வானம் மற்றும் பூமியின் எண்ணற்ற சலாமை கொண்ட இறைவனது புனிதமிகு நபி (ஸல்) அவர்கள் மீது மீண்டும் மீண்டும் கற்களை எறிந்து இரத்தத்தினால் நனைத்தார்கள். ஆனால் உண்மை மற்றும் பொறுமையின் சிகரம் அந்த அனைத்து வித துன்புறுத்தல்களையும் உளப்பூர்வமாகவும், அன்புடனும் பொறுத்துக் கொண்டார்கள். இவர்களது பொறுமையான பணிவான செயல்பாடுகளினால் பகைவர்களின் எதிர்ப்பு ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அவர்கள் இந்த புனிதமிகு ஜமாஅத்தை தமது ஒரு வேட்டையாக கருதினர்.

அப்போது இறைவன் பூமியில் அநீதி மற்றும் கருணையின்மை எல்லை மீறிவிடக்கூடாது எனக் கருதி தனது அநீதியிழைக்கப்பட்ட அடியார்களை நினைவில் கொண்டவாறு அவனது கோபம் தீயவர்கள் மீது விழுந்தது. அவன் தனது புனித வேதம் திருக்குர்ஆன் மூலம் தனது அடியார்களுக்கு உங்களுடன் நடைபெறும் அனைத்தையும் நான் பார்த்து வருகிறேன். இன்று நான் உங்களுக்கு போரிடுவதற்கான அனுமதி வழங்குகிறேன். நான் வல்லமை பெற்ற இறைவன் ஆவேன். அநீதியாளர்களுக்கு தண்டனை அளிக்காமல் விடமாட்டேன் என்று கூறினான். இந்த கட்டளையைத்தான் மற்றொரு வார்த்தையின் 'ஜிஹாது' என்று பெயர் வைக்கப்பட்டது. இந்த கட்டளையின் சரியான வரிகள் தற்போதுவரை திருக்குர்ஆனில் உள்ளது. (22:40,41)

أُذِنَ لِلَّذِيْنَ يُقٰتَلُوْنَ بِأَنَّهُمْ ظُلِمُوْا ؕ

وَإِنَّ اللّٰهَ عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ ۨ

الَّذِيْنَ أُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ

(கவர்மண்ட் அங்கரேசி ஆவ்ர் ஜிஹாது, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 41)

அதாவது எவர்கள் மீது அநீதியிழைக்கப்பட்டு வந்ததோ அவர்களுக்கு (வாளை கொண்டு போர் செய்ய) அனுமதியளிக்கப்படுகிறது. நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவி புரிவதற்கு முழுமையான ஆற்றல் கொண்டுள்ளான். அதாவது அவர்கள் அல்லாஹ்தான் எங்களது இறைவன் என்று கூறியதால் தனது வீடுகளிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள்.

வாசிப்பவர்களே! ஜிஹாத் என்ற சொல் மிகவும் விரிவான பொருளை உள்ளடக்கியது. ஜிஹாது என்பது நிராகரிப்பவர்களுடன் சண்டையிடுவதற்கு மட்டும் கூறப்படுவதில்லை. மாறாக, ஒரு பணிக்கு தனது முழு ஆற்றல் மற்றும் சக்தியை செலவு செய்வது, பிறகு அது தொடர்பாக முழுமையாக முயற்சிப்பதற்கு ஜிஹாத் என்று கூறப்படும்.

அரபியில் இதன் மூலச்சொல் ஜஹத ஆகும். ஜிஹாத் ஃபில் அம்ரி அதாவது அவன் வேளை செய்வதற்கு முயற்சி செய்தான் என்பதாகும்.

ஜிஹாத் இஸ்லாத்தில் மிகவும் முக்கியமான ஒரு கடமையாகும். ஆரம்பத்திலிருந்து துவங்கி மறுமைவரை நிலைபெறக்கூடியதாகும். திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளிலிருநது பல்வேறு ஜிஹாதின் பல்வேறு பிரிவுகள் இருப்பது நிரூபணமாகிறது.

உதாரணமாக, ஜிஹாதே கபீர், ஜிஹாதே அக்பர், ஜிஹாதே அஸ்கர், ஜிஹாத் பில் உலூம் போன்றவை.

ஜிஹாத் அஸ்கரின் மற்றொரு பெயர் ஜிஹாத் பிஸ்ஸைஃப் அதாவது வாளினால் போர் செய்வதாகும். இது ஒரு முஸ்லிமல்லாத சக்தி அல்லது நாடு, இஸ்லாம் மார்க்கத்தை அல்லது இஸ்லாமிய போதனைகளை பின்பற்றுவதை முற்றிலுமாக அழிக்க போருக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்களை ரப்புனல்லாஹ் (எங்கள் இறைவன் அல்லாஹ்) என்று கூறியதன் காரணத்தால் வீடுகளிலிருந்து வெளியேற்றுகின்றனர்.

### வாள் கொண்டு போரிடுவது தொடர்பாக முஸ்லிம்கள் சுயம் உருவாக்கிய கொள்கை

முஸ்லிம்கள் ஜிஹாத் பற்றி முற்றிலும் தவறாக புரிந்து வைத்திருப்பது மிகவும் வருத்தமளிக்கிறது. முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பெயரில் இரத்தம் சிந்துவதை, குழப்பம் விளைவிப்பதை, ஏமாற்றுவதை, கொள்ளையடிப்பதை, சண்டையிடுவதை ஜிஹாது என்று கூறுகிறார்கள். பேராசை, மன விருப்பம், சுயலாபம் போன்றவற்றிற்காக இஸ்லாத்தின் எதிரிகளின் தலையை வெட்டுவதற்கு ஜிஹாத் என்று பெயரிடுகிறார்கள். காஸி என்று அழைக்கப்பட வேண்டும் என்பதற்காக துப்பாக்கி போன்றவற்றின் மூலம் முஸ்லிம் அல்லாதவர்கள் மீது சுடுவதற்கு ஜிஹாது என்று பெயரிடுகிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! ஜிஹாது பற்றி மவ்லவிகள் என்றழைக்கப்படும் இஸ்லாமிய ஆலிம்கள் புரிந்து வைத்திருப்பது மேலும் மக்கள் முன்பு இந்த விஷயத்தை எடுத்து வைக்கும் விதம் முற்றிலும் சரியானது அல்ல. இதன் விளைவு அவர்கள் தனது உணர்ச்சிகரமான அறிவுரைகளால் மனித பண்புகளை கொண்ட மிருகத்தின் பண்புகளைக் கொண்டவர்களாகவும், மனித இனத்தின் அனைத்து வித தூய்மையான சிறப்பம்சங்களையும் அகற்றக்கூடியதாக இருக்குமே தவிர வேறெதுவும் இருக்காது. மேலும் நடந்ததும் அதுவே.

நான் உறுதியாக நம்புகின்றேன். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் சண்டையிடுவதற்கான அவசியம் ஏன் ஏற்பட்டது? என்ற இரகசியம் தெரியாமல் எந்த அளவு இப்படிப்பட்ட அநீதியாக கொலை செய்வது அறிவீனர்கள் மற்றும் சுயநலம் கொண்ட மனிதர்களால் நடைபெறுகிறதோ அந்த அனைத்து பாவங்களும், மறைவாக இப்படிப்பட்ட விஷயங்களை கற்றுக் கொடுக்கும் அந்த மவ்லவிகளின் தலையில்தான் விழும். இதன் விளைவு மிகவும் கொடூரமான சண்டைகளாகத்தான் இருக்கும்.

(ரிஸாலா கவர்மண்ட் அங்கரேஸ், ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 7)

உண்மையில் இந்த ஜிஹாதுடைய பிரச்சனை தொடர்பாக அவர்களின் உள்ளத்தில் இருப்பது தவறாகும். மேலும் அதன் முதல் முயற்சி மனித அனுதாபத்தை அழிப்பதாகும.

(ரிஸாலா கவர்மண்ட அங்கரேஸ், ரூஹானி கஸாஸின் தொகுதி 17 பக்கம் 8)

மவ்லவிகள் ஜிஹாதின் சரியான உண்மைத்தன்மையை மறைத்து அடிதடி, கொலை செய்வதற்கான திட்டம் போன்றவற்றை

மக்களுக்குக் கற்றுக் கொடுத்து அதற்கு ஜிஹாத் எனப் பெயர் வைத்துள்ளனர்.

(ரிஸாலா கவர்மண்ட அங்கரேஸ், ரூஹானி கஸாஸின் தொகுதி 17 பக்கம் 9)

இன்றைய காலத்தில் இந்த பெரும்பாலான அறிவீனர்கள் பின்பற்றக்கூடிய ஜிஹாதின் வழிமுறை இஸ்லாத்தின் ஜிஹாத் அல்ல. மாறாக, நஃப்ஸே அம்மாராவின் எழுச்சியில் பேராசையின் காரணமாக முஸ்லிம்களிடம் பரவியுள்ள அனுமதிக்கப்படாத செயல்கள் ஆகும்.

(ரிஸாலா கவர்மண்ட அங்கரேஸ், ரூஹானி கஸாஸின் தொகுதி 17 பக்கம் 9)

### சுயமே உருவாக்கிக் கொண்ட ஜிஹாதின் கொள்கைகளினால் ஏற்பட்ட தீய விளைவுகள்

(1) கிறிஸ்தவர்கள் தமது மதத்தை அன்பின் மார்க்கம் என்று அறிமுகம் செய்கிறார்கள். மேலும் உலக மக்களும் கிறிஸ்தவ மதத்தை அன்பு, மேன்மை மற்றும் சகிப்புத்தன்மை கொண்ட மார்க்கமாக நம்ப ஆரம்பித்து விட்டனர். இதே போன்று சனாத்தன் தரத்தினர் (இந்து மதம்) தனது மதத்தை அகிம்சை வாதிகள் என அறிமுகம் செய்கின்றனர். மேலும் இந்து மதம் அகிம்ஸையின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாக அறிவிப்புச் செய்கின்றனர். இந்த மதத்தில் மனிதர்களை கொலை செய்வது ஒருபுறம் இருக்கட்டும். தற்கொலை செய்வதே தடையாகும்.

இதேபோன்று உலகின் ஏனைய மதத்தின் வழிகாட்டிகள் தனது மதத்தை உயர்வானதாக நிரூபித்துள்ளனர். மேலும் அவர்களது போதனையில் மென்மை, அன்பு போன்றவைகள் மிகைத்துள்ளதாக கூறுகின்றனர். ஆனால் அவர்களது உண்மையான போதனை, அவர்களது நூல்கள் என்ன போதனைகளை வழங்குகிறது என்பது வேறு விஷயமாகும். ஆனால் அவர்களது மதத்தை பின்பற்றக் கூடியவர்கள் அவர்களது மதம், அன்பு மற்றும் மென்மைக்கான போதனையை வழங்குவதாக உலகை ஏற்றுக் கொள்ளச் செய்துள்ளனர்.

இதற்கு எதிரில் முடிவைக் குறித்து அறியாத முஸ்லிம்களின் பெயர்தாங்கி மவ்லவிகள் இஸ்லாமை உலகிற்கு எந்த வகையில் அறிமுகப்படுத்தியுள்ளனர் என்றால் அதன் மூலம் மவ்லவிகள் எடுத்து வைக்கும் இஸ்லாம் தீவிரவாதம் மற்றும் சண்டையிடுவதனைத்தவிர வேறெந்த போதனையும் வழங்கவில்லை என்பது உறுதியாகி விட்டது. மவ்லவிகளின் தாக்கத்தினால் முஸ்லிம்கள் இந்த இஸ்லாமை சய்யிதுனா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடன் தொடர்புபடுத்துகின்றனர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த இஸ்லாத்திற்கும் இதற்கும் கடுகளவும் தொடர்பு இல்லை.

(2) இன்றைய காலத்தில் முஸ்லிம்களின் ஒவ்வொரு நாட்டிலும் இரண்டு பிரிவுகள் உருவாகியிருப்பது வருத்தம் அளிக்கிறது. ஒன்று, அரசின் பிரிவு. மற்றொன்று, அரசாங்கத்திற்கு எதிரான பிரிவு. மேலும் இந்த இரண்டு பிரிவுகளும் இஸ்லாத்தின் உலகளாவிய எதிரியின் ஆயுதமாக ஆகியுள்ளன. வெளிப்புற ஆற்றல்களே இருவருக்கும் மிகவும் அபாயகரமான ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது.ஆனால் இஸ்லாத்திற்கும் அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. மாறாக, வெளிப்புற ஆற்றல்களின் சதித்திட்டமே ஆகும். இதன் மூலம் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனை கறைபடியச் செய்யப்படுகிறது. மேலும் இஸ்லாமை ஒரு தீவிரவாதம் மற்றும் அச்சுறுத்தும் மதமாக பிரகடனம் செய்யப்படுகிறது.

உதாரணமாக, சில நாட்களுக்கு முன்பு ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவின் படை நுழைந்து ஆப்கானிஸ்தானை அபகரித்துக் கொண்டது. ரஷ்யாவின் எதிர் சக்தியான அமெரிக்காவிற்கு இது விருப்பமானதாக இருக்கவில்லை. அவர்கள் பஷாவர் மற்றும் அதன் அருகாமையிலுள்ள முஸ்லிம் ஜிஹாதிகளுக்கு பயிற்சியளித்து ஜிஹாதிற்காக ஆப்கானிஸ்தான் அனுப்பி வைத்தது. அவர்களுக்கு சிறந்த முறையில் உதவியும் செய்தது. கடைசியில் சில வருட முயற்சிக்குப் பிறகு ரஷ்யா ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. பிறகு அமெரிக்கா அதை தன்வசம் ஆக்கிக் கொண்டது. மேலும் தற்போதுவரை ஆப்கானிஸ்தானில் முஸ்லிம்களின் இரத்தத்துடன் ஹோலி விளையாடப்படுகிறது. மேலும் இவை அனைத்தும் ஜிஹாதின் பெயரில் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக செய்யப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் மட்டுமல்ல; ஈராக், சிரியா, பாலஸ்தீனம், லிபியா, அல்ஜஸாயிர், தியூனஸ், ஏமன் போன்ற நாடுகளிலும் பெயர்தாங்கிய ஜிஹாதி எனது பெயர்தாங்கிய ஜிஹாதின் மூலம் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர். மறுபுறம் தனது நாட்டை அழித்து நாசமாக்குகின்றனர். ஈராக்கில் பாக்தாதி என்று அறியப்படக்கூடிய பெயர்தாங்கிய கலீஃபாவை உலகளாவிய ஆற்றல் நிறுத்தியது. அவர் மூலமாக இஸ்லாத்தின் பெயரில் சண்டைகள் செய்ய வைக்கப்பட்டனர். மேலும் கிலாஃபத் என்ற புனித பெயருக்கு அவப்பெயரை ஏற்படுத்தினர். பிறகு இந்த தீய திட்டம் வெற்றி பெறவில்லை என்றதும் அவரை அழித்து விட்டதாக கூறப்படுகிறது.

இவையனைத்தும் இந்த காரணத்தினால் உண்டானதாகும். அதாவது முஸ்லிம்களின் மவ்லவிகள் ஜிஹாது என்பதற்கு தவறான பொருளைக் கொடுத்து மக்களை எந்த அளவுக்கு மூளைச்சலவை செய்துள்ளனர் என்றால் அவர்களால் ஜிஹாதின் சரியான பொருளை புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் சண்டையிடுவதனை மட்டுமே ஜிஹாது என்று கருதுகின்றனர்.

### சுயமே உருவாக்கிக் கொண்ட ஜிஹாதின் கொள்கைகள் மற்றும் அதன் தீய விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்கான வழி

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இன்றைய காலத்தில் நெறி நீதி தீர்ப்பவராக அனுப்பியுள்ளான். அன்னார் முஸ்லிம்கள் சீர்கெடுத்து வைத்திருந்த அந்த கொள்கைகளை சீர் செய்தார்கள். அவற்றில் ஒன்று ஜிஹாது ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜிஹாதின் சரியான பொருளை மக்களுக்கு புரிய வைத்தார்கள்.

மேலும் தற்போதைய காலத்தில் எந்த நாடும், எந்த சக்தியும் முஸ்லிம்களை இஸ்லாமிய போதனைகளின்படி செயல்படுவதிலிருந்து வாளைக் கொண்டு தடுக்கவில்லை. மேலும் இஸ்லாமை பின்பற்றி நடப்பதினால் அவர்களை அவர்களது வீடுகளிலிருந்து வெளியேற்றவில்லை. மேலும் அவர்கள் மீது மக்கத்து காஃபிர்கள் முஸ்லிம்கள் மீது அநீதி இழைத்ததுபோன்று நடக்கவில்லை. ஆகையால் ஜிஹாது அஸ்கர் அதாவது வாளைக் கொண்டு செய்யும் ஜிஹாதிற்கு அனுமதியில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இன்றிலிருந்து வாளினால் செய்யப்படும் மனித ஜிஹாது இறைவனது கட்டளையுடன் நிறுத்தப்படுகிறது. இதற்குப் பிறகு எவர் நிராகரிப்பாளர்கள் மீது வாளை எடுப்பாரோ அவர் போரை விரும்பியவராவார். அவர் பெருமானார் (ஸல்)

அவர்களுக்கு கட்டுப்படாதவர் ஆவார். அன்னார் (ஸல்) அவர்கள் ஆயிரத்தி முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரும்போது வாளினால் செய்யப்படும் அனைத்துப் போர்களும் முடிவு பெற்று விடும் என்று கூறினார்கள்.

ஆக, தற்போது எனது வருகைக்குப் பிறகு வாளினால் செய்யும் ஜிஹாத் எதுவும் கிடையாது. நம்புறமிருந்து அனுமதி மற்றும் சமாதானத்திற்கான வெள்ளை கொடி உயர்த்தப்பட்டுள்ளது. இறைவன்பால் அழைப்பதற்கு ஒரு வழி மட்டுமல்ல. எந்த வழியினை அறிவீனர்கள் ஆட்சேபனை செய்கின்றனரோ அதே வழியினை மீண்டும் பின்பற்றுவதனை இறைஞானம் விரும்புவதில்லை. இதற்குரிய உதாரணம் என்னவென்றால், எந்த அடையாளம் முன்பே மறுக்கப்பட்டுள்ளதோ அது நமது நபிமார்களுக்கெல்லாம் தலைவராகிய (ஸல்) அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகையால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தனது படைக்கு தடுக்கப்பட்ட அந்த இடத்தை விட்டு பின்னால் நிற்பதற்கு கட்டளையிடுகிறார்.

(குத்பா இல்ஹாமிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 16 பக்கம் 28)

தொஹ்ஃபா கோல்டுவிய்யாவில் அன்னார் கூறுகின்றார்கள்:

இன்றைய காலத்தில் இந்த நாட்டில் ஜிஹாது செய்வதற்கான காரணம் ஒன்றுமில்லை. ஆகையால் முஸ்லிம்கள் மீது மார்க்கத்திற்காக போரிடுவது, மேலும் இஸ்லாமிய போதனையை மறுப்பவரை கொலை செய்வது தடுக்கப்பட்டதாகும். ஏனென்றால் இறைவன் அமைதி மற்றும் சாந்தியின் காலகட்டத்தில் ஜிஹாத் தடுக்கப்பட்டுள்ளது என தெளிவாக கூறியுள்ளான்.

(தொஹ்ஃபா கோல்டுவிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 82)

அன்னார் ஹகீக்கத்துல் மஹ்தி என்ற நூலில் கூறுகின்றார்கள்: இந்த சுன்னத் (வாளினால் செய்யும் ஜிஹாத்) காரணமில்லாததால் ஒத்திப் போடப்பட்டுள்ளது. அவர்கள் நம்முடன் எவ்வாறு போட்டியிடுகின்றார்களோ அதுபோன்றே நாம் காஃபிர்களுடன் போட்டியிட ஆயத்தமாக இருக்க கட்டளையிடப்பட்டுள்ளோம். அவர்கள் நம்மீது தாக்குதல் நடத்துவதற்காக ஆயுதம் ஏந்தாதவரை நாம் அவர்கள் மீது ஆயுதம் ஏந்தக்கூடாது.

ஆக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முஸ்லிம்களை ஜிஹாதிலிருந்து தடுக்கவில்லை. மாறாக, இஸ்லாத்தின் எதிரிகளை ஆயுதங்களைக் கொண்டு சண்டையிடுவதற்கும் அவர்களை கொலை செய்வதற்கும் தடை விதித்துள்ளார்கள். ஏனென்றால் அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை அழிப்பதற்காக வாளைக் கொண்டு தாக்குதல் நடத்தவில்லை. ஆக முஸ்லிம்களுக்கும் தேவையில்லாமல் இஸ்லாத்தின் பெயரில் வாளை எடுக்க அனுமதியில்லை. ஆர்வத்தின் காரணமாக காஃபிர்களின் தலையை வெட்டுபவர் காஸி (போர் விரும்பி) என்றழைக்கப்படுவார்.

### முஸ்லிம்களிடம் வாளைக் கொண்டு போரிட வாளும் இல்லை; கேடயமும் இல்லை

சய்யிதுனா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اِنَّمَا الْاِمَامُ جُنَّةٌ يُقَاتِلُ مِنْ وَّرَائِهٖ وَيُتَّقٰى بِهٖ

அதாவது (அல்லாஹ்வின் புறமிருந்து) நியமிக்கப்படக்கூடிய இமாம் கேடயம் ஆவார். அவர் பின்னால் நின்று சண்டையிட வேண்டும். அவர் மூலமாகவே காப்பாற்றப்படுவீர்கள். இவ்வாறு சண்டையிடக் கூடியவர்கள் தொடர்பாக அவர்களுக்கு முழுமையாக உதவி செய்வதற்கு அல்லாஹ் ஆற்றல் பெற்றவன் என்ற வாக்குறுதியும் உள்ளது. இன்றைய காலத்தில் முஸ்லிம் என்று அழைக்கப்படக்கூடிய தலைவர்களை கொண்ட நாடுகள் அல்லது தன்னைத்தானே இஸ்லாத்தின் பக்கம் இணைக்கக்கூடிய தீவிரவாத அமைப்புகள் எல்லா வகையிலும் தோல்வியை சந்திக்கின்றது.

இதற்காக தெளிவான விளக்கம் என்னவென்றால், மேலே கூறப்பட்டுள்ள வசனத்தின் ஒளியில் அவர்களுக்கு இறையுதவி கிடைக்கவில்லை என்பதாகும். மேலும் எந்த அரசியல் நோக்கத்திற்காக போர்கள் செய்யப்படுகிறதோ அதற்கு அரசியல் பெயரைக் கொண்டு சண்டையிட வேண்டும். இஸ்லாம் மார்க்கத்துடன் அதற்கு எவ்வித தொடர்புமில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தற்போது உங்களுக்கு வாளின் ஆற்றல் ஏன் இல்லை? இதற்கான இரகசியம் என்னவென்றால், தற்போது உங்களுக்கு அதன் தேவையில்லை என்பதே ஆகும். தற்போது மற்ற சமுதாயங்கள் எவ்வித நிர்பந்தப்படுத்துவதில்லை. தொழுகை, நோன்பை விட்டு தடுப்பதும் இல்லை. உங்களில் எவருக்கு மார்க்கம் மற்றும் நேர்மையின் மீது அன்புள்ளதோ அவருடைய கடமை என்னவென்றால், அவர் அதை உளப்பூர்வமாக செய்ய வேண்டும். மக்களுக்கு இது மஸீஹின் காலம் என்று எடுத்துக் கூறுங்கள். தற்போது சண்டையிடுவதும் போர் செய்வதும் தடுக்கப்பட்டதாகும்.

(அடிக்குறிப்பு தொஹ்ஃபா போல்டுவிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 77)

### ஒவ்வொரு காலத்திற்கும் உள்ள ஜிஹாத் வெவ்வேறானதாகும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தற்போது வாளினால் செய்யும் ஜிஹாதிற்கான காலமில்லை. மாறாக, துஆ மற்றும் திருக்குர்ஆனின் வசனங்களைக் கொண்டு ஜிஹாத் செய்வதற்காக காலம் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 457)

இக்காலத்தில் பயான் செய்வதற்கான ஆற்றலைத்தவிர வேறெந்த ஆற்றலும் இல்லை. ஆதாரங்களையும் அடையாளங்களையும் எடுத்து வைப்பதில் உள்ள தாக்கம் வில்லில் ஒருபோதுமில்லை.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 463)

அல்லாஹ் திருக்குர்ஆனில் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மூலமாக ஒவ்வொரு முஸ்லிமிற்கும் எந்த ஜிஹாதிற்கான கட்டளையிட்டானோ அது ஜிஹாதே கபீர் (அதாவது மிகப்பெரிய ஜிஹாத்) ஆகும்.

وَجَاهِدْهُمْ بِهٖ جِهَادًا كَبِيْرًا

அதாவது நீர் காஃபிர்களின் கூற்றை கேட்காதீர். மேலும் இதன் மூலம் (திருக்குர்ஆன்) மூலம் அவர்களுடன் ஜிஹாது கபீர் செய்வீராக. (25:53)

மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

يَاَيُّهَا الرَّسُوْلُ بَلِّغْ مَآ اُنْزِلَ اِلَيْكَ مِنْ رَّبِّكَ

அதாவது நபியே! உமது இறைவன் புறமிருந்து உம்மீது இறக்கப்பட்ட கலாமை மக்கள் வரை எட்ட வைப்பீராக. (5:68)

இன்றைய காலத்தில் முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ள, மேலும் செய்வதற்கு மிகவும் அவசியமான ஜிஹாதானது இஸ்லாத்தை தப்லீக் செய்தும் தஃவத்தே இலல்லாஹ் (அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதும்) ஆகும். இந்த

ஜிஹாதே கபீரானது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் எல்லா காலகட்டத்திலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், முஸ்லிம்களின் பெயர்தாங்கிய மல்லவிகள் மற்றும் வழிகாட்டிகள் இந்த ஜிஹாதின் பக்கம் கவனம் செலுத்துவதேயில்லை. மாறாக, இன்றைய காலத்திற்கு தேவையே இல்லாத ஒரு ஜிஹாதை செய்வதற்கு அவர்கள் கிளம்பி விட்டனர். இதன் காரணமாகவே எல்லா இடங்களிலும் இன்றிலிருந்து ஏறக்குறைய 102 வருடங்களுக்கு முன்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவுரை கூறியிருந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நண்பர்களே! தற்போது ஜிஹாதிற்கான எண்ணத்தை விட்டு விடுங்கள். தற்போது மார்க்கத்தில் ஜிஹாத் மற்றும் சண்டை தடுக்கப்பட்டுள்ளது. இந்த கட்டளையை கேட்ட பிறகும் சண்டையிட செல்பவர் காஃபிர்களிடம் மிகவும் அவமானம் அடைவார்.

(அடிக்குறிப்பு தொஹ்ஃபா கோல்டுவிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 77)

உலகில் எங்கெல்லாம் முஸ்லிம்கள் இஸ்லாம் மார்க்கத்தின் பெயரில் வாளைக் கொண்டு ஜிஹாத் செய்துள்ளார்களோ அங்கெல்லாம் மிகவும் மோசமான தோல்வியை சந்திக்க வேண்டியது வந்துள்ளது என்பதற்கு கடந்த 102 வருடங்கள் சாட்சியாகும். இன்றைய காலத்தில் இஸ்லாத்தின் தப்லீக் மற்றும் திருக்குர்ஆனைக் கொண்டு ஜிஹாத் செய்ய வேண்டிய அவசியமுள்ளது.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் தலைமையின்கீழ் ஜிஹாது கபீரின் கடமையை நிறைவேற்றி வருகின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

......☆......☆......☆......

(22 வது பக்கத்தின் தொடர்ச்சி...)

முஸ்லிம்களை அழிக்க வேண்டும். அவர்களுடைய மார்க்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதாக இருந்தது. அப்படிப்பட்ட அநீதி இழைக்கின்ற எதிரிகளுடன் தற்காப்பிற்காக போர் செய்வது சட்டத்தின் அடிப்படையில் ஜிஹாத் ஆகும்.

**இஸ்லாமிய போர்கள் மூன்று வகைப்படும்**

(1) தற்பாதுகாப்பின் அடிப்படையில் செய்யப்படுகின்ற போர். அதாவது தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக செய்யப்படுகின்ற போர்.

(2) தண்டனையின் அடிப்படையில். அதாவது இரத்தத்திற்கு பதில் இரத்தம்.

(3) சுதந்திரத்தை நிலைபெறச் செய்வதற்காக செய்யப்படுகின்ற போர். அதாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிம்களாக ஆகிவிடுகின்றவர்களை கொலை செய்து வந்த எதிரிகளின் ஆற்றலை தகர்ப்பதற்காக செய்யப்படுகின்ற போர்.

இந்த மூன்று நிலையில் மட்டும்தான் ஜிஹாத் என்ற சொற்பொருளை கருத்தில் கொண்டு ஜிஹாதை வழக்கத்தில் நடைமுறைப்படுத்த முடியும்.

ஆனால் இஸ்லாம் ஒருவரை நிர்ப்பந்தப்படுத்தியோ அல்லது கொலை மிரட்டல் மூலமாகவோ மார்க்கத்தில் நுழையச் செய்தல் மேலும் நாட்டைக் கைப்பற்றுதல், அரசுக்கு எதிராக தாக்குதல் தொடுத்தல் ஆகிய இவ்விஷயங்களை இஸ்லாம் வன்மையாக எதிர்க்கின்றது.

......☆......☆......☆......

(26 வது பக்கத்தின் தொடர்ச்சி...)

(ரூஹானி கஸாயின் தோகுதி 8 நூருல் ஹக் முதல் பகுதி பக்கம் 62)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜிஹாத் ஃபிஸ் ஸைஃபை நிறுத்தி வைத்தார்கள். ஆனால் அதற்கான நிபந்தனைகள் நிறைவேறினால் அப்போது அது நடைபெறும். ஆனால் தெளிவான சொற்களில் அன்னார் கூறியுள்ளார்கள். அதாவது நாம் இஸ்லாமிய சமூகத்திற்கு இந்தக் கட்டளையைப் பிறப்பிக்க வேண்டும். அதாவது எதிரிகள் நமக்கு எதிராக எவ்வாறு தயாராக இருந்தார்களோ அவ்வாறே நாமும் அவர்களுக்கு எதிராக ஆயத்தமாகுவோம்.

(ரூஹானி கஸாயின் தொகுதி 14, ஹகீக்கத்துல் வஹீ பக்கம் 456)

ஆகையால் வாசிக்கும் அன்பர்களே! திருக்குர்ஆனை ஆராய்ந்து பார்க்கும்போது தெரியவரும் விஷயம் என்னவென்றால், முதலாவது தரத்தைக் கொண்ட ஜிஹாத், மனிதன் தன்னுடைய ஆன்மாவிற்கு எதிராக செய்வதாகும். பாவங்களிலிருந்தும், தீய செயல்களிலிருந்தும் தம்மைக் காத்துக் கொள்வதாகும். மேலும் நல்ல பணிகளின் காரணத்தினால் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்து தம்மை தூய்மை மற்றும் நற்செயல்கள் செய்யும் மனிதனாக ஆக்குவதாகும்.

அதற்குப் பிறகு இரண்டாவது தரத்தைக் கொண்ட ஜிஹாத், திருக்குர்ஆனுடைய போதனைகளை மற்றவர்கள் வரை கொண்டு சேர்ப்பதும், அன்பு, பரிவு மற்றும் ஆதாரங்களின் மூலமாக இந்த மார்க்கத்தின் போதனைகளை மக்களுக்கு தெளிவுபடுத்துவதாகும்.

மூன்றாவது தரத்தைக் கொண்ட ஜிஹாத், ஜிஹாதே அஸ்கர் என்று அழைக்கப்படுகிறது. இது எப்போது நடைபெறும் என்றால் அநீதி இழைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் எங்கள் இறைவன் அல்லாஹ் என்று கூறிய காரணத்தினால் அவர்கள் தடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போது அவர்களுக்கு ஜிஹாத் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்வதற்காக வந்து விடுகின்றான்.

மேலும் நான்காவது தரத்தைக் கொண்ட ஜிஹாத், ஜிஹாத் ஃபில் மால் ஆகும். அதாவது அல்லாஹ்வின் வழியில் மார்க்கத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பொருளாதார தியாகம் செய்வதாகும். மேலும் அதில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.

ஆகையால் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் இதிலிருந்து ஒருபோதும் பின்தங்குவதில்லை. முன்னேறிக் கொண்டே செல்கிறது. எந்த அளவுக்கு என்றால் மற்றவர்கள் அதனுடைய தூசி அளவு கூட வரமுடியவில்லை.

ஆக நஃப்ஸை சீர்திருத்துவதற்கான ஜிஹாதாக இருந்ததலும் சரி அல்லது திருக்குர்ஆனின் பக்கம் அழைப்பதாக இருந்தாலும் சரி அல்லது பொருளாதார ஜிஹாதாக இருந்தாலும் சரி. அனைத்து களத்திலும் எதிரிகளுடைய முயற்சிகள் இருந்த பிறகும் அஹ்மதிய்யா ஜமாஅத் வெற்றிகளின் கொடியை நிலைநாட்டிக் கொண்டே செல்கின்றது.

மேலும் எதிரிகள் தாமாகவே இந்த விஷயத்தை ஒப்புக் கொள்கின்றார்கள். ஆகையால் அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஜிஹாதின் ஒவ்வொரு களத்திலும் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே இருப்பானாக. ஆமீன்

......☆......☆......☆......